பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 22 வியாழக்கிழமை (09-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:315

# திருமலையில் புலிகளின் 13 முகாம்களா?

# புலனாய்வு செய்தியாளர்களின் புரளி இது!

## ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் என்றது போலத்தான் இதுவும் நாடாளுமன்ற விவாதத்தில் பிரதேச எம்.பி. சம்பந்தன் சாட்டை

கொழும்பு, ஒக்ரோபர்9

**திருகோணமலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் 13 முகாம்கள் இருக்கின்றன என்ற செய்திகள் புலனாய்வுச் செய்தியாளர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் எழுப்பிய புரளியாகும். புலனாய்வுச் செய்தியாளர்கள் கிளப்பிவிடும் இப்புரளியை சமாதானப் பேச்சைச் சீர்குலைக்கும் சக்திகள் பூதாகரமாக்கிப் பிரசாரம் செய்கின்றன. ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன என்று கூறியதைப் போன்றதே இந்த முகாம்கள் பற்றிய செய்தியுமாகும்.**

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் பங்குபற்றி உரையாற்றிய திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.இரா.சம்பந்தன் இவ்வாறு சாட்டையடி கொடுத்தார்.

எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையின் பேரில் நடத்தப்பட்ட இந்த விவாதத்தை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

திருகோணமலைத் துறைமுகத்தைத் தாக்கக்கூடிய தொலைவில் புலிகளின் 13 முகாம்களை அமைத்துள்ளனர் என்றும் முழு நாட்டினதும் பாதுகாப்புக்கு இப்போது அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

அதையடுத்து இரா.சம்பந்தன் எம்.பி. உரையாற்றினார். உரையில் அவர் மேலும் கூறியதாவது:-

குரங்குபாஞ்சான் முகாம் குறித்த உண்மை நிலையை தென்பகுதி மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக 22 கொழும்புச் செய்தியாளர்கள் இன்று குரங்குபாஞ்சான் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 13 புலிகளின் முகாம்கள் இருப்பதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை என்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். சம்பூரில் புலிகளின் பொறுப்பாளர் பதுமன், திலக் ஆகியோர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதை உறுதிப்படுத்தியுள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## மஹாவித்துவான் வீரமணி ஐயர் மாரடைப்பால் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம்,ஒக்.9

ஈழத்தின் புகழ்பூத்த மூத்த கலைஞர்களில் ஒருவரான இணுவிலைச் சேர்ந்த மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது-72.

இணுவிலில் உள்ள இல்லத்தில் தங்கியிருந்த சமயம் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவரது உயிர் பிரிந்தது.

இறுதிச்சடங்குகள் நேற்றைய தினமே நடைபெற்று அவரது புகழுடல் நேற்று மாலை 5 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. முன்னதாக அவரது இல்லத்தில் நடைபெற்ற இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் -

சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், வணிகவியல் (16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் போராட்டத்தின் மீது தீவிர பற்றுக்கொண்டிருந்தவர்

### கலை பண்பாட்டுக் கழகம் இரங்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.9

வீரமணி ஐயர் அவர்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டம் மீதும் எமது தலைமையின் மீதும் மிகுந்த மதிப்பையும், பற்றையும் கொண்டிருந்தவர். விடுதலைக் கனவோடும், கலைத்தாகத்தோடும் இறுதிவரை உழைத்தவர் அவர்.

'இசைமாமணி' மஹாவித்துவான் வீரமணி ஐயரின் மறைவை ஒட்டி விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம் விடுத்த இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த செய்தி வருமாறு:-

'இசைமாமணி' என்றும் 'இயல் இசை வாரிதி' என்றும் தமிழுலகம் போற்றிப் புகழ்ந்த பெருங்கலை விற்பன்னரான பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களின் மறைவு எல்லோருக்குமே பேரிழப்பாகும். அரை நூற்றாண்டு காலமாகத் தன்னுடைய புலமையாலும், இசைத் திறனாலும், ஆடற்கலையை அளித்த சிறப்பாலும் எங்கள் மண்ணைப் பெருமைப்படுத்தியவர் வீரமணி ஐயர் அவர்கள். ஈழத்திலும, தமிழகத்திலும் இசை உலகுடன் பரிச்சயமுடைய எல்லோருக்குமே பிரம்மஸ்ரீ வீர (16ஆம் பக்கம் பார்க்க)

## அயர்லாந்துக் கூட்டத்தில் சொல்ஹெய்ம்

டப்ளின்,ஒக்.9

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தாங்கள் சமர்ப்பிக்கவிருக்கும் திட்டத்தை இறுதிசெய்யும் நோக்கில் அயர்லாந்தில் விடுதலைப் புலிகள் நடத்திவரும் ஆய்வு கூட்டத்தில் நோர்வே அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மும் நேற்று பங்குபற்றினார்.

அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் நல்லிணக்கத்துக்கான கிளின்கர்ீ நிலையத்தில் நேற்று மூன்றாவது நாளாக இந்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் சட்ட மற்றும் அரசமைப்பு நிபுணர்களும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் அங்கு ஒன்றுகூடி இடைக்கால நிர்வாகம் தொடர்பான புலிகளின் திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டம் நாளை (வெள்ளிக்கிழமை வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## குரங்குபாஞ்சான் பிரதேச முகாம் விவகாரத்தை ஊதிப் பெருப்பித்தவை தென்பகுதி ஊடகங்களே!

### ஊடகவியலாளர்கள் மத்தியில் திலக் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.9

தென்பகுதி ஊடகங்களின் பிழையான போக்குக் காரணமாகவே குரங்குபாஞ்சான் முகாம் விடயம் சர்வதேச விவகாரமாக மாறியதாக புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்தார்.

குரங்குபாஞ்சான்குள முன்றிலில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளின் அழைப்பின்பேரில் அங்கு சென்று சர்ச்சைக்குரிய முகாமை 30 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பார்வையிட்டனர்.

அதன் பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும்போது திலக் மேலும் தெரிவித்ததாவது:-

குரங்குபாஞ்சான் முகாம் குறித்து தென்பகுதியில் பரப்பப்பட்டுவரும் பொய்ப் பிரசாரங்களிலிருந்து மக்களை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறவே ஊடகவியலாளர்கள் இங்கு அழைத்துவரப்பட்டனர். கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இந்த முகாம் குறித்து தகவல்கள் வெளியானபோதும் உடனே ஊடகவியலாளர்களை அங்கு அழைத்து வராததற்குக் காரணம் இந்த முகாம் குறித்து புலிகளும், அரசும் சமர்ப்பித்த ஆவணங்கள் நோர்வேயின் பரிசீலனையில் இருந்தமையே. அந்த வேளையில், நிலைமையை மேலும் சிக்கலானதாக மாற்றாது இருப்பதற்காகவே ஊடகவியலாளர்கள் இங்கு (16ஆம் பக்கம் பார்க்க)



வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக வரைவு பற்றி அயர்லாந்தில் கலந்துரையாடல் நடத்திவரும் புலிகளின் பிரதிநிதிகள் சட்ட நிபுணர்களுடன் எடுத்துக்கொண்ட படம் இது. *(மற்றொரு படம் 2ஆம் பக்கத்தில்)*

## இராணுவ பஸ் மோதி பெண் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இராணுவத்தினர் பயன்படுத்தும் பஸ் வண்டி ஒன்று நேற்று முன்னிரவு பாதசாரி ஒருவரை மோதியது.

வீதியால் நடந்து வந்து கொண்டிருந்த யேசுராணி ராம்குமார் (வயது 27) என்ற பெண்ணே பஸ்ஸினால் மோதுண்டு காயமடைந்தார். இவர் (16ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் மூவருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ். நீராவியடிப் பகுதியில் இருந்து கடந்த 6ஆம் திகதி இரவு வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் மரணம் தொடர்பாக பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட நபர்கள் மூவரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் (16ஆம் பக்கம் பார்க்க)

## புல்டோசர் கண்ணியில் சிக்கியது!

கிளிநொச்சி,ஒக்.9

ஆனையிறவு இயக்கச்சிப் பகுதியல் நேற்று துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த புல்டோசர் வாகனம் ஒன்று நிலக்கண்ணியில் சிக்கிச் சேதமடைந்தது.

ஆனையிறவைச் சூழவுள்ள பகுதிகளில் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் வெடிபொருள்கள் (16ஆம் பக்கம் பார்க்க)



வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவிருக்கும் வரைவை இறுதி செய்வதற்கான கலந்துரையாடல் அயர்லாந்தில் நடைபெற்றுள்ளது. அதில் கலந்துகொண்ட குழுவினர் ஒன்றாக எடுத்துக்கொண்ட படம் இது.

# வீரமணி ஐயரின் மறைவு கலையுலகுக்கு பேரிழப்பு!

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஒக்.9

மகாவித்துவான் வீரமணி ஐயரின் மறைவு கலையுலகுக்கு பேரிழப்பு.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்.

நேற்று அதிகாலை காலமான மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நேற்று மாலை இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அஞ்சலி நிகழ்வில் துணைவேந்தர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்துறைக் கலைஞனாகவும் கவிஞனாகவும் வாழ்ந்து தான் வாழ்ந்த மண்ணிற்கும் மக்களுக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பிரிவிற்கும் அளப்பரிய சேவை ஆற்றியவர் மகா வித்துவான் வீரமணி ஐயர். அவரது பெயரால் கலைக்கூடம் ஒன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட வேண்டும். இதுவே நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி ஆகும்.

கவிதைகள், ஊஞ்சற் பாட்டுக்கள், அஞ்சலிகள் எதுவாக இருந்தாலும் உடனடியாக தாமதமின்றி இயற்றி வழங்கும் ஓர் ஆசுகவியாக இவர் திகழ்ந்தார்.

அவர் ஒரு சிறந்த கலைஞராகவும் நாடக நடிகராகவும் நாடக ஆசிரியராகவும் சங்கீத வித்துவானாகவும் விளங்கி, யாழ். பல்கலைக்கழகத்தின் நடன, சங்கீதத் துறைகளுக்கு அளப்பரிய சேவை ஆற்றியிருந்தார்.

இவரது நினைவால் நிறுவப்படும் கலைக்கூடத்தில் அவருடைய ஆக்கங்கள் பேணப்படுவதுடன், அச்சுப்பதிப்பிக்காத அவரது நூல்களும் கவிதைகளும் நாடகங்களும் அச்சுப்பதிப்பிக்கப்படவேண்டும்.

யாழ்பல்கலைக்கழகம் அவருக்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் அவருக்கு செய்யவேண்டிய பல கடப்பாடுகள் இருப்பது உணரப்படுகிறது. பல்கலைக்கழகம் தனது கடமையை செய்யும் என்று நம்புகிறேன் - என்றார் அவர்.

பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை என்பவற்றின் பீடாதிபதிகள், அதிபர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, கலைப்பீடாதிபதி கோபாலகிருஷ்ணஐயர், பேராசிரியர் சண்முகதாஸ், நுண்கலைப் பீட விரிவுரையாளர் சபா ஜெயராசா உட்பட பலர் அஞ்சலி உரையாற்றினர். (எ-88)

# வீரமணி ஐயரின் பணியை தமிழ் உலகம் மறக்காது

## இந்துமதகுரு பீடாதிபதி அனுதாபம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

முத்தமிழிலும் அறிவுபெற்று தமிழ் உலகமே சிந்திக்கும் அளவுக்கு சேவையாற்றியவர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர்.

- இவ்வாறு மகாவித்துவான் வீரமணிஐயரின் மறைவையொட்டி சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மஹேஸ்வர சிவாச்சாரியார் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தி வருமாறு :-

கவிமாமணி, மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயரின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அந்தண குலத்தில் உதித்து முத்தமிழிலும் அறிவுபெற்று பல ஆக்கங்களையும் இயல், இசை, நாடகங்களையும் வெளிப்படுத்தி தமிழ் உலகமே சிந்திக்கும் அளவுக்கு அவர் ஆற்றிய சேவை என்றும் மக்கள் நினைவில் இருக்கும்.

கம்பீர நடை, கனரம்மியமான வசனம், முகத்தில் புன் சிரிப்பு, அன்பும் பரிவும் கொண்ட அவரது உள்ளம், எல்லோரையும் கவரும் பார்வை இவற்றையெல்லாம் மக்களுக்கு அளித்தது மட்டுமல்லாமல் என்றும் நினைவில் நிற்கக்கூடிய - இவர் இயற்றிய - 'கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா' என்ற இராக மாளிகைக் கீர்த்தனையும் மக்கள் மனதில் என்றும் நிற்கும் - என்று அதில் உள்ளது.

(எ-8)

# மயூரணி கொலை வழக்கில் அவரது உறவினர்கள் இரகசிய வாக்குமூலம்

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் மயூரணியின் உறவினர்கள் இருவர் நீதிமன்றத்தில் இரகசிய வாக்குமூலம் கொடுத்திருக்கின்றனர்.

எஸ்.எஸ். கொலனியில் வசிக்கும் மயூரணியின் உறவினர் மோகன்தாஸும் அவரது உறவினரான முருகானந்தமுமே இரகசிய வாக்குமூலமளித்திருக்கின்றனர்.

இலங்கை மாணவி மயூரணி, மதுரை அம்பிகா கல்லூரி உரிமையாளர் சோலைமலைத்தேவர் வீட்டில் குத்திக் கொலைசெய்யப்பட்டதும் இலங்கை மாணவர் பாலபிரசன்னா, சோலைமலைத்தேவர் உட்பட 5 பேர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதும் தெரிந்தவையே.

இவ்வழக்கில் விரைவில் குற்றப்பத்திரியையை தாக்கல் செய்ய பொலீஸார் ஆதாரங்களைத் திரட்டி வருகின்றனர். இதன்படி, இரகசிய வாக்குமூலம் கொடுக்க சாட்சிகளை ஏற்பாடு செய்தனர். மோகன்தாஸ், முருகானந்தம் ஆகியோர் நீதிவான் மதுரசேகரன் முன்னிலையில் இரகசிய வாக்குமூலம் கொடுத்தனர். முதலில் முருகானந்தம், அரைமணி நேரம் வாக்குமூலம் கொடுத்தார். பின்னர் மோகன்தாஸ் ஒருமணி நேரம் வாக்குமூலம் கொடுத்தார்.

பாலபிரசன்னா இரண்டாவது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்த தகவலின் அடிப்படையில் இவர்களின் இரகசிய வாக்குமூலங்கள் இருந்தன என்று பொலீஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. இக்கொலையில் சோலைமலைத் தேவருக்குப் பங்கில்லை என்று இரண்டாவது வாக்குமூலத்தில் பாலபிரசன்னா தெரிவித்திருக்கிறார்.

(எ)

## கருத்தரங்குகள்

சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றினை யாழ்மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவையாளர்களுக்கு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவும் நீதி அமைச்சும் இணைந்து நடத்தவுள்ளன.

எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

சட்டம் தொடர்பான கருத்தரங்கினை வழங்குவதற்காக இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவில் இருந்து அதிகாரிகள் வருகைதரவுள்ளனர். (ம-ரி)

★ ★ ★

கரையோரப் பகுதியினை பாதுகாத்தல் தொடர்பான முழுநாள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இன்று யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இக் கருத்தரங்கினை கரையோர பாதுகாப்பு திணைக்களம் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக உத்தியோகத்தர் மற்றும் கிராமசேவையாளர்களுக்கு நடத்துகின்றது. (ம-ரி)

# கொழும்பில் இன்றும் நாளையும் தமிழ்மொழித் தினப் போட்டிகள்

## பம்பலப்பிட்டியில் அங்குரார்ப்பண வைபவம்

இந்த ஆண்டுக்கான அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் இன்றும் நாளையும் கொழும்பில் நடைபெறும்.

கல்வி, மனித வள அபிவிருத்தி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவுப் பணிப்பாளர் நல்லதம்பி நடராஜா இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

நாட்டின் பல பாகங்களிலுமிருந்து இப்போட்டியில் பங்குபற்ற 700 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இப்போட்டிகளுக்கான அங்குரார்ப்பண வைபவம் நடைபெறும். தமிழ்மொழிப் பிரிவுப் பணிப்பாளர் நடராஜா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

போட்டிகள் யாவும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகம் ஆகியவற்றில் நடைபெறும்.

தமிழ்மொழித் தினவிழா டிசெம்பர் 16-26 ஆம் திகதிக்கிடையில் நடைபெறும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு இவ்விழாவில் விருது வழங்கப்படும். (எ)


## எழுத்துத் தேர்வு

இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தினால் நடத்தப்படும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான இரசாயனவியல் வினாடி வினாப் போட்டியின் 2003/2004 ஆம் ஆண்டு ஆரம்ப கட்ட எழுத்துத் தேர்வு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தேர்வுக்கு விண்ணப்பித்தோர் அனைவரும் பரீட்சை ஆரம்பமாகும் நேரத்திற்கு 30 நிமிடத்திற்கு முன்பாக பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-8)

# சாயி சிந்தனை

## கிணற்றுத் தவளைகள்



எல்லா மதங்களின் சாரமும் ஒன்றே. இந்த உண்மையை யாருமே புரிந்துகொள்ளவில்லை. மதங்கள் வேறுபாடானவை என்று கருதிக்கொண்டு வாதப்பிரதிவாதம் செய்கிறார்கள். ஒரு கிணற்றில் ஒரு தவளை பல ஆண்டுகள் வசித்து வந்தது. வெள்ளம் காரணமாக கடலில் இருந்த தவளை தற்செயலாக கிணற்றுக்குள் விழுந்தது. அத்தவளை கிணற்றைக் கண்டு இந்த இடம் மிகக்குறுகலாக இருக்கிறது என்று நினைத்தது. ஆனால் கிணற்றுத்தவளையோ, கிணற்றையே கடலெனக்கருதி மிகுந்த மகிழ்ச்சியுடன் அங்கும் இங்கும் தாவிக்குதித்தது. கடல்தவளை கிணற்றைச் சிறிதாகக் கருதியது. கிணற்றுத் தவளையோ, கிணற்றையே மிகப்பெரிதாகக் கருதியது. இந்துக்கள், இந்துசமயம் என்ற கிணற்றுக்குள் இருந்து கொண்டு, அதுவே மிகவும் பெரியது என்று கர்வம் கொள்கின்றனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவம் என்ற கிணற்றுக்குள் இருந்து கொண்டு அதுவே பெரியது என்று கர்வம் கொள்கின்றனர். முகமதியர்கள் இஸ்லாம் என்ற கிணற்றுக்குள் இருந்து கொண்டு, அதுவே பெரியது என்று கர்வம் கொள்கின்றனர். இவ்வாறு பௌத்தர்களும் மற்றச் சமயத்தவர்களும் கிணற்றுத் தவளைகள் போன்றவர்களே.

இவையெல்லாம் உண்மையான வரம்புகள் அல்ல. அளவற்ற ஆற்றலும் விரிவுமே உண்மையான எல்லைக்கோடுகள். கிணற்றுக்குள் வாழ்வது போதாது. இதை விளக்க ஒரு கதை உண்டு. ஒருவர் ஐந்து குருடர்களை கூட்டிக்கொண்டு வந்தார். ஐந்து குருடர்களையும் யானையைத் தெரிந்து கொள்ளும்படி கூறினார். குருடர்களில் ஒருவன் அதன் காலைத் தடவிப் பார்த்து, யானை ஒரு தூண் என்றான். அடுத்தவன் அதன் வயிற்றைத் தடவிப்பார்த்து யானை பெரிய சுவர் என்றான். மற்றவன் அதன் காதைத் தடவிப்பார்த்து யானை சுளகு போன்றது என்றான். ஒவ்வொருவனும் தான் அறிந்த அளவுக்கு யானையைப் பற்றிக்கூறியது உண்மையே, அந்த அளவான அறிவு முழு உண்மையல்ல. அனைத்தையும் ஒன்றிணைத்து முழுமையாகப் புரிந்துகொள்ளுதலே முழு உண்மை. அனைத்து சமயங்களையும் ஒன்றிணைத்து அறிவதே உண்மையான மதம். அனைத்து மதங்களுக்கும் இலட்சியம் ஒன்றே. சிறுசிறு வேறுபாடுகளை மனதில் கொண்டு நம் வாழ்க்கையை நாம் பாழாக்கிக் கொள்ளல் ஆகாது. வரம்புகளால் கட்டுப்பட்டதை நாம் பின்பற்றுகிறோம். ஆனால், இறைவன் எல்லையற்றவர். இத்தகைய அளவற்ற தெய்வத்திடம் முழு நம்பிக்கை கொள்ளவேண்டும். அனைத்து சமயங்களும் பல்வேறு வழிபாட்டு முறைகளாகும். அனைத்து சமயங்களும் இலட்சிய வாழ்வினைப் போதித்து, சிறந்த உண்மைகளைக் கற்பிக்கின்றன என்பதே உண்மையாகும்.

*ஆதாரம்: சனாதனசாரதி*

# அதிரடி நாயகன் ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் மாநில ஆளுநர் தேர்தலில் அமோக வெற்றி

## 11 மாதங்களுக்குள் டேவிஸ் பதவிபறிப்பு

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஒக்ரோபர் 9

**அமெரிக்காவின் மிகப்பெரிய மாநிலமான கலிபோர்னியாவில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆளுநர் தேர்தலில் ஹொலிவூட் உலகின் அதிரடிக் கதா நாயகனான ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் பெருவெற்றியீட்டிருக்கின்றார்.**

**பதவியிலிருக்கும் ஆளுநர் கிறே டேவிஸை திருப்பி அழைக்கும் தமது விருப்பத்தை இத்தேர்தல் மூலம் தெளிவாக வெளிப்படுத்திய கலிபோர்னிய வாக்காளர்கள், தங்களின் புதிய ஆளுநராக ஷ்வாஸ்நேகரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.**



வெற்றிக்களிப்பில் மனைவியுடன் ஷ்வாஸ்நேகர்

கலிபோர்னியாவில் முன்னெப்போதும் இல்லாதவாறு மக்கள் நேற்று முன்தினம் திரண்டு வாக்களித்தனர். வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் திரண்டதால் அவர்களின் கார்களை நிறுத்துவதற்குக்கூட இடமின்றி அங்கு குழப்பங்கள் ஏற்பட்டன.

தமது வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட ஷ்வாஸ்நேகர் 'எதுவுமே இன்றி கலிபோர்னியாவுக்கு வந்தேன். எல்லா உன்னதங்களையும் கலிபோர்னியா எனக்கு வழங்கியது'என்றார் அவர்.

"உங்களின் நம்பிக்கை தோல்வியடைய அனுமதிக்க மாட்டேன்; உங்களுக்கு அதிருப்தி ஏற்படுத்த மாட்டேன்; உங்களைக் கைவிடமாட்டேன்."

"அரசியல்வாதிகளின் மோதல்களை நிறுத்தச்செய்து கலிபோர்னியாவைக் கட்டியெழுப்புவதே முக்கிய பணியாக உள்ளது.

"மக்களின் ஆளுநராகப் பணிபுரியவே நான் விரும்புகிறேன்" - என்றும் அவர் குறிப்பிட்டார்.

1998ஆம் ஆண்டு 70 வீத வாக்குகளுடன் பெரு வெற்றியீட்டி கலிபோர்னிய ஆளுநராகப் பதவியேற்ற டேவிஸ், கடந்த ஆண்டு இரண்டாவது முறையும் அப்பதவிக்குத் தெரிவானார். எனினும், முறையற்ற நிர்வாகம், சீரழிந்த பொருளாதாரக் கொள்கை ஆகியவை காரணமாக அவரது பதவி நிலை கேள்விக்கு உள்ளாகி மீண்டும் 11 மாத காலத்துக்குள் மக்களின் கணிப்பீட்டை அவர் எதிர்கொள்ள வேண்டியவரானார்.

வாக்குகள் பகுதியாகக் கணக்கிடப்பட்ட நிலையில் டேவிஸை பதவியில் இருந்து இறக்குவதற்கு 27 லட்சத்து 62 ஆயிரத்து 348 வாக்குகளும், (53.8 வீதம்). அதற்கு எதிராக 23 லட்சத்து 74 ஆயிரத்து 350 வாக்குகளும் (46.2 வீதம்) கிடைத்திருந்தன.

அதேசமயம் ஷ்வாஸ்நேகர் 21 லட்சத்து 99 ஆயிரத்து 573 வாக்குகள் பெற்று முன்னணிக்கு வந்தார். அவரைத் தொடர்ந்து ஜனநாயக் கட்சியின் லெப்டினன்ட் கவர்னர் குருஸ் புஸ்றமனேற் 14 லட்சத்து 46 ஆயிரத்து 511 வாககுகளும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் டொம் மக்ளின் றொக் 6 லட்சத்து 74 வாக்குகளும் பச்சைக் கட்சி வேட்பாளர் பீற்றர் கம்ஜோ ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 785 வாக்குகளும் பெற்றிருந்தனர்.

புதிய ஆளுநருக்கான தேர்தலில மொத்தம் 159 பேர் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒஸ்ரியா நாட்டிலிருந்து வந்து கலிபோர்னியாவில் குடியேறியவரான ஷவாஸ்நேகர் (வயது-56), ஆளுநர் தேர்தலில் வெற்றிபெற்றதை அடுத்து எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் அப்பதவியை ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவின் சரித்திரத்தில் பதவியில் இருக்கும் ஆளுநர் ஒருவர், மக்கள் கணிப்பீட்டின் அடிப்படையில் பதவி இறக்கப்படும் இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

வடக்கோட்டாவில் 1921இல் இவ்வாறு ஆளுநர் ஒருவர் பதவியிலிருந்து இடைநடுவில் அகற்றப்பட்டிருக்கிறார்.

## ஒஸ்ரியாவில் கொண்டாட்டம்



ஒஸ்ரியாவில் ஷ்வாஸ்நேகரின் ஆதரவாளர்கள்.

தமது நாட்டை தாயகமாகக்கொண்ட ஆர்னோல்ட் ஷவாஸ்நேகர் கலிபோர்னியா மாநிலத்தின் ஆளுநர் தேர்தலில் வெற்றிபெற்றதை ஒஸ்ரிய மக்கள் கொண்டாடிவருகின்றனர்.

கலிபோர்னியத் தேர்தல் முடிவுகள் ஒஸ்ரியத் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. ஷவாஸ்நேகர் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டதும் ஒஸ்ரிய மக்கள் வீதிகளில் இறங்கி ஆடிப்பாடினார்கள்.

ஒஸ்ரியாவைப்பிறப்பிடமாகக் கொண்ட ஷ்வாஸ்நேகர் 35 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காசென்று குடியேறினார். அவருக்கு தற்போது ஒஸ்ரிய மற்றும் அமெரிக்கக் குடியுரிமைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'பொடா வழக்கு' நடைபெற்ற சமயத்தில் நீதி மன்றத்தில் வெகுண்டார் வை.கோ.



காஞ்சிபுரம்,ஒக்.9

தமிழகத்தில் பொடா வழக்கில் கைதுசெய்யப்பட்ட வை.கோ. உள்ளிட்ட 9 ம.தி.மு.க. பிரமுகர்கள் மீதான விசாரணை வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் குறுக்கு விசாரணை நேற்றுமுன்தினம் தொடர்ந்தது. அரசுத் தரப்பு சாட்சியான சப்இன்ஸ்பெக்டர் சென்னகேசவன் அன்று தனது நிதானத்தை இழந்து உணர்ச்சி வசப்பட்டு எதிர்த்தரப்பு சட்டத்தரணியை 'லூஸ்' எனக் குறிப்பிட்டு நீதிமன்றத்தில் பரபரப்பை ஏற்படுத்தியதோடு அனைவரிடமும் மன்னிப்புக் கோர வெண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளானார்.

நீதிமன்றம் தொடங்கியவுடன் வைகோ. தரப்பு சட்டத்தரணி ஜே.தேவதாஸ் ஒரு கேள்வி குறித்து கேட்டதற்கு. சிலேடையில் பதிலளித்தார் சென்னகேசவன். இதைத் கேள்விப்பட்டு மற்றொரு எதிர்த்தரப்பு சட்டத்தரணி அருணன் "சாட்சி மிகவும் சாமர்த்தியமாகப் பதிலளிக்கிறார்" எனக் குறிப்பிட்டார்.

இதைக்கேட்டு அருணனைப் பார்த்து சென்னகேசவன், 'லூஸ்' மாதிரிப் பேசுகிறார் எனக் குறிப்பிட்டார். இதனால் நீதிமன்றமே ஸ்தம்பித்தது.

இதைக்கேட்டு வெகுண்ட வைகோ, "அரசுத்தரப்பு சாட்சி ஆரம்பநாள் முதலே வெகு அலட்சியமாக சாட்சியமளித்து வருகிறார். அவரது இத்தகைய பேச்சு கண்டிக்கத்தக்கது. நீதிமன்றத்தின் மீது நம்பிக்கையை வைத்துத்தான் நாங்கள் இவ்வழக்கில் முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறோம். அரசுத் தரப்பு சாட்சி இவ்விதம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டால், எவ்விதம் ஒத்துழைப்பு அளிப்பது" என வினவியதோடு, சென்னகேசவன் இதற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும் என வலியுறுத்தினார்.

இதனையடுத்து நீதிபதியின் வலியுறுத்தலின்பேரில் சென்னகேசவன் மன்னிப்புக் கேட்டார். இதையடுத்து வைகோ பேசுகையில், சென்னகேசவன் மரியாதைக் குறைவாகப் பேசியது தமது காதில் விழுந்தது. ஆனால், மன்னிப்புக் கேட்டது காதில் விழவில்லை என்றார் - இதையடுத்து சத்தமாக மன்னிப்புக் கேட்டார் சென்னகேசவன். பின்னர் வழக்கு விசாரனை தொடர்ந்தது.

இதையடுத்து இவ்வழக்கு விசாரணை 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## பாக்.ஏவுகணைச் சோதனை!



கடந்த ஒருவாரத்துக்குள் பாகிஸ்தான் இரண்டாவது முறையாக நேற்று ஏவுகணை சோதனையை வெற்றிகரமாகச் செய்தது. 'எச்.ஏ.டி.எ.'ப் 4' என்ற இந்த நடுத்தூரதூர ஏவுகணை நேற்று அதிகாலை சோதனை செய்யப்பட்டது. இந்த ஏவுகணைக்கு ஹீன் 1 என்று பெயரிடப் பட்டுள்ளது.

இது 700 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கவல்லது. அதாவது, இந்தியாவின் அனைத்து நகரங்களையும் சென்று தாக்கவல்ல திறனை இது பெற்றுள்ளது.

கடந்த 3ஆம் திகதி குறுகிய தூர ஏவுகணை ('எச்.ஏ.டி.எ.'ப் 3 கஸ்னவி) சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது. 5 தினங்களுக்குள் மீண்டும் ஒரு ஏவுகணை சோதனையைச் செய்துள்ளது.

பாகிஸ்தானிடம் தற்போது குறுகிய மற்றும் தொலைதூர ஏவுகணைகள் சுமார் 50 உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாலியல் உறவு மாநாடு தாய்லாந்தில் ஆரம்பம்

பாலியல் உறவுபற்றிய ஆசிய பசுபிக் நாடுகளின் 2ஆவது மாநாடு தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இந்த மாநாடு 5நாள்கள் நடக்கிறது. இந்த மாநாட்டை தாய்லாந்து சுகாதார அமைச்சர் சுடாரட்கேயூரபான் ஆரம்பித்து வைத்தார்.

குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றவிடாமல் மதத் தீவிரவாதிகள் தடுப்பது குறித்து இந்த மாநாட்டில் கவலை தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் காஷ்மீரில் கருத்தடை சாதனத்தை பெண்கள் பயன்படுத்துவதற்கு தீவிரவாதிகள் தடைவிதித்திருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் கருக்கலைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்தும் விமர்சிக்கப்பட்டது. கருக்கலைப்பு, ஆதரவு இயக்கத்துக்கு நிதி வழங்கப்படுவதை புஷ் நிர்வாகம் தடுத்ததால் தேவை இல்லாமல் 20 லட்சம் குழந்தைகள் தாய்வயிற்றில் வளர்ந்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கண்டனத் தீர்மானத்தில் திருத்தம் செய்தது சிரியா

சிரியா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலைக் கண்டித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் சிரியா திருத்தம் செய்துள்ளது.

இஸ்ரேலில் பலஸ்தீன தற்கொலைப்படை குண்டுத் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளித்ததாக குற்றஞ்சாட்டி சிரியா மீது இஸ்ரேல் விமானத்தாக்குதல் நடத்தியது. இதற்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 15 உறுப்பினர் கொண்ட ஐநா பாதுகாப்புச் சபையில் சிரியா மீதான தாக்குதல் குறித்து நீண்ட விவாதம் நடந்தியது. கடந்த திங்கட்கிழமையும் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது. ஆனால் இஸ்ரேல் மீதான தாக்குதலையும் கண்டிக்கும் வகையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியது. இதன் காரணமாக சிரியா தனது கண்டனத் தீர்மானத்தில் திருத்தம் செய்துள்ளது.

### சன்னி பிரிவுத் தலைவர் கொலை எதிரொலி:

## பாகிஸ்தான் மதக்கலவரம்; மசூதிகளுக்குத் தீவைப்பு!

பாகிஸ்தான் சன்னி முஸ்லிம் தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆசம் தாரிக் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத் நகரில் கலவரம் ஏற்பட்டது. ஷியா முஸ்லிம் மசூதிகளுக்குத் தீ வைக்கப்பட்டன. இதனால், அங்கு பெரும பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் ஷியா - சன்னி முஸ்லிம் பிரிவுகளுக்கு இடையே அடிக்கடி மோதல் ஏற்படுவது வழக்கம்.

இந்நிலையில்; சன்னி முஸ்லிம் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆசம் தாரிக் கார் இஸ்லாமாபாத்துக்குச் சென்றிருந்தபோது அவரை அடையாளம் தெரியாத சிலர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். அத்துடன், கார் சாரதியும் மற்றும் 3 பாதுகாவலர்களும கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட ஆசம் தாரிக்கின் இறுதிச் சடங்குகள் நேற்றுமுன்தினம் நடந்தன. அப்போது நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மதகுருமார்கள் கொலைச் சம்பவத்துக்குத் தீப்பொறி பறக்கக் கண்டனங்களைப் பொழிந்தனர்.

இதைத்தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்ட ஆசம் ஆதரவாளர்கள் கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் கலவரத்தில் ஈடுபட்டனர்; கட்டடங்களுக்குத் தீ வைத்தனர்; கல் வீசித் தாக்கினர்; பழிக்குப் பழி வாங்கப்போவதாகக் கூச்சலிட்டனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தின் அருகே திரண்டு நின்ற அவர்கள், அந்த வழியாகச் சென்ற கார்கள் மீது கல் வீசினர். ஷியா முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் மசூதிகளுக்குத் தீ வைத்தனர். ஒரு திரையரங்குக்கும், பெற்ரோல் பங்குக்கும் தீ வைக்கப்பட்டது.

# ஆசியாவில் அதிகரித்து வரும் வாசிப்புக் குறைபாட்டு நோய்

ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பில் கற்கும் மாணவர்களில் சிலர் சில பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெறும்போது சிலர் அப்பாடங்களில் குறைவான புள்ளிகளைப் பெறுவது ஏன்? அதேபோன்று பாடப் புத்தகங்களில் மூழ்கியுள்ள அநேகமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாதது ஏன்? இவற்றிற்கு வாசிப்புப் பலவீனம் காரணமாக இருக்கக்கூடும் என்று கண்டறியப்பட்டுள்ளது. வாசிப்புப் பலவீனம் (DYSLEXIA) அல்லது வாசிப்புக் குறைபாடு என்று இனங் காணப்பட்டுள்ள இந்தக் குறைபாடு ஐரோப்பிய நாடுகளைவிட ஆசிய நாடுகளிலேயே அதிகமாகக் காணப்படுகிறது. உலகில் படிப்படியாகப் பரவி வரும் இந்நோயானது இனங்காணமுடியாத சிக்கல் நிறைந்த ஒன்றாக அமைந்துள்ளது.

இத்தகைய நோயொன்று உள்ளதாக 1888 ஆம் ஆண்டிலேயே முதன முதலில் அறியப்பட்டது. இன்றைய ஆய்வுகளுக்கமைய இந்தியாவில் இன்று இந்நோய்த்தாக்கத்திற்கு உள்ளானோர் எண்ணிக்கை சுமார் ஒரு கோடியைத் தாண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆயினும், இந்திய அரசு இதனைக் கட்டுப்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையையும் எடுக்காதுள்ளது.

### ஆசியாவில் அதிக தாக்கம்

வாசிப்புப் பலவீனம் உடையோரின தொகை நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகிறது. சீனாவிலும் ஜப்பானிலும் இந்நோயின் பாதிப்பு 5 சதவீதம் முதல் 10சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் உள்ளது. இதே வேளை, அமெரிக்காவில் 10 சதவீதம் முதல் 20சதவீதம் வரையில் காணப்படுகிறது. இப்பலவீனம் மாணவர்கள் மத்தியில் மாத்திரமின்றி ஆசிரியர்கள், மருத்துவர்கள், கலைஞர்கள் உட்பட அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஞாபகம் இன்மை, சொற்களை உச்சரிப்பதற்கு சிரமப்படுதல், கற்பதில் ஆர்வமின்மை போன்றவை இப்பலவீனத்திற்கான முக்கிய அறிகுறிகளில் சிலவாகும். மேலும் இது மூளைப்பலவீனத்தால் ஏற்படும் ஒன்றல்ல என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன் பாதிப்பிற்குட்பட்டோரின் மூளை சம்பந்தப்பட்ட ஆய்வுகள் அவர்களது மூளையின் திசுக்களின் பலம் சாதாரணமாகவும் ஆரோக்கியமாகவும் உள்ளதை உறுதி செய்துள்ளன. அதேவேளை, நரம்புப்பலவீனம் காரணமாகவே வாசிப்பதில் சிரமமேற்படுகின்றது என்று கருதப்படுகின்றது.


மூளையின் வேகச் செயற்பாடுகளுக்கான நாளங்களில் மற்றும் மூளைப்பகுதிகளின் செயற்பாடுகள் முடக்கப்படுவதன் காரணமாக பிள்ளைகள் இக்குறைபாட்டுக்கு உட்படுகின்றனர். இது சம்பந்தமாக கருத்துகளை வளங்கியுள்ள மருத்துவ நிபுணர்கள் சொற்களை சுயமாக மிகச் சரியாக பகுத்து அறிந்து கொள்ளும் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் இக்குறைபாட்டைக் கட்டுப்படுத்த முடியும் என்று கூறியுள்ளனர். அதேபோன்று, மூளை சம்பந்தமான ஆய்வுகளில் பெற்றுள்ள நவீன பரீட்சார்த்த செயற்பாடுகளுக்கமைய ஒருவரால் படிப்படியாக வாசிப்புத்திறனை வளர்த்துக்கொள்ள முடியும் என்பதில சாதகமான பயன் கிடைத்துள்ளது.

11முதல் 17வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையில் கற்பதற்கும் வாசிப்பதற்கும் சிரமப்படுபவர்களை இலகுவில் இனங்காண முடிகிறது. அவ்வயதுகளுக்குள் கற்பதில் ஏற்படும் தாமதங்களினால் தாம் மிகவும் பின் தங்கியுள்ளதாக அம்மாணவர்கள் கூறியுள்ளனர். இருப்பினும், வாசிப்புப் பலவீனக் குறைபாட்டினைக் கொண்டு ஒருவரது தலைவிதியை நிர்ணயிக்க முடியாது. இக்குறைபாட்டினால் பாதிப்படைந்தவர்களில் கலைஞர்கள், விஞ்ஞானிகள மற்றும் வர்த்தகர்கள் போன்றோர் அடங்கியுள்ளனர்.

ஆசிய நாட்டவர்கள் மத்தியில் நிகழ்த்திய இக்குறைபாடு சம்பந்தமான ஆய்வுகளின் போது ஆசிய நாட்டவர்களிடம் இக்குறைபாட்டுக்கான அறிகுறிகளை இலகுவில் கண்டுகொள்ள முடியாதிருந்தது. அவர்களிடையே இது சம்பந்தமாக நிகழ்த்தப்பட்ட அநேகமான ஆய்வுகள் பயனளிக்காததோடு கற்பதற்குத் தடையாயுள்ள இப்பலவீனத்திற்கான காரணங்களைக் கண்டறிவதில் விஞ்ஞானிகள் தோல்வி அடைந்துள்ளனர்.

### இருண்ட எதிர்காலம்

ஒருபிள்ளையின் வாசிப்புக்குறைபாடு வாழ்நாள் முழுவதையும் பாதிப்பிற்குள்ளாக்குவதோடு சில சந்தர்ப்பங்களில் இருண்ட எதிர்காலம் ஒன்றையும் உருவாக்கக்கூடும். ஆயினும், ஒவ்வொருவருக்கும் ஒரேமாதிரியான வாசிப்புத்திறன் அமைவதில்லை. அவ்வாறு அமைவது வியப்பிற்குரியதாகும்.



வெவ்வேறு சொற்களை வாசிக்கும் போது மற்றும் அவற்றின் ஓசைக்கேற்ப புரிந்துகொள்ளும் போது மூளை அச சொற்களின் ஓசைகளுக்கேற்ப இரு பிரிவுகளாக வகுத்துக் கொள்கிறது. நீங்கள் 'CAT' என்னும் சொல்லை சந்திக்கும்போது மூளை அதை C.../ ...A.../...T/ மற்றும் k.../...A.../...T/ என்றவாறே கிரகித்து நினைவில் வைத்துக் கொள்கிறது. அதற்கமைய எமது மூளையில் அதற்கெனவுள்ள மிக விசேட பிரிவுகள் மூலம் வாசித்தால் மற்றும் ஞாபகத்தில் வைத்திருத்தல் என்பன நடைபெறுகின்றன. இரு பிரிவுகள் கொண்டுள்ள மூளையின் இடது பாகம் மூலம் சொற்கள் கிரகிக்கப்பட்டு நினைவில் வைக்கப்படும் அதே வேளை, வலது பாகம் மூலம் அவை முறையாக வகைப்படுத்தப்படுகின்றன. இருபாகங்களிலும் மிகவிசேடமான பிரிவுகள் மூலம் ஒன்றுக்கொன்று வித்தியாசம் கொண்ட செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. புத்தகம் வாசித்தல், விளையாடுதல், உற்றார், உறவினர்களை இனங்காணல் மற்றும் சமய நிகழ்வுகளில் ஈடுபடுதல் என்பன மூளையின் விசேடமான பிரிவுகளினால் வகைபடுத்தப்படுகின்றன. மூளையின் சகல பிரிவுகளிலும் செயற்படும் மிகவிசேடமான செயற்பாடுகளை கண்டறிவதற்கு மூளையில் மறைந்துள்ள பல மர்மங்களை வெளிக்கொணர்வதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1990களில் அறிமுகமான 'காந்தவியல் பிரதிமைச் செயற்பாடு (Functional Magnetic Resourceimaging) என்ற தொழில்நுட்பத்தின் உதவியுடன் மூளையின் செயற்பாடு, இரத்த ஓட்டம் மற்றும் அச்செயல்களில் ஈடுபடும் மூளையின் பிரிவுகள் சம்பந்தமான தெளிவான விளக்கத்தைப் பெற முடிந்துள்ளது. மேற்கூறிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வாசித்தலுக்கு ஆதாரமான மூளையின் இடப் பாகத்திலுள்ள மூன்று பிரிவுகளின் செயற்பாடுகளை விஞ்ஞானிகளால் அவதானிக்க முடிந்துள்ளது.

**- சரா -**

இந்த ஆய்வுகளுக்கு அமைய வாசிப்பின் ஆரம்பத்திலிருந்து சொற்களை வகுத்தளிக்கும் வரையில் நிகழும் விதிமுறைகள் சிறப்பான விரிவாக்கம் பெறுகின்றன. அதற்கமைய முதலில் பதங்களை உச்சரிக்கும் போது, சிறிது தடைப்பட்டாலும் (திக்குதல்) அது பயிற்சியில் வரும் போது, பேசுவதற்கு உகந்த சொற்கள் புலப்படும். இங்கு அச்சொற்கள் அட்ஷரம் மாறாமல் வெவ்வேறாக சிறந்த முறையில் உருவாகி ஒசை வெளிப்படும்.

### அறிகுறிகள்

வாசிப்பு அபிவிருத்தியடைந்த பின்னர், அதிவிசேடமான அநேக செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

ஆய்வுகளில் கூறப்பட்டிருப்பது போன்று, ஒருவரின் வாசித்தலில் காணப்படும் குறைபாட்டை மாத்திரம் கொண்டு வாசிப்பு பலவீனம் இருப்பதாகக் கருத

(13ஆம் பக்கம் பார்க்க)

# கர்ப்பத்தில் இருப்பதான கனவால் கல்லறைக்குப் போகும் சிசுக்கள்

பிறந்து இரண்டு முதல் நான்கு மாதங்கள் வரை பூர்த்தியான சிசுக்கள் உறக்கத்தில் உள்ளபோது சில சமயங்களில் தாயின் கர்ப்பப் பையில் இருப்பதாகக் கனவு காண்பதாகவும் -

அவ்வாறு கனவு காணும்போது, அச்சிசுக்களின் சுவாசிக்கும் தொழிற்பாடு நின்றுவிடுவதாகவும் - இதனால் அச்சிசுக்கள் இறந்து விடுவதாகவும் -

ஆஸ்த்திரேலிய விஞ்ஞானியான 'ஜோர்ஜ் கிறிஸ்ற்ரோஸ்' என்பவர் ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


சிசு ஒன்று தாயின் கர்ப்பப் பையில் இருக்கும்போது தாயின் இரத்தம் மூலம் பிராணவாயு அதற்குக் கிடைக்கின்றது. அதனால் கர்ப்பப்பையில் இருக்கும்போது சிசுவுக்குத் தானாகச் சுவாசிக்கும் தேவை இருப்பதில்லை. இந்நிலையில், அந்தச் சிசு பிறந்த பின்னர் தாயின் கர்ப்பப்பையில் தான இருப்பதாகக் கனவு காணும்போது, சுவாசம் நின்று விடுவதால், திடீர் இறப்பு ஏற்படுகின்றது.

இதனையே ஜோர்ஜ் கிறிஸ்ற்ரோஸ் தனது ஆய்வில் கண்டறிந்ததாகக் கூறுகிறார்.

இது போன்ற இறப்புகள் அநேகமாக இரண்டு - நான்கு மாதக்குழந்தைகளுக்கு, அதிலும் ஆண்குழந்தைகளுக்கே அதிகமாக ஏற்படுகின்றது என்றும் அவர் கூறுகின்றார்.

இதனை சிசுவின் திடீர் இறப்பிற்கான நோய்க்கு ஒத்திசைவான அறிகுறிகள் (Sudden Infant Death Syndrome) என அவர் வர்ணிக்கின்றார். அண்மையில் இந்த விஞ்ஞானியால் வெளியிடப்பட்ட "Memory and Dream Creative Human Mind" என்னும் நூலில் மேற்கூறப்படும் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

சிசுக்களின் மூளை நரம்புகள் கனவுகாணும் அளவிற்கு தொழிற்படும் நிலை அவர்கள் பிறந்து இரண்டு மாதங்களின் பின்னரே ஒருவாறு ஏற்படும். இந்நிலையில், சிசுக்கள் கனவு காணும்போது சில சந்தர்ப்பங்களில் சுவாசம் நின்று விடுகின்றது. அதாவது, நித்திரையின் போது நீரினுள் அமிழ்ந்தி இருப்பதாகக் கனவுகாணும சிசுக்களின் சுவாசித்தல் செயற்பாடு நின்று விடுவதாகக் கூறப்படுகின்றது.



2000ஆம் ஆண்டிற்கு முன் 22 வருடங்கள் வரை நித்திரையில் கனவு நிலையின்போது குழந்தைகளின் சுவாசிக்கும் செயற்பாடுகள் நின்று விடுவதால் ஏற்படும் இறப்புக்கள், ஆஸ்திரேலியாவில் 8 ஆயிரத்துக்கும் அதிகமாக இடம்பெற்றுள்ளதாகக் கூறுகினறார். அதுபோன்று பிரிட்டனில் ஆயிரத்திற்கு 54 என்ற வீதத்திலும், அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் சராசரி 2ஆயிரத்து 500 குழந்தைகள் என்ற அடிப்படையிலும் மரணமடைவதாகவும் கூறப்படுகிறது.

குழந்தைகளுக்கு மூச்சு நின்று விடுவதற்கு வேறு சில காரணங்களையும் ஜோர்ஜ் கிறிஸ்ரோஸ் கூறுகின்றார். குழந்தைகளை வயிறு தரையில் படும்படியாக 'குப்புற' படுக்க வைப்பதனால் சுவாசப்பை சுருக்குவதும், ஒரு தாய்க்கு கருவுற்றிருக்கும் காலத்தில் புகையிலைப் பாவனைப் பழக்கம் இருப்பதும், பழைய அசுத்தமான இடங்களில் சிசுவைப் படுக்க வைப்பதும் சிசுக்கள் இறப்பதற்குக் காரணிகளாக அமைகின்றன.

அமெரிக்காவைச் சேர்ந்த, குழந்தை மருத்துவத்துறைப் பேராசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கனவு காண்பது சம்பந்தமான தத்துவம், சுவாரஸ்யமானதுதான். ஆனாலும் அது சர்ச்சைக்குரியதாகும்.

குழந்தைகளின் திடீர் இறப்பிற்கான நோய்களின் தாக்கம் இரண்டு - மூன்று மாதக்குழந்தைகளுக்கே ஏற்படுவதாகவும், சில குழந்தைகள், ஆறு மாதங்கள்வரை அறவே கனவு நிலை அடைவதில்லை எனவும், அமெரிக்கப் பேராசிரியரான 'வறென் கன்திறொத்' கூறுகின்றார்.

பிறந்து சிலவவாரங்களேயான குரங்குக் குட்டியின் முகத்தை குளிர்ந்த, ஈரமான துணியால் மூடினால், அதனது சுவாசிக்கும் செயற்பாடு நின்று விடுகிறது. அதனால் அது இறக்க நேரிடுகிறது.

**எம்.லிங்கம்**

இது ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பிறந்து சில மாதங்களேயான குழந்தைகளுக்கு வெளிநிகழ்வுகள சம்பந்தமாக உடனடியாக உள்ளுணர்வுகளை எழுப்பும் சக்தி குறைவான காரணத்தாலும், மூச்சு நின்றுவிடும் நிலை ஏற்படுகின்றது எனவும் அவர் கூறுகின்றார்.

குழந்தைகளின் இறப்புகள் குறித்த அறிகுறிகள் தொடர்பாக ஆராயப்பட்ட 50ஆராய்சிகளில் கிறிஸ்ரோஸின் SIDS விளக்கமும் ஒன்றாகின்றது - என்று கூறப்படுகின்றது. ★

## சுகநலம்

# 50 வருடங்களில் 156 தடவைகள் இரத்ததானம் செய்த தொழிலாளி



சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குள் 156தடவைகள் மற்றவர்களின் உயிர்களைக் காப்பதற்காக இரத்ததானம் வழங்கிய லீலாரத்ன இன்று வாழ வழியின்றி நோய்வாய்ப்பட்டு தனது 74 வயதில துன்பங்களை அனுபவித்து வருகிறார். இவருக்கு 8பிள்ளைகள் உள்ளனர்.

இவர் பெண்தோட்டைப் பிரதேசத்திலுள்ள, தோப்பே சுமனாறாம மாவத்தையில் வசித்து வருகிறார்.

1926ஆம் ஆண்டு பெண்தோட்டையில் பிறந்து கண்டியிலுள்ள கிங்ஸ்வுட் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவர், மிகுந்த பலசாலியாகவும், சுகதேகியாகவும் விளங்கினார். 1959ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16ஆம் திகதி இலங்கைப் புகையிரத சேவையில் ஒரு தொழிலாழியாக இணைந்தார். ஒன்பது ஆண்டுகள் அங்கு பணியாற்றிய இவர், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க இயலாத சிக்கலொன்றினால், எதுவிதக் கொடுப்பனவுகளையும் பெறாமலேயே சேவையிலிருந்து விலகவேண்டியதாயிற்று. அன்று முதல் ஒரு கூலியாளாகவே தனது வாழ்க்கையை மேற்கொண்டார்.

அன்று சுகதேகியாகத் திகழ்ந்த அவர், 1952ஆம் ஆண்டு முதல் இரத்ததானம் வழங்க ஆரம்பித்தார். அன்று முதல் இரத்ததானம் வழங்கும் நிகழ்வுகளிலும், தனிப்பட்ட வேண்டுகோள்களுக்கு இணங்கவும் இரத்ததானம் செய்வதை வழக்கமாகக் கொண்ட, லீலாரத்னவின் இரத்தத்தின் மூலம் நூற்றுக்கணக்கானவர்கள் தமது உயிர்களைக் காத்துக் கொண்டுள்ளனர்.

அவரது இரத்தம் "ஓ நெகடிவ்" வகையைச் சேர்ந்ததாகும்.

அவர் வசமுள்ள குறிப்பேட்டிற்கமைய, இன்று வரையில் 156 தடவைகள் அவர் இரத்ததானம் வழங்கியுள்ளார். இரத்ததானம் தொடர்பில் எதுவிதமான அன்பளிப்புகளையோ, அல்லது சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் சலுகைகளையோ அவர் பெற்றுக்கொள்ளவில்லை என்பது ஆச்சரியத்துக்குரியது மட்டுமன்றி அவர் மீது மரியாதை கொள்ளவைப்பதுமாகும். ✹

உதயன்

# காலம் தாழ்த்தியாவது கிடைக்கும் நீதி...!

இலங்கையில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து நாட்டின் முன்னேற்றத்துக்கு முதுகெலும்பாகத் திகழ்ந்த - திகழும் - மலையக மக்களின் குடியுரிமையை உறுதிப்படுத்தும் பிரஜாவுரிமை திருத்தச் சட்டவரைபு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

சுமார் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேல் நடத்தப்பட்ட பிரஜாவுரிமைப் போராட்டத்துக்குப் பலன் கிடைக்கும் சாத்தியங்கள் தென்பட்டிருக்கின்றன.

பிரஜாவுரிமைப் போராட்டம் தீர்ந்து விட்டாலும் சம உரிமைகளுக்கான போராட்டம் தொடரும் என்று மலையகத்தமிழ் மக்களின் தலைவரான அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அறிவித்திருக்கின்றார்.

பிரிட்டனிடமிருந்து இலங்கைக்கு முழு சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை நமது நாட்டில் வலுத்தபோது, அதற்கு முண்டு கொடுத்து, முக்கியத்துவப்படுத்தி அந்தக் கோரிக்கையை நமது நாடு வென்றெடுக்கக் காரண கர்த்தாக்களாக அமைந்தவர்களில வடக்கு - கிழக்குத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் முக்கியமானவர்கள்.

1947 இல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் மலையகத்திலிருந்து ஏழு பிரதிநிதிகளும், வடக்கு - கிழக்கிலிருந்து ஏழு பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். நாடாளுமன்றத்தில் பலம்மிக்க கனிசமான சக்தியாக அவர்கள் உருவெடுத்தனர்.

ஆனால், இலங்கை சுதந்திரம் அடையும் வரை நீறுபூத்த நெருப்பாக அடங்கிக்கிடந்த சிங்களப் பேரினவாதம் சுதந்திரம் கிடைத்ததும் கனன்று எழுந்து தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியது. அதன் கொடூரப் பார்வை முதலில் வீழ்ந்தது இந்திய வம்சாவளியினரான மலையக மக்கள்மீதுதான்.

சிறுபான்மையினத்தவரின் உணர்ச்சி மயமான எதிர்ப்புக்கு மத்தியிலும் அந்த மக்களின் குடியுரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கி, நடு வீதியில் நிறுத்தி, அவர்களினதும் அவர்களது சந்ததியினரதும எதிர்காலத்தை அது கபளீகரம் செய்தது.

அன்று தொடக்கம் கடந்த 55 ஆண்டு காலமாக அவர்களின் பிரஜாவுரிமையை மீட்டுக் கொடுப்பதற்கான போராட்டங்கள் தொடர்ந்தன.

ஆரம்பத்தில் மலையகத் தமிழர்மீது தனது கொடூரப் பார்வையை பேரினவாதம் திருப்பியபோதே வடக்கு - கிழக்கு வாழ் ஈழத்தமிழர்களின் தலைவரான தந்தை செல்வநாயகம் அதனை சீற்றமுடன் எதிர்த்தார் என்பதும், இந்தக் கொடூரப் போக்கு விரைவில் ஈழத்தமிழர்களின் பக்கமும் திரும்பும் என்று அவர் முன்னெச்சரிக்கை விடுத்தார் என்பதும் கவனிக்கத்தக்கவை.

அவர் தீர்க்கதரிசனமாகக் கூறியபடி பேரினவாதப் போக்கிலான செயற்பாடு இனப்பூசலாகி பெரும் இனப்போராக வெடித்து நாட்டையே குட்டிச்சுவராக்கி நிற்கின்றது.

மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு, பிராயச்சித்தம் செய்யும் வகையில் இப்போது பிரஜாவுரிமை திருத்தச் சட்டவரைபு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இதில் முக்கிய அம்சம், இந்தச் சட்டவரைபுக்கு எந்தத் திருத்தமும் கொண்டு வராமல் அதை அப்படியே - சகல கட்சிகளும் - ஏகமனதாக ஏற்று அங்கீகரித்திருப்பதுதான்.

மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்த கட்சிகளில் தொடங்கி, இன்றும் தொடர்ந்து பேரினவாதக் கூச்சல் கிளப்பி வரும் கட்சிகள் வரை அனைத்தும் ஒன்று சேர்ந்து - ஒரே குரலில் - இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதுதான் - அந்த மனமாற்றம்தான் - விசேட அம்சம்.

வடக்கு - கிழக்கில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு எதிராகப் பேரினவாதம் புரிந்த கொடுமை - கொடூரம் - இன்று முழு நாட்டையுமே மோசமாகப் பாதிக்கும் நிலைக்குத் தள்ளியிருப்பதன் பின்னணியில்தான் -

சிறுபான்மையினருக்கு இழைத்த அநீதிக்காக பேரினவாதம் கற்றுக்கொண்ட 'சூடான' படிப்பினையின் பின்னணியில்தான் -

இந்த மனமாற்றத்தை நோக்க வேண்டும்.

இதேபோன்று ஏனைய சிறுபான்மையினருக்கும் இந்த ஐம்பது ஆண்டு காலமாகத் தான் இழைத்த அநீதிக்கு, நியாயம் வழங்கும் விதத்தில் தன்னைத் திருத்திக்கொள்ள பேரினவாதம் முன்வருமானால், இந்த நாடு அமைதிப் பூங்காவாகும்; மலையக மக்களின் மனம் நிறைந்த உழைப்பும், ஈழத்தமிழர்களின் உணர்வும், முஸ்லிம் மக்களின் ஈடுபாடும் பெரும்பான்மையினருடன் இணைந்து புதியதோர் உலகை இங்கு படைக்கும்.

# காலத்தின் பதிவு



வாழ்க்கைச் சக்கரத்தையும் சுழற்ற வேண்டுமே.... படம் : பிரேம்

யாழ். பல்கலைக்கழக ஊடக மூலவள நிலையத்தினால் அண்மையில் செய்திப் புகைப்பட செயலமர்வு நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டவர்கள் செயலமர்வின் இறுதிநாளன்று தீவகம், யாழ்.நகரில் முஸ்லிம்களின் பகுதி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் சென்று பல புகைப்படங்களை எடுத்தனர். இயல்பான வாழ்க்கையையும் இயற்கையையும் பதிவுசெய்வனவாக அந்தப் புகைப்படங்கள் அமைந்தன. அவற்றில் இருந்து சில படங்கள் தொடர்ந்து இங்கே பிரசுரமாகவுள்ளன.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியரின் உண்ணாவிரதம் தொடர்கின்றது

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி தொடர்ந்து 4 ஆவது வாரமாகவும் சுழற்சி முறை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலகத்திற்கு முன் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு பற்றிவரும இந்த ஆசிரியர்கள் உலக ஆசிரியர் தினமான ஒக்ரோபர் 6 ஆம் திகதியைக் கரிநாளாகக் கறுப்புப்பட்டி அணிந்தும் கொண்டாடினர்.

உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பங்களிக்கும் முகமாகச் சம்மாந்துறை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, கந்தளாய் ஆகிய பிரதேச கல்வி வலயங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்கள் 140 பேர் கடந்த திங்கட்கிழமை முதல் சுழற்சிமுறையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதிகளைச் சந்தித்த கந்தளாய்ப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் குணரட்ண போராட்டத்துக்கு ஆதரவினைத் தெரிவித்தார். பகுதிநேர ஆசிரியர்களுக்கு உடன் நியமனம் வழங்கக்கோரி இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கல்வி அமைச்சருக்கும் தான் அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் சங்கப் பிரதிநிதிகளிடம் அவர் கையளித்தார். (ம)

# மானிய ஆணைக்குழுத் தலைவர் நேற்று யாழ். பல்கலைக்கு வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.9

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர்.என்.மெண்டிஸ் நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக சபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பதிவாளர் திருமதி அ.சிவனேஸ்வரன் மற்றும் பீடங்களின் பீடாதிபதிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அதிகளவான நிதியை ஒதுக்கீடு செய்தல், பல்கலைக்கழகத்தில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையை நீக்குதல், விவசாய பீடத்தை கிளிநொச்சிக்கு மாற்றுதல மற்றும் ஒவ்வொரு பீடங்களிலும் நிலவும் பிரச்சினைகள் போன்றன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும், யாழ். பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தை ஆரம்பிப்பது தொடர்பாக சாதகமாக பரிசீலிக்கப்படும் எனவும் பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பது தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றதெனவும் அங்கு மானிய ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை -

கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சை வெட்டுப் புள்ளிகள் எதிர்வரும் 20ஆம் திகதி வெளியாகவுள்ளதாகவும் -

யாழ். பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான கல்வி சார் நடவடிக்கைகள் டிசெம்பர் மாதம் 9ஆம திகதியளவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

(ம-9-ரி)

**நாளை**

ஏராட்டாதி 23
வெள்ளிக்கிழமை
(10.10.2003)
திதி : பூரணை
பிற்பகல் 1.20 வரை
நட்சத்திரம்: ரேவதி
பின்னிரவு 4.30 வரை
சுபநேரம்: 6.02-7.32
ராகுகாலம்: 10.32-12.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தாய்மை என்பது பெண்களின் பிறப்புரிமை.

# தென்பகுதிப் பயணிகளின் வரவு மீண்டும் அதிகரிப்பு

மண்டைதீவு,ஒக்.9

தென் இலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் வரவு மீண்டும் அதிகரித்துள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டவுடன் ஆரம்பித்த இவர்களின் வரவு கடந்த பல மாதங்களாக மந்த நிலையை அடைந்து இருந்தது. இதனால், குடாநாட்டில் திடீரென புற்றீசல் போல் முளைத்த உல்லாச பயணிகள் விடுதிகள் வெறிச்சோடிப்போயின.

இந்த விடுதிகள் இப்பொழுது மீண்டும் சுறுசுறுப்படையத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆரியகுளம் சந்திப் பகுதியில் இடம் கிடைக்காத பயணிகள் பிரதானவீதி, நாலாம் குறுக்குத்தெரு, மூன்றாம் குறுக்கு வீதிகளில் உள்ள தங்குமிடங்களை நாடி வருகின்றனர்.

இந்தப்பகுதிகளில் புதிதாக மேலும் சில விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

தெற்கிலிருந்து வருபவர்களின் ஒரு பிரதான மையமாக யாழ். ஆரியகுளம் சந்தி மாறிவருகிறது. பாரிய மரங்களை ஏற்றிவரும் 'லொறிகள்', தளபாட வியாபாரிகள், பெருமளவில் தங்குமிடமாகவும் ஆரியகுளம் சந்திப் பகுதி காணப்படுகிறது. தளபாடங்கள் சந்தியில் வைத்து விற்பனையும் செய்யப்படுகிறது.

பிரயாணிகளின் அண்மைக்கால வரவால் இந்தப்பகுதி போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடமாகவும் காணப்படுகிறது.(ம-88)

# மோட்டார் திணைக்களப் பணிகள் பிரதேச செயலகங்களிடம்!

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் திணைக்களத்தின் சில பணிகள் பிரதேச செயலகங்களுக்கு, விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக மோட்டார் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

வாகனங்களின் உடைமை மாற்றம், சாரதி அனுமதி அட்டை நகல் பெறுதல், பதிவுச் சான்றிதழ் நகல் பெறுதல், பதிவு சான்றிதழ் திருத்தம் செய்தல், சாரதி அனுமதி புத்தகத்தை புதுப்பித்தல் மற்றும் அதனை சாரதி அனுமதி அட்டையாக மாற்றுதல் ஆகிய பணிகள் அந்தந்த பிரதேச செயலகங்களிலேயே நடைபெற்று வருவதாகவும் -

எனவே, மேற்படி பணிகளுக்காக எவரும் யாழ். செயலகத்துக்கு வந்து சிரமப்பட வேண்டியதில்லை எனவும் -

மோட்டார் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# சுகாதாரம், கல்வி, விளையாட்டுத் துறைகளில் ஐரோப்பிய பல்கலை. மாணவர்களின் உதவி

கொழும்பு,ஒக்.9

சுகாதாரம், கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள், இலங்கையின் வடபகுதியில் மேற்படி துறைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன மேற்கொண்டுள்ளார்.

சுயவிருப்பின் பேரில் இந்த மாணவர்கள் தமது சேவையை இலவசமாக வழங்க முன்வந்துள்ளனர்.

இதன் முதற்கட்டமாக ஜேர்மன் பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று கொழும்புக்கு வருகை தந்துள்ளது. இக்குழு கிளிநொச்சி மாவட்டத்தில் முதலில் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

விளையாட்டுத்துறை தொடர்பான பயிற்சிப் பட்டறை அங்கு இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து வடக்கின் பல பகுதிகளிலும் கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகளில் இக்குழு ஈடுபடவுள்ளது.

இந்த மாணவர்கள் குழு, விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து தமது நோக்கம் பற்றித் தெரிவித்தபோது, அவர் இதற்குப் பூரண சம்மதம் தெரிவித்ததாக அமைச்சர் ஜயலத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)

# பிறப்பு, இறப்பு விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கு அலுவலர்கள்

## செயலக பதிவாளர் அலுவலகத்தில் நியமிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.செயலகத்திலுள்ள விவாக, பிறப்பு, இறப்பு, காணி பதிவாளர் அலுவகத்தில் பிறப்பு சான்றிதழ்களைப் பெற வருவோருக்கு விண்ணப்பங்களை நிரப்பிக் கொடுப்பதற்கென விசேடமாக இரு அலுவலர்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்வதற்காக வரும் பொதுமக்கள் தமது விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதற்கு சிரமப்பட்டு வருவதை அடுத்தும், அத்தகையவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை செயலகத்துக்கு வெளியே இருப்பவர்களிடம் பணம் கொடுத்து நிரப்பி வருவதனாலும் அந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செயலகத்துக்கு வெளியே இருந்து விண்ணப்பப் படிவங்களை நிரப்பிக் கொடுப்பவர்கள் பண மோசடியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்களால் பல முறைகேடுகள் இடம்பெற்று வருவதாகவும் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

பொதுமக்கள் நேரடியாக பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள அலுவலர்களிடம் தமது விவரங்களைத் தெரிவித்து விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யலாம என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-ரி)

## பண்டத்தரிப்பில் பகல் நேரம் வீடு புகுந்து திருட்டு!

சண்டிலிப்பாய்,ஒக்.9

பண்டத்தரிப்பிலுள்ள வீடு ஒன்றில பட்டப்பகலில் உரிமையாளர் இல்லாத சமயம் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம் உட்பட சுமார் 75ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரித்து சென்றுள்ளனர்.

சிறுபிள்ளைகள் அணியும் நகைகள், ரொக்கப் பணம், கமெரா, இரு வானொலிப்பெட்டிகள் உட்பட மற்றும் பல பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். இத்திருட்டுச் சம்பவம் பற்றி வீட்டுக்காரர் இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-135)

# மின்மானியில் கோளாறு ஏற்படுத்தி மின் திருடிய 30 பேருக்கு தண்டம்!

தெல்லிப்பழை,ஒக்,09

மின்மானிகளில் கோளாறுகளை ஏற்படுத்தி மின்வாசிப்பைக் குறைத்துக் காட்டுவதன் மூலம் மின்சாரத்தைத் திருடிய சுமார் 30பேர் மின்சாரசபை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு அவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டதாக சுன்னாகம் மின்சார சபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்சாரசபையினால் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மானிகளில் துளையிட்டு கம்பிகளைச் செலுத்தி மின்மானி வாசிப்பைக் குறைத்துக் காட்டிய சுமார் 30பேரே மின்சாரசபை ஊழியர்களால் பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10பேர் வலிகாமத்திலும், 18பேர் வடமராட்சிப் பகுதியிலும் பிடிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடமிருந்து பழுதடைந்த மின்மானியின் பெறுமதி, மின்மானி குறைத்துக் காட்டிவந்த வாசிப்பின் சராசரி கண்டறியப்பட்டு பாவிக்கப்பட்ட மின்கூறுகளின் கட்டணம் என்பன தண்டப்பணமாக அறவிடப்பட்டதாக சுன்னாகம் மின்சார நிலைய உயரதிகாரி மேலும் தெரிவித்தார்.

அந்தந்த மாத மின்வாசிப்பிற்கு அம்மாதத்திலேயே அதற்கான கொடுப்பனவுச் சிட்டை வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

"மின்விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ள அக்றிகோ நிறுவனம் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை விநியோகிப்பதால் மின்சார சபை இதுவரை எதிர்நோக்கிவந்த உயர்ந்த உற்பத்திச்செலவு ஓரளவு குறையும். எனினும் சட்டவிரோத மின் பாவனையாளர்களால் பெருமளவு மின்விரயமும் நஷ்டமும் மின்சார சபைக்கு ஏற்பட்டுவருகிறது. ஒரு அலகு மின்னை உற்பத்தி செய்ய சுமார் 10ரூபா வரை செலவிடப்படுகிறது. ஆனால், சாதாரண மக்களுக்கு மானிய அடிப்படையில் 3ரூபா 50சதம் முதல 4ரூபா கட்டணத்திலேயே மின் விநியோகிக்கப்படுகிறது. இதனை மக்கள உணர்ந்துகொண்டு சட்டவிரோத மின் பாவனையை கட்டுப்படுத்த மின்சார சபைக்கு உதவவேண்டும்.

"இந்தச் சட்டவிரோத மின்பாவனையின்போது ஏற்படும் விபரீதங்களாலேயே மின்தடைகளும், பொதுமக்களின் மின் உபகரணங்களுக்குச் சேதமும் ஏற்படுகின்றன. இதை மக்கள் உணர்ந்துகொண்டு செயற்பட வேண்டும்" - என்றார் அவர். (ம-150)

## சின்னமுத்து தடைமருந்து வழங்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ்.மாநகராட்சி மன்றத்திற்குட்பட்ட பாடசாலைச் சிறுவர்களில் சின்னமுத்து தடைமருந்தினைப் பெறத்தவறியவர்களுக்கு தற்போது மருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதனை உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைச் சிறுவர்களுக்கு சின்னமுத்து தடை மருந்து சில தினங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டபோது சில சிறுவர்கள் அதனைப் பெறத் தவறியுள்ளனர்.

எனவே, அச்சிறுவர்கள் அனைவருக்கும் இரண்டாம் கட்டமாகவும் இறுதிக் கட்டமாகவும் தற்போது மருந்து வழங்கப்பட்டு வருவதனால் பெற்றோர் இதனைக் கவனத்தில் கொண்டு உடனடியாக தமது குழந்தைகளுக்கு மருந்தைப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.9

வலிகாமம் தென்.மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்துகொண்ட பெற்றோர்களுக்கான பரிசளிப்பு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.(ம-173)

# புலிகளின் முதல் பெண் மாவீரரான மாலதியின் நினைவு தினம் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.9

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் மற்றும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் என்பன தமிழீழப் பிரதேசமெங்கும் நாளை வெள்ளிக்கிழமை பெரும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டிலும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டாம் லெப்.மாலதி, இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த இடமான, கோப்பாயில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் கோட்ட '2ஆம் லெப்.மாலதி நினைவு நாள் ஏற்பாட்டுக்குழு' மேற்கொண்டுள்ளது. கோப்பாய் கந்தசுவாமி ஆலய முன்றிலில் மாலை 5மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

நினைவுரைகள், எழுச்சியுரைகள் போன்றவற்றுடன் கலை நிகழ்வுகளும இடம்பெற ஏற்பாடாகியுள்ளன.

இதேவேளை, 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி வலிகாமம் பிரதேசமெங்கும் நேற்று புதன்கிழமை முதல் வலம்வரத் தொடங்கியுள்ளது. மகளிர் ஏற்பாட்டுக்குழுவும், தேசிய எழுச்சிப் பேரவையும் இணைந்து ஊர்திப் பவனிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. (ம-9)

## 'இளைஞர் உருவாக்கம்' பயிற்சிப் பட்டறை

தெல்லிப்பழை,ஒக்.9

இளவாலை திருமறைக் கலாமன்றம நடத்தும் 'இளைஞர் உருவாக்கம்' செயற்றிட்டத்திற்கான பயிற்சிப் பட்டறை இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு புனித பத்திமா ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் பண்டத்தரிப்பு விளான் பகுதி இளைஞர், யுவதிகளை பங்குபற்றிப் பயன்பெறுமாறு இளவாலை திருமறைக் கலாமன்ற செயலாளர் எஸ்.சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.(ம-150)

## கடந்த மாதம் மனித உரிமை மீறல் பற்றி 22 முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.9

கடந்த மாதம் மட்டும் அடிப்படை மனிதஉரிமை மீறல் தொடர்பான 22 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களுக்கு எதிரான முறைபாடுகள் பதினெட்டும் இராணுவத்திற்கு எதிரான முறைப்பாடுகள் இரண்டும் கடற்படைக்கு எதிரான முறைப்பாடுகள் இரண்டும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி-6-86)



பண்டத்தரிப்பு சமுர்த்தி வங்கிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அப்போது யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம். யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரகுமார், சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் ச.செல்வராசா, சமுர்த்தி முகாமையாளர் என்.சுதீந்திரராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்:சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# முன்னாள் பிரதி அமைச்சரிடம் ரூ.2லட்சத்து 50,000 கொள்ளை

பொ.ஐ.முன்னனி அரசின் பிரதி அமைச்சராக இருந்த பிரியங்கர ஜயரத்னவினால் வங்கியில் வைப்பீடு செய்வதற்காக எடுத்து வரப்பட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அண்மையில் மாரவில நகரத்தில் வைத்துக் கொள்ளையிடப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஜயரத்ன, பணத்துடன் ஜீப் வண்டியொன்றில் வந்து மாரவில நகரத்திலுள்ள தனியார் வங்கியொன்றின் முன்னால் வாகனத்தை நிறுத்தியபோது வெள்ளைவான் ஒன்றில் வந்த மூன்று கொள்ளையர், அமைச்சரின் தலையில் துப்பாக்கியை வைத்துப் பயமுறுத்தி பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வாகனச் சாரதியையும், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரையும், துப்பாக்கி முனையில் பயமுறுத்தி, அவ்வாகனத்தின் பின்புற ஆசனத்தில் இருந்த பணப்பையை அவர்கள் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தான் ஜீப் வண்டியிலிருந்து இறங்கிய சமயம் தனது தலையில் துப்பாக்கிமுனை அழுத்தப்படுவதை உணர்ந்து, தன்னை கொலை செய்யப் போகிறார்கள் என நினைத்ததாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ம)

## நூலகப் புனரமைப்பு பெரும் தாமதம்

கைதடி,ஒக்.9

கைதடி பொதுநூலகத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடையாத காரணத்தினால் அப்பகுதி மாணவர்களும் பொதுமக்களும் தமது வாசிப்புத்திறனை விருத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு மேமாதம் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் நூலகம் சேதமடைந்ததை, அடுத்து 7 லட்சம் ரூபா செலவில் அது புனரமைக்கப்பட்டு வருகிறது.

ஆயினும், துரிதமாக வேலைகள் நடைபெறாமையால் மேற்படி நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-10-75)

# காத்தவராயன் கூத்து ஒலிப்பேழை வடிவில்

காத்தவராயன் கூத்தின் முழுவடிவமும் ஒலிப்பேழையாக தயாரிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் நாட்டுக்கூத்துக் கலைஞர்களை ஒன்றிணைத்து கடந்த வாரத்தில் இரண்டு முழு இரவுகளாக இந்தக்கூத்து ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

நாட்டுக்கூத்துக் கலைஞரும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு செயலாளருமான செல்லையா மெற்றாஸ்மயில் இந்தக் கூத்தை ஆவணப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார். இவர் ஒலிநாடாவடிவில் ஆவணப்படுத்திய பத்தாவது கூத்து வடிவம் இதுவென்று தெரிவிக்கப்படுகிறது.

கலாசார சபையினால் ஒழுங்கமைகப்பட்டு பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் வெளியிடப்பட்ட காத்தவராயன் கூத்து நூலின் முழு அம்சமும் இந்த ஒலிப்பேழையில் அடங்கியுள்ளன. (ம-88)

# தீவகத்தில் மூன்று நாள்களுக்கு கலாசார விழாவும் கண்காட்சியும்

மண்டைதீவு,ஒக்.8

தீவுப்பகுதி தெற்கு, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கலைவிழாவும், வாழ்வியல் கண்காட்சியும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அந்தப்பகுதி பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் உள்ள கல்யாண மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழா தொடர்ந்து மூன்று நாள்களுக்கு இடம்பெறும்.

தீவுப்பகுதி தெற்குப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார சபையும் இணைந்து நடத்தும் இந்த விழா பிரதேச செயலர் ப.லோகநாதன் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் செ.இரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க உள்ளார். (ம)

# பனம் விதைகள் நாட்டுவிழா

சண்டிலிப்பாய்,ஒக்.9

சங்கானை பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அராலி ஊரத்தி கிராமத்தில் உள்ள பனம் பண்ணையில் மூவாயிரம் பனம் விதைகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி புதன் கிழமையன்று சங்கத்தினால் வைபவ ரீதியாகப் பனம் விதைகள் நடப்படவுள்ளன என்று சங்க முகாமையாளர் த.செல்வராஜா தெரிவித்தார்.

அராலி ஊரத்தி கிராமத்தில் கடந்த ஆண்டில் சங்கம் பனம் விதைகளை நடுகை செய்த காணிக்கு பக்கத்தில உள்ள காணியில் இப்பனம் விதைகள் நடப்படும் என்றும் -

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகள் இயக்க வலி - மேற்கு பிரதேசப் பொறுப்பாளர், பொருண்மியப் பொறுப்பாளர், வலி.மேற்கு பிரதேச செயலர் உட்பட மற்றும் பலர் கலந்துகொள்ள விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-135)

# ஐ.தே. முன்னணி அரசு கவிழ நேர்ந்தால் உட்கட்சிப் பூசலே அதற்குக் காரணமாகும்

**தென்பகுதி அரசியலில் எதிர்பார்க்கப்பட்ட ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அமையவில்லை. இதற்கு முக்கியமான காரணம் சந்திரிகாவின் அரசியல் கணிப்பீடாகும். இருப்பினும், இந்த அரசு வீழ்வதாயின் அதற்கு வெளி அச்சுறுத்தல்களைவிட உள்வீட்டுப் பூசலே காரணமாக அமையும் என்கிறார் கட்டுரையாளர் உப்புல் ஜோசெப் பெர்னான்டோ. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஐ.தே. கட்சியினர் தற்போது கடும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். இந்த மகிழ்ச்சி காரணமாகவே தான் "இனிப்பயப்படத் தேவையில்லை. ஜே.வி.பியினருடன் ஸ்ரீல.சு.கட்சி செய்து கொள்ளவிருந்த கூட்டு ஒப்பந்தம் தான் இல்லையென்று ஆகிவிட்டதே'' என்ற விதத்தில் அவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இக்கூட்டு ஒப்பந்தம் குறித்து ஐ.தே.கட்சியினர் இவ்வளவு தூரம் பயப்படும்போது எதற்காகச் சந்திரிகா ஒப்பந்தத்தை மேற்கொள்ளாது அதைக்கைவிட்டார்? பிரச்சினையே அங்குதான் ஆரம்பிக்கிறது.

"இக்கூட்டு உடன்படிக்கை நிறைவேறினால் எமக்கு அது சாதகமானதே. அதனால் இந்த உடன்படிக்கை எப்படியாவது உருவாகவேண்டும்'' என்று நினைப்பவர்களும் ஐ.தே.கட்சியில் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்கள் மனதைத் திருப்திப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் சிலர் இவ்விதம் கருத்து வெளியிடுகின்றனர்.



அதேவேளை, வேறு சிலர் நமது நாட்டின் அரசியல் போக்குக் குறித்து நன்கு கணக்குப்போட்டு வைத்துள்ள காரணத்தால் அவ்விதம் தெரிவித்து வருகின்றனர்.

சரி, இந்தக் கணக்குப்போட்டு வைத்திருப்பது என்றால் என்ன என்று புரியவில்லையா?

அதைத் தெரிந்துகொள்ளுவதானால் நாம் முதலில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து அதனை ஆரம்பித்தாக வேண்டும். நாங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, இன்றைக்கும் இந்நாட்டின் அரசியல் நிலையைத் தீர்மானிப்பவர்கள் விடுதலைப் புலிகளே. போர் நிறுத்த உடன்பாட்டை முறித்துக்கொண்டு நாளை விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் யுத்தத்தில் இறங்குமானால், அரசின் கதி அதேகதிதான். அது மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சியுற நேரும்.

ஆனால், மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் அரசினால் பேச்சை ஆரம்பிக்க முடியுமானால் அரசும் தப்பிப்பிழைத்துவிடும். அத்தோடு, நாட்டின் பொருளாதாரமும் உயர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படும்.

## நெருக்கம்

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது அல்லது சமாதான முன்னெடுப்புகள் மீது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதன் மூலம் ஐ.தே.கட்சிக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையேயான நெருக்கம் வலுவடைய உதவாமல் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் ஐ.தே.கட்சிக்குமிடையே பிரிவினையை உருவாக்கக் கூடிய வகையிலான அரசியல் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க எதிரணியினர் முயலவேண்டும். ஜே.வி.பியுடன் கூட்டொன்றை உருவாக்கிக்கொண்டால் அது விடுதலைப் புலிகள் அமைப்பை மேன்மேலும் ஐ.தே.கட்சியின் பக்கம் தள்ளிச் செல்வதாக அமையும். அவ்வித சூழ்நிலை உருவானால் விடுதலைப் புலிகள் அமைப்பு நிறைவேற்றிவைக்க இயலாத கோரிக்கைகளை முன்வைத்து, அதன்மூலம் ஐ.தே.கட்சிக்குச் சங்கடத்தை ஏற்படுத்தி, மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கப் போவதில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பை ஐ.தே. கட்சியிலிருந்து ஓரங்கட்ட, ஐ.தே. கட்சி அரசை சிக்கலில் மாட்டிவிடுவதன் மூலம் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக் கும் அணுகுமுறை குறித்து விடு தலைப் புலிகள் அமைப்பு சிந்திக்கிறது. ஐ.தே.கட்சியுடனான நெருக்கத்திலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பைத் தூரவிலக்கி வைப்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. அவ்விதம் செய்யவேண்டுமாயின் பொ.ஐ.முன்னணி விடுதலைப் புலிகள் அமைப்பின் நம்பிக்கையைச் சம்பாதித்தாக வேண்டும். அவ்விதம் நிகழ முடியுமாயின், ஐ.தே.கட்சி அரசு சிரமத்துக்கு உள்ளாக நேரிடும்.

இத்தகைய நிலையை நன்றாக உணர்ந்து கொண்டதன் காரணமாகவே ஜே.வி.பியுடன் கூட்டுக்கான முயற்சியை கைவிட்டதன் மூலம் சந்திரிகா விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சமிக்ஞையொன்றை விடுத்திருப்பதாக பலர் கூறிக் கொள்கின்றனர். இக்கூட்டுக்கான உடன்படிக்கை காணப்பட்டிருப்பின், விடுதலைப் புலிகள் அமைப்பு ரணிலுடன் மட்டுமே தொடர்புகளைப் பேணவேண்டி ஏற்பட்டிருக்கும். தற்போது சந்திரிகாவும் பச்சைக் கொடி காட்டியிருக்கிறார். இச்சமாதான நடவடிக்கைகளில் ரணிலுடன் தொடர்புகளைப் பேணுவதை விட சந்திரிகாவுடன் அவ்வித தொடர்புகளைப் பேணுவது இலேசாக இருக்குமென இன்றோ நாளையோ விடுதலைப் புலிகள் அமைப்பு சிந்திக்குமானால் அது புதுமையானதொன்றல்ல. ரணில் இந்த இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டமுனையும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளின் அனுசரணைபெற்றே முயற்சிகளை மேற்கொள்கின்றார். ஆனால், சந்திரிகா அவ்வித சந்தர்ப்பமொன்று அமையுமானால் தனித்து நின்றே இத்தீர்வு முயற்சிகளை முன்னெடுக்க நேரிடும். அவருக்கு அனுசரணை வழங்கும் நாடுகளில் பெரும்பாலானவை அமெரிக்க விரோதப் போக்கைக் கொண்ட நாடுகளாகும். அந்தவகையில் விடுதலைப் புலிகள் அமைப்பும் அவ்வகை நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்ற காரணத்தால் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சந்திரிகாவுடன் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தொடர்புகளைப் பேணுவது சிறப்பான பலாபலனை அளிக்கக்கூடும்.

## கதவு திறப்பு

ஜே.வி.பியுடனான கூட்டுமுயற்சியைக் கைவிட்டதன் மூலம் ஸ்ரீல.சு. கட்சி விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கதவைத் திறந்துவைத்துள்ளது. ரணிலின் அரசைச் சந்திரிகா கவிழ்க்கும் சமயம் பார்த்து மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து சிரமத்தை ஏற்படுத்தாமல் விடுதலைப் புலிகள் அமைப்பு சந்திரிகாவுடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புமானால் அது சந்திரிகாவுக்குப் பெரும் சாதகமானதாக அமையும். அப்படியல்லாது, ஜே.வி.பியுடன் கூட்டு மேற்கொள்வதன் மூலம் ரணிலின் அரசை அகற்றிவிட்டுத் தான் புதிய அரசொன்றினை நிறுவுவதற்கு முன்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்குமானால் சந்திரிகாவால் தனது புதிய அரசை தக்கவைக்க முடியாது போய்விடும்.

அடுத்த விடயமாக சிறுபான்மை இன மக்களது நிலைப்பாடு குறித்து கணக்குப் போட்டுப் பார்த்தாகவேண்டும்.

நாளை உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமாயின் ரணிலின் ஆதரவு 33 சதவீதத்திலிருந்து ஆரம்பிக்கிறது. (33 சதவீதம் என்பது சிறுபான்மையினர் ஆதரவு)

ஆனால், சந்திரிகா பூஜ்யத்திலிருந்துதான் ஆதரவு தேடிக்கொள்ள ஆரம்பிக்க வேண்டியுள்ளது எனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான டியூகுணசேகர கூறியிருப்பது தவறான கணிப்பீடல்ல. சிறுபான்மை இன மக்களின் ஆதரவின்றி எந்தவொரு கட்சியினாலும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடையமுடியாது என்ற யதார்த்தத்தைப் பூரணமாக உணர்ந்திருப்பதன் காரணமாகவே அவர் அவ்வித கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். "அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் மொத்த வாக்குகளின் 33 சதவீதத்தை அதாவது சிறுபான்மை இனப் பொதுமக்களின் வாக்குகளைப் பெற்று வைத்துக் கொண்டே சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்டுச் செல்லவிருக்கிறார். ஆனால், ஜே.வி.பியுடன் கூட்டுச் சேரவதன் காரணமாக சிறுபான்மை இன மக்களின் சிறு ஆதரவைத்தானும் பெறஇயலாத நிலையில் சந்திரிகா வெறுமனே தனியாளாகவே சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்டுப் போகவுள்ளார் என டியூகுணசேகர யதார்த்த நிலையை எடுத்துக்கூறியிருந்தார்.

இதன்மூலம் அவர் சொல்லாமல் சொன்ன செய்தி, எல்லாவற்றுக்கும் முன்னால் ரணிலின் கையிலிருக்கும் இச்சிறுபான்மை மக்களின் வாக்குகளை - அதாவது ரணிலுக்கான சிறுபான்மை மக்களது ஆதரவை - ஒழித்துவிட வேண்டும் என்பதேயாகும்.

## சிறுபான்மையினர் வாக்குகள்

அவரது கருத்து முற்றிலும் சரியானதே. ஸ்ரீல.சு.கட்சி 1977 ஆம் ஆண்டுமுதல் 1994 ஆம் ஆண்டுவரையும் சிங்கள மக்களின் வாக்குகளால் மட்டும் தேர்தலில் வென்றுவிட முடியுமென்று எண்ணியதன் காரணமாகவே அரசு அமைக்கமுடியாது போய் எதிர்க்கட்சியாக இயங்கவேண்டியநிலை ஏற்பட்டது. ஸ்ரீல.சு.கட்சியின் இக்கொள்கையை மாற்றியமைத்தவர் சந்திரிகாவே. சந்திரிகா கட்சியின் தலைமைப்பதவி ஏற்றவேளையில் ஸ்ரீல.சு.கட்சி பிரபாகரன், தொண்டமான் மற்றும் அஷ்ரப் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்தது. ஆனால், சந்திரிகா பதவிக்கு வந்ததும், இச்சிறுபான்மை மக்களது தலைவர்களையும் இணைத்துக்கொண்டு நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்போமெனக் கூறினார். அவரது அவ்வித அறிவிப்புக் காரணமாக சிறுபான்மை இன மக்களது பேராதரவு அவருக்குக் கிட்டியது. அவ்விதம் 1994 இல் ஆண்டுப் பொதுத்தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் இச்சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவுடன் போட்டியிட்டதன் மூலம் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்ரீல.சு.கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்றார்.

**வியெஸ்ரீ**

தொண்டமான், ஹக்கீம் மற்றும் பிரபாகரன் ஆகியோர் சந்திரிகாவுக்கு வழங்கிவந்த ஆதரவைக் கைவிட்டு, ரணிலுக்கு ஆதரவு தெரிவித்ததன் காரணமாகவே 2001 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி தோல்வியடைய நேர்ந்தது.

அப்படியானால், இன்று சந்திரிகாவின் அணுகுமுறை எவ்வாறு அமையவேண்டுமென்ற கேள்வி எழுகிறது. மீண்டும் சிறுபான்மை இன மக்களின் ஆதரவைத் தேடிக்கொள்ளும் வகையில் அவர் தனது அணுகுமுறை மேற்கொண்டாக வேண்டியுள்ளது. தேர்தலில் வெற்றியடைவதற்கு மட்டுமல்ல, முதலில் ரணிலின் அரசைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கும் சிறுபான்மை இன கட்சிகளின் ஆதரவு அவருக்கு அவசியம் தேவையாயுள்ளது. ஜே.வி.பியினர் கூறிக்கொள்வதுபோல, அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் மட்டும் ரணிலின் அரசை சந்திரிகாவால் வெளியேற்றிவிட முடியுமெனக் கருதமுடியாது. ரணிலின் அரசை வெளியேற்றுவதாயின் அதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு இன்றியமையாததாகும்.

## முயற்சி முறிந்ததில் மகிழ்ச்சி

'ஜே.வி.பி.' மற்றும் 'ஸ்ரீ.ல.சு.கட்சி' ஆகியவற்றுக்கிடையேயான கூட்டு முயற்சி முறிவடைந்ததைக் கேள்விப்பட்டதும் நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்'' என தமிழ்க் கட்சியொன்றின் நாடாளுமன்ற உறுப்பினர் கூறிய கருத்து வெறும் வாயடிப்பு வார்த்தைகளல்ல. "ரணிலுடனான தொடர்புகள் அறுந்துபோகும் நிலை ஏற்பட்டால் நாம் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு வேறொரு அரசியல் தலைமை உள்ளது'' என்ற உண்மையையே அவர் அவ்வித வார்த்தைகளில் கூறாமல் கூறியுள்ளார்.

தமிழ்க் கட்சிகள் மட்டுமல்ல, முஸ்லிம் கட்சிகளும் இக்கூட்டு முயற்சிக்கு எதிரானவையேயாகும். ரணிலின் அரசைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, சந்திரிகா புதிய அரசொன்றை நிறுவுவதாயினும், அல்லது தேர்தலில் வெல்வதாயினும், அவருக்கு இச்சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவு நிச்சயம் தேவைப்படும். அரசைப் பதவியிலிருந்து அகற்றுவோம் எனக்கூறி வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யமட்டுமே ஜே.வி.பியினரால் முடியும். அவ்வாறான ஆர்ப்பாட்டங்களும் பொதுமக்கள் மத்தியில் ஆதரவைப் பெறப்போவதில்லை. இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் மூலமாக அரசை வீழ்த்தும் முயற்சியில் ஈடுபட்டமை காரணமாகவே தொடர்ந்து 17 வருடங்களாக ஸ்ரீல.சு.கட்சி எதிர்க்கட்சியாகவே இயங்கிவர வேண்டி ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா அரசியலில் இந்நாடி பிடித்துப் பார்க்கும் விடயத்தில் சர்வதேச சமூகமும் விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் சிறுபான்மை இன மக்கள் தொடர்பாக நாடிபிடித்துப் பார்க்கும் அணுகுமுறையை கடைப்பிடித்து வருவதாகத் தெரிகிறது.

ரணிலின் அரசை அகற்றி, புதிய அரசொன்றினைச் சந்திரிகா உருவாக்கினாலும், சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி அரசை நடத்திச் செல்ல இயலாது. உலகத்தில் எந்தவொரு அரசும் இன்று உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் அனுசரணையின்றி இயங்குவது சிரமமானது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பன முற்று முழுதாக சர்வதேச சமூகம் என்ற பெயரால் குறிப்பிடப்படும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளிலேயே தங்கியுள்ளன.

## கொள்கை வேறுபாடு

ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றுக்கிடையேயான இக்கூட்டைச் சர்வதேச சமூகம் விரும்பவில்லை. சீனா உட்பட்ட பல சோசலிஷ நாடுகள்கூட இன்று சந்தைப் பொருளாதாரக் கொள்கை மற்றும் தனியார் மயப்படுத்தல் கொள்கை ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஜே.வி.பியினர் அத்திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றமையே இதற்கான காரணமாகும். ஜே.வி.பியுடன் இணைவதன் மூலம் முன்னர் சந்தைப் பொருளாதாரக் கொள்கை மற்றும் தனியார் மயப்படுத்தும் கொள்கை ஆகியவற்றை ஏற்றுக் கொண்டிருந்த ஸ்ரீல.சு.கட்சி மட்டுமன்றி, முழுநாடும் பழைய பாதைக்குத் திரும்பிவிடுமென சர்வதேச சமூகம் எண்ணுகிறது. இச்சர்வதேச சமூகம் ஆரம்பத்தில் ஜே.வி.பி. பற்றி இவ்வித கருத்தினைக் கொண்டிருக்கவில்லை. ஜே.வி.பியினருக்கு இந்நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான நோக்கு இருந்ததாகவே சர்வதேச சமூகம் ஆரம்பத்தில் கருதி வந்தது. இதன் காரணமாகவே அவை ஜே.வி.பியினர் தொடர்பாக விசேட கவனம் செலுத்திவந்தன. ஆனால், காலப்போக்கில் ஜே.வி.பி. தெருச் சண்டை முனைப்புடனான அரசியல் ரீதியில் செயற்படுவதாக சர்வதேச சமூகம் கண்டுகொண்டது. ஜே.வி.பியினர் கூறுபவை நடைமுறைச் சாத்தியமற்றவை என்பது தெளிவாகப் புரிந்தது. ஜே.வி.பியினர் தமது தெருச் சண்டை முனைப்புடனான அரசியல் அணுகுமுறை மூலம் நாட்டையும், நாட்டின் பொருளாதாரத்தையும் நாசமாக்கி விடுவார்களென்ற எண்ணம் சர்வதேச சமூகத்துக்கு ஏற்பட்டது.

ஜே.வி.பி. முன்னர் போலன்றி, தற்போது சந்தைப் பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொள்வதாகச் சர்வதேச சமூகத்தை நம்பவைப்பதற்காகச் ஸ்ரீல.சு.கட்சி கடந்த சில காலமாகப் பல முயற்சிகள் மேற்கொண்டு வந்தபோதிலும், அவ்வித நம்பிக்கையைச் சர்வதேச சமூகத்திடம் உருவாக்க ஸ்ரீல.சு. கட்சியால் முடியவில்லை.

## குற்றச்சாட்டு

இதன் தொடர்ச்சியாகவே ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதன் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுத்து, அதன் பலனாக நாட்டையும், ஏன் ஆசியப் பிராந்தியத்தையும் அழிவுக்கு உள்ளாக்கப் போகிறீர்களென்ற சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டை ஸ்ரீல.சு.கட்சி எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. "முடிந்தவரை சமாதானத்தை உருவாக்க முயலுங்கள். விடுதலைப் புலிகள் அமைப்பு அதற்கு ஒத்துழைக்காதுவிடின் கடைசி வழியாக நீங்கள் யுத்தத்தைத் தேர்ந்தெடுத்தால் அந்தச் சமயத்தில் நாம் உதவத் தயாராயுள்ளோம். ஆனால், இச்சமாதான முயற்சிகளை அரசாக முன்னின்று முறித்துக் கொள்ளுமானால் யுத்தத்துக்காகவோ, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவோ நாம் ஒரு சல்லிக்காசு கூடத்தரப்போவதில்லை''

மேற்கண்டவாறு சர்வதேச சமூகம் அரசுக்கு கண்டிப்புடன் கூறிவரும் அதேவேளை, ஜே.வி.பி. இதற்கு எதிரான விதத்தில் கருத்து வெளியிட்டு வருகிறது. அதுமட்டுமன்றி இச்சமாதான முயற்சிகளில் நோர்வே தரப்பின் பங்களிப்பை நிறுத்தி விடுமாறும் கோரிவருகின்றது. ஆனால், நோர்வேத் தரப்பை இச்சமாதான



முயற்சிகளிலிருந்து நீக்கிவிட நேர்ந்தால் அதுவே இச்சமாதான முயற்சிகளின் முடிவாக அமைந்துவிடும். இது குறித்து சர்வதேச சமூகம் நன்கறியும். ஸ்ரீலங்காவின் சமாதான நடவடிக்கைகளில் நோர்வேத் தரப்பின் பங்களிப்பு அவசியமானதென்பதைச் சர்வதேச சமூகம் மிகவும் வற்புறுத்தி வருகின்றது.

இந்தநிலையில், சமாதான நடவடிக்கைகளிலிருந்து நோர்வே தரப்பின் பங்களிப்பை விலக்கிக் கொள்வதைத்தான் ஆதரிக்க முடியாதெனக் கூறி, ஜே.வி.பியுடன் கூட்டு உருவாக்குவதைக் கைவிடுவதற்குச் சந்திரிகா தீர்மானித்தமை நோர்வேயினதும், சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் முனைப்பிலேயே ஆகும். அவர் ரணிலினது அரசைக் கலைத்துவிடுவதாயினும் அதற்கும் சர்வதேச சமூகத்தின் உடனபாடு அவசியமாகும். இதன்படி நோக்கினால், சந்திரிகா ஜே.வி.பியுடனான இக்கூட்டு முயற்சியைக் கைவிட்டமை மூலம் சர்வதேச சமூகத்துக்கு சமிக்ஞை காட்டியுள்ளார்.

## உலகின் நிலைப்பாடு

அரசுகள் மாற நேர்ந்தாலும் ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படவேண்டுமென்பதே இச்சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாடு நடைமுறைப்படுத்தப்படவேண்டுமானால், தன்னாலும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்றும், அரச அதிகாரம் கைமாறும் வேளை விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான பாதிப்பை ஏற்படுத்தும் எவ்வித நடவடிக்கையையும் தான் மேற்கொள்ளப்போவதில்லை எனவும் சந்திரிகா சர்வதேச சமூகத்துக்கு உறுதியளித்தாக வேண்டியுள்ளது. தற்போது ஜே.வி.பியுடனான இக்கூட்டு முயற்சியைக் கைவிட்டதன் மூலம் அவர் சர்வதேச சமூகத்துக்கான வாக்குறுதியை வழங்கத் தயாராகிறார்.

எவ்வாறானபோதும் அரசமைப்பு ரீதியிலான நிறைவேற்று அதிகார பலமுமின்றி, ரணிலின் உயிர் ஊசலாடுகிறதுஎன்றால் அதற்குக் காரணம் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பே ஆகும். அந்த ஆதரவை இழக்க நேர்ந்தால் அதுவே ரணிலின் அரசின் வீழ்ச்சியாக அமையும்.

## வர்த்தக சமூகம்

ஸ்ரீலங்கா அரசியலில் நாடிபிடித்துப்பார்க்கும் முயற்சியில் வர்த்தக சமூகத்தைப் புறந்தள்ளிவிடமுடியாது.

(10ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும்
இலவச கண் சிகிச்சை முகாமும்
பொது மருத்துவ முகாமும்

காலம்: - 12.10.2003 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை
இடம்:- கலைமணி சனசமூக நிலையம், வியாபாரிமூலை.

அன்று M.S.பெர்னாண்டோ நிறுவனத்தினரால் கண்பரிசோதனை செய்யப்பட்டு,

கலாநிதி சபா.கனகசூரியர் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கண்ணாடிகள் வழங்கப்படும்.

அத்துடன், பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கும் வைத்திய கலாநிதி சி.கதிரைவேற்பிள்ளை அவர்களின் தலைமையில் டாக்டர்களினால் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்படும்.

கண் பரிசோதனைசெய்து கண்ணாடிபெற விரும்பும் வசதியற்றோர் முன்பதிவுகள் செய்யுமிடம்:

திரு.R.கோபிகிருஷ்ணா,
தலைவர்,
கலைமணி சனசமூக நிலையம், வியாபாரிமூலை.
11-10-2003 - வரை பதிவுசெய்யலாம்.

லயன். ந.தங்கராசா
கழகச் செயலாளர்.

(C/30593) (24-18-19)


# சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி பவளவிழா நாளைமுதல் 3 தினங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பவளவிழா நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 தினங்கள் யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நாளைய முதல்நாள் நிகழ்வுகள் மேற்படி கல்லூரியின் அதிபர் வைத்திய கலாநிதி திருமதி கமலலோஜினி பரமசிவம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொண்டு அங்கு நடைபெறவுள்ள கண்காட்சியையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாகப் பேராசிரியர் சு.பவானி, டாக்டர் வேலும்மயிலும் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக வண.பிதா டேமியன் அடிகளாரும் கலந்துகொள்ளவர்.

இறுதிநாள் நிகழ்வுகள் தெல்லிப்பழை பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ"ம் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, முன்னாள் விரிவுரையாளர் கே.சிவசுப்பிரமணியம், வைத்தியகலாநிதி பூ.உ.ரோமகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூன்றுநாள் நிகழ்வுகளின்போது பட்டமளிப்பு விழா, நூல் வெளியீடு மற்றும் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ம-10)




UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA
POST OF CHIEF SECURITY OFFICER

Reference to the above advertisement.

Closing date for applications has been extended up to 2003.10.31.

REGISTRAR
*University of Jaffna,*
*Jaffna,*
2003.10.07 (C/30599) (25-24-1819)



இரு நாள்கள் யாழ். நகரில்!

யாழ். குடாநாட்டுப் பெண்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!!
அழகுக் கலையை அழகுறக்கற்று அழகு பார்ப்பதற்கு
உங்களுக்கு இதோ மீண்டும் ஒரு சந்தர்ப்பம்!!!

பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி பிறேமா ஜெகன்
(Diploma in Beauty Culture - India) 31A Mary's Road, Colombo-4

அவர்களினால் நடத்தப்படும் விசேட அழகுக்கலை வகுப்புகள் மீண்டும் இம்மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி தம்பர் மண்டபத்தில் காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை நடைபெறும்.

11.10.2003இல்
* Bleaching (3 Types)
* FACIAL (3 Types)
* Waxing
* Eye Brow Threading
* Saree Pleating
* Bridal Dressing (Hindu & Christian)

12.10.2003 இல்
* Facial (3 Types)
(1) Gold Facial (24kt) (2) Pearl Facial
(3) Fruit Facial
* Perming
* Straightening * Hair Colouring
* முக அழகு சிகிச்சை பற்றிய குறிப்புகள்

ஆகியவை குறிப்புகளுடன் உரிய செய்முறைப் பயிற்சிகள் மூலம் கற்பிக்கப்படும்.
குறைந்த கட்டணத்தில் நிறைந்த பயனைப் பெற்றுக்கொள்ள பதிவுகளுக்கு முந்துங்கள்!

மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்:- 0777 - 471125
அல்லது 9 ஆம் 10 ஆம் திகதிகளில் (வியாழன், வெள்ளி)
யாழ். மத்திய கல்லூரியில் நேரில் அறிந்துகொள்ளலாம்.

- ஏற்பாட்டாளர்.

(23424) (24-18-19)


# பார்வையற்றோருக்கான சுயதொழில் வாய்ப்பு பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.9

சமூக நலன்புரி அமைச்சின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிக்கும் விழிப்புலனற்றோருக்கான சுயதொழில் வாய்ப்பு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ். செயலகத்திற்கு அருகில் அமைந்துள்ள சாந்திகம் உளவளத் துணை நிலையத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சமூக நலன்புரி அமைச்சின் செயலாளர் எ.ஸ்ரீசேன கலந்துகொள்ளவுள்ளார். (ம-12)

# பனங் கள் விலை அதிகரிப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.9

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது தவறணைகளில் விற்கப்படும் கள்ளின் விலையை இம்மாதம் தொடக்கம் அதிகரித்துள்ளது. இதன்படி இதுவரை 17 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு போத்தல் பனங்கள் கடந்த முதலாம் திகதிமுதல் 20 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் கள் சீசன் குறைந்து வருவதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்த விலை அதிகரிப்பினால் கள்ளுப் பிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், முன்பு ஒருபோதும் இவ்வாறு விலை அதிகரிப்பு செய்யப்படவில்லை என்றும் கள் அருந்துவோர் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-135)

# கௌரவிப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.9

இந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து சித்தி எய்திப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் விழா நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் வ.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி சு.இராஜதுரை கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் 21 மாணவர்கள் பாராட்டுப்பெறவுள்ளார்கள். (ம-12)

* * *

வலி.வடக்கு ஓய்வூதியா நலன்புரிச் சங்கத்தின் கௌரவிப்பு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மண்டபத்தில் எம்.கே.தவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட ஓய்வூதியர் சம்மேளனத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கலந்துகொள்ளவுள்ளார். சங்கத்தின் மூத்த உறுப்பினர்களான செ. துரைரத்தினம், சி.துரைராசா ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-10-173)


# இலவச கணனி பயிற்சி நிலைய திறப்பு விழா

லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்படும் இலவச கணனிப் பயிற்சி நிலையத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இளைப்பாறிய அதிபர் அடஞ்சலிங்கம் தலைமையில் யாழ். கஸ்தூரியார் வீதி, கில்னர் லேன், இலக்கம் 64 என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ். இந்துக் கல்லூரி கணனிப் பிரிவுத் தலைவர் சி. கிருஸ்ணகுமார், பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறைத் தலைவா எஸ்.மகேசன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எஸ்.எழிலன்பன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கணனிப் பயிற்சி நிலையம் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினால் (TITA) நடத்தப்படும். (ம-10)


அமரர் மார்க்கண்டு இரத்தினசிங்கம் அவர்களுக்கு
(முன்னாள் தலைவர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை)
எமது உளமார்ந்த அஞ்சலிகள்



"நல்லாரைக் காண்பதுவும் நல்லார் சொற்கேட்பதும் நல்லாரோடு இணங்கியிருப்பதுவும் நன்று"

என்பது ஆன்றோர் அமுதமொழி அமரர் மார்க்கண்டு இரத்தினசிங்கம் அவர்களுடன் அறிமுகமாகி பழகும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கப் பெற்றது ஒரு நற்பயனாகும்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு" - 336 என்ற இக்குறட்பாவை மெய்யாக்கிவிட்டார். தன்னலம் கருதாத இலைமறைகாயாக வாழ்ந்த சமூக தீபத்தின் திடீர் மறைவு அவரை அறிந்தவர்களுடைய இதயத்தைப் பெரிதும் நெகிழச்செய்துவிட்டது என்றால் மிகையாகாது. அமலனின் சித்தத்தை யார் அறிவார்? காலன் யாரைத்தான் விட்டுவைத்தான்?

பொதுச்சேவையே வாழ்வாய் எண்ணி காலமெல்லாம் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய போற்றுதற்குரிய ஒரு சேவையாளன் திடீரென மறைந்துவிட்டார்.

இல்லற வாழ்வைத் துறந்து தனிமனிதனாக கண்ணியத்துடனும் கடமையுணர்வுடனும் அரச சேவையில் பலமட்டங்களிலும் பணியாற்றி அனைவரது பாராட்டையும் பெற்று, தனது சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து இளைப்பாறிய பின்னரும் சேவைமனப்பான்மையில் தொடர்ந்து தொண்டாற்ற விரும்பி புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளை ஏற்று, பொறுப்புக்களைச் சுமந்து ஓய்வின்றிச் செயற்பட்டார்.

யுத்தத்தினால் சேதமுற்று, சீரழிந்து நிர்வாகம் செயலிழந்து பாழடைந்த நிலையிலிருந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை அவரது கவனத்தை ஈர்த்தது. நலன்விரும்பிகள் சிலரையும் அணிதிரட்டி பணிப்பாளர் சபையை மீளமைத்து வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கான செயற்பாடுகளில் தீவிரமாகச் செயற்பட்டார்.

ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் தலைமைப்பீடத்துடன் மதிநுட்பமான முறையில் தொடர்புகளை ஏற்படுத்தி மூளாய் வைத்தியசாலையின் புனரமைப்புக்கான அவசியத்தையும், தேவையையும் நியாயப்படுத்தி அவர்கள் மூலமாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம், நெதர்லாந்து தூதரகம் ஆகியவற்றிடமிருந்து பெருமளவு நிதியுதவியையும் ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியையும் பெற்று வைத்தியசாலையின் பெரும்பகுதியைத் தனது மேற்பார்வையிலும், கண்காணிப்பிலும் புனரமைப்புச் செய்வித்தார். பணிப்பாளர்கள் சபையின் தலைமைப் பதவியை ஏற்று புனரமைக்கப்பட்ட வைத்தியசாலையை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் செல்வி லிண்டா டன்பீல்ட் அவர்களை வரவழைத்து கோலாகலமாக ஆரம்பித்து வைத்தார்.

கிரமமாக வைத்திய நிபுணர்களையும், ஏனைய மருத்துவ சேவையாளர்களையும் மூளாய் வைத்தியசாலைக்கு வரவழைத்து அப்பகுதி மக்கள் சுலபமாகவும், வீண்செலவுகளின்றியும் மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகுத்துக் கொடுத்தார்.

தொடர்ந்தும் நவீன உபகரணங்களையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், மிகுதியாகவுள்ள கட்டடங்களையும் புனரமைப்பதற்கும் ஜீ.ரி.இசற் நிறுவனத்துடனும், பல வெளிநாட்டு நலன்புரி அமைப்புக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி செயற்பட்டுக் கொண்டிருந்தார். இம்முயற்சிகள் பலனளித்து ஒரு தொகுதி பொருள்கள் அமெரிக்காவிலிருந்து கப்பல் மூலம் அனுப்பப்படுவதற்கும் அவற்றை கொழும்புத்துறைமுகத்தில் பொறுப்பேற்று மூளாய் வைத்தியசாலைக்கு எடுத்துவந்து ஒப்படைப்பதற்கு ஜீ.ரி.இசற் நிறுவனம் மூலம் வேண்டிய ஒழுங்குகளையும் பூர்த்திசெய்திருந்தார்.

இப்படி பல தரப்பட்ட சேவைகளையும் தனி ஒருவராக எந்தப் பிரதி பலனையும் எதிர்பார்க்காமல் அவர் செய்து கொண்டிருந்தவேளையில் திடீரென மறைந்துவிட்டார். அவரது செயலாற்றலிலும் முகாமைத்துவப் பணியிலும் முழுநம்பிக்கையுடன் புனரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய ஜீ.ரி. இசற். நிறுவன பணியாளர்கள் அவரது திடீர் மறைவினால் அதிர்ச்சியும் பெரும் கவலையும் அடைந்துள்ளார்கள்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானவன் மலரடி சென்ற அவரது ஆன்மா சாந்தியடைவதாக.

அமரர் மார்க்கண்டு இரத்தினசிங்கம் சமுதாயத்திலிருந்து எடுத்ததைவிடக் கொடுத்தவை அளவிறந்தன. பணிக்கு இலக்கணமாக வாழ்ந்த பெருமகனாரின் பேரிழப்பையிட்டு நன்றிப் பெருக்குடன் நினைவுகூரும் பொழுது உள்ளம் உருகி, கண்ணீர் சொரிகிறோம். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும், அதன் எழுச்சிக்கும், உயர்ச்சிக்கும் எம்நாட்டின் இருள்நிறைந்த சூழ்நிலையில் தம் உயிரைப் பணயமாக வைத்து இறுதமூச்சுவரை பெரிதும் பாடுபட்ட பெருமகனாரின் பணியைக் காலமெல்லாம் நினைவுகூர வழிவகுத்துள்ளார். பணிகள் மடிவதில்லை என்பது தக்க சான்றாகும்.

(C/30598) (26-24-19-18).

G.T.Z. நிறுவன பணியாளர்கள்.

# ரகசியம் பேணும் கடிதத்துக்கு உலகில் மாற்றீடு இல்லை!

இன்று உலக தபால்தினம் கொண்டாடப்படுகின்றது. ஒருவருடைய மனதை ஒருவர் அறியும் அற்புதமான சேவை தபால் சேவை. உலக மக்களின் நாளாந்த வாழ்க்கையில் தபால் சேவை இன்றியமையாத ஓர் அங்கமாகிவிட்டது. அஞ்சல் சேவையானது இரகசியத்தைப் பாதுகாப்பும் ஒரு தொடர்பாடல் முறையாகும். அதுமட்டுமல்ல அஞ்சல் குறைந்த செலவில் எல்லா மக்களையும் சென்றடைகின்




றது. அஞ்சல் சேவையானது சாதி, மதம், அந்தஸ்து எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு சீரான முறையில் செயற்படுகின்றது. ஏழை என்பதற்காக ஒருவருடைய தபால் சேவை மறுக்கப்படுவதில்லை.

அகில தேச அஞ்சல் தினம் எப்படி தோன்றியது? வடஜேர்மனியில் தபால் நிர்வாகத்தில் உயர் பதவி வகித்த ஹென்றிச்வோன் ஸ்டீபன் (Henrich von Stephen) என்பவர்தான உலக அஞ்சல் ஒன்றியம் என்ற கருத்துக்கு வித்திட்டவராவார்.


1874 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி பேர்ன் நகரில் அஞ்சல் பற்றி ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இதில் 22 நாடுகள் பங்கு பற்றின. அஞ்சல் விடயங்கள் சம்பந்தமாக உலக நாடுகளிடையே பொது உடன்பாடு உருவானது. அதன்படி ஒக்ரோபர் 9 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அகில அஞ்சல் சங்கத்தில் காங்கிரஸ் - அதி உயர் அதிகார சபை (Congress), நிர்வாக சபை (தெரிவு செய்யப்பட்ட 40 உறுப்பினர்களைக் கொண்ட சபை), அஞ்சல் நடைமுறைகள் சபை (35 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபை 5 வருடம் செயற்படும்). ஆகிய அங்கங்கள் உண்டு. இவை யாவும் நிர்வாகத்தைச் சீரபட நடைமுறைப்படுத்தப்பயன்படுகின்றன. சங்கத்தின் சின்னத்தைப் பிரான்ஸ் தேசத்து சிற்பியான றெனோ டி சென்ற் மாகியா (Reno DeSaint Marceau) தயாரித்தார். அவரால் கருங்கற்கள், பித்தளை ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட சிலை 1909 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி பேர்க் நகரில் திறந்து வைக்கப்பட்டது. அந்த சிலையில் உள்ள ஐந்து தூதுவர்களும் (பெண்கள்) ஐந்து கண்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அவர்கள் பூகோளத்தைச் சுற்றி கடிதங்களைப் பரிமாறுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. இதுவே சங்கத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை.

1874 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 189 நாடுகள் இச்சங்கத்தில் உறுப்புரிமை கொண்டுள்ளன. நமது நாடு 1877 இல் உறுப்புரிமை பெற்றுக கொண்டது. சர்வதேச தபால் அமைப்பு உலக தபால் தினத்தை முன்னிட்டு உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் தபாலை விருத்திசெய்து தபாலின் உரிய பிரயோசனத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இன்றைய பூகோளமயமாக்கல், தொடர்பாடல் முன்மாற்றம், தொழில் நுட்பம் காரணமாக துரிதமாக தகவல் பரிமாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. உலகம் சுருங்கிவிட்டது. ஆனால், உணர்வுகள் விரிந்துவிட்டன. எவ்வளவு நவீன வசதிகள் வந்துவிட்டாலும் தபாலுக்கு மாற்றீடு இல்லை. மக்களின் மகிழ்ச்சிக்காகவே தபாற்சேவை என்ற கோடபாடு என்றும், எங்கும், எதிலும் முதன்மையாக நிற்கின்றது.

ஒட்டிய கவரில் வரும் உள்ளத்து உணர்வுகளை இனிய இன்பநினைவுகளை அசைபோட்டு மீட்பதில் தான் எத்தனை இன்பம்? இதுவே தபாலின் மகத்துவம். வாரத்தில் ஆறு நாள்களும் ஓர் அஞ்சலர் சேவை செய்கின்றார். ஒரு கடிதம் இருந்தால் கூட ஒரு வீதிக்கு அவர் செல்ல வேண்டும். அஞ்சலரைக் காணாதவர்கள் கிராமத்திலோ, நகரத்திலோ



இருக்கமுடியாது. ஓர் அஞ்சலரின் பணி புனிதப் பணி.

எத்தனையோ ஆயிரம் மைல்களுக கப்பால் இருக்கின்ற அன்பு மகளின் இன்பக் கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தாய்க்கு தபால் சேவகரின் பிரசன்னம் எத்தனை ஆனந்தத்தை அளிக்கும் என்பதனை நினைத்துப்பார்க்க வேண்டும். ஒரு தபால்காரனின் மணியோசை அல்லது விசி

**சம்பந்தர் சிவராஜசிங்கம்**
*மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் யாழ்ப்பாணம்.*

லோசை மக்களுக்கு பழகிவிட்ட அற்புதமான உணர்வோசையாகவும் உயிரோசையாகவும் இருப்பது ஆச்சரியமான ஒன்றல்லவே.

தபாலுக்காக காத்திருக்காத கண்கள் உண்டா? நியமனக் கடிதங்கள், வங்கிக் கடிதங்கள், அன்புக் கடிதங்கள், சமயக் கடிதங்கள், பிரசுரங்கள் என பல வகைக் கடிதங்களும், அஞ்சல் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்றது. இன்று யாழ் குடாநாட்டில் - 30தபாலகங்களும், 167 உப தபாலகங்களும் 14 முகவர் தபாலகங்களும் இயங்கி அளப்பரிய சேவையாற்றுகின்றன. நாளாந்தம் வவுனியாவில் இருந்து தபால்கள் வருகின்றன. தபால் திணைக்களம் தங்களாலான சிறந்த உயரிய சேவையை இன்று யாழ். குடாநாட்டு மக்களுக்கு வழங்குகின்றது என்பது வெளிப்படை.

இன்று வரை கடிதத்தின் தேவை குறையவில்லை. சர்வதேச விற்பன்னர்களின் கணிப்பின்படி ஒவ்வோர் ஆண்டும் 2% கடிதசேவை கூடிக்கொண்டே போகின்றது. இது ஒரு சாதனை மட்டுமல்ல உள்ளங்களின் உணர்வுப் பரிமாற்றத்தில் கடிதம் எத்துணை பங்கு வகிக்கின்றது என்பதற்கு அசையாத அச்சாணி போன்ற சான்று.

உலகம் விரியலாம், உணர்வுகள் விரியலாம், தொழில் நுட்பம் உயரலாம், விஞ்ஞான விந்தைகள் அதிசயத்தை ஏற்படுத்தலாம் ஆனால், மிக மலிவான விலையில் கிடைக்கும் ஒட்டப்பட்ட இரகசியம் பேணும் கடிதத்திற்கு மாற்றீடு இல்லை. இதுவே யதார்த்தம்.

அஞ்சலின் அருமையை உணர்வதற்கு அஞ்சல் தினம் சகலருக்கும் உதவட்டும் தொழில் நுட்ப சவால்களை வெற்றிகண்டு வீரியத்துடன் நடைபோடுகின்றது தபால். அதனால தபால் மக்களின் உணர்வாகவும், உயிராகவும் இருப்பதில் விந்தையேதும் இல்லை.

❋

# உலகைப் பிணைக்கும் அஞ்சல் சேவை......

## இன்று சர்வதேச அஞ்சல் தினம்

சர்வதேச அஞ்சல் தினம் என்பதன் அர்த்தம் என்ன?

சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இத்தினத்தில் இரண்டு விடயங்கள் கொண்டாடப்படுகின்றன. இதில் ஒன்று சர்வதேச அஞ்சல் ஒன்றியம் ஸ்தாபிக்கப்பட்டு 129 வருடங்கள் நிறைவுறுதலும் சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தினை நினைவு கூரும் பொருட்டு பிரகடனப்படுத்தப்பட்ட 34 ஆவது உலக அஞ்சல் தின கொண்டாட்டமுமாகும்.

**சர்வதேச அஞ்சல் சங்கம்**

ஆஸ்திரியா, ஹங்கேரி, பெல்ஜியம், டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி, பெரிய பிரித்தானியா, கிறீஸ், இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, நோர்வே, போர்த்துக்கல், ருமேனியா, ரஷ்யா, சோபியா, ஸ்பெயின், சுவீடன், சுவிற்சர்லாந்து, துருக்கி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய இருபத்திரெண்டு நாடுகள் 1874 ஆம் வருடம் ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதி கையெழுத்




திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பயனாக 'பொது அஞ்சல் ஒன்றியம்' என்ற பெயருடன் உருவாக்கம் பெற்று 1878 ஆம் ஆண்டு 'பாரீஸ்' நகரத்தில் நடைபெற்ற மாநாட்டில் 'சர்வதேச அஞ்சல் ஒன்றியம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. எனவே, சர்வதேச அஞ்சல் சங்கத்தின் 129 ஆவது ஆண்டு நிறைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

**உலக அஞ்சல் தினம்**

1938 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதிய புவனர்ஸ் அயர்ஸ் நகரில் இடம்பெற்ற மாநாட்டில் ஒவ்வொரு வருடமும் ஒன்பதாம் திகதி உலக அஞ்சல் தினமாகக் கொண்டாடப்படல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்பு 1969 இல் நடைபெற்ற டோக்கியோ மாநாட்டில் இத்தீர்மானம் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென மீண்டும் தீர்மானிக்கப்பட்டு முதலாவது உலக அஞ்சல் தினம் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதற்கிணங்க இன்று அதன் 33 ஆவது கொண்டாட்ட தினமுமாகும்.


ஒன்றியம் அமைக்கப்பட்டதற்கான நோக்கத்திற்கு இணங்க உறுப்பு நாடுகள் அனைத்தும் அஞ்சற் பொருள்களை பரஸ்பர நம்பிக்கையுடன் கையாளுவதன் பொருட்டு சர்வதேசங்களும் ஓர் அஞ்சல் வலயமாகக் கருதப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தத்துவமானது உலகளாவிய ரீதியில் சுதந்திரமான அஞ்சற் போக்குவரத்திற்கு வழி சமைப்பதுடன், ஓர் அஞ்சல் நிர்வாகத்தினால் இன்னோர் அஞ்சல் நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் அஞ்சற் பொருள்கள் இடைநிலை அஞ்சல் நிர்வாகத்தினால் பொறுப்புடன் கையாளப்படுகின்றமையை உறுதிப்படுத்துகின்றது. சேவையினை இயக்குவதற்குத் தேவையான மற்றைய அடிப்படைத் தத்துவமானது அஞ்சற் பொருள்களின் நியம நிறை விகிதத்திற்கேற்ப அஞ்சற்கட்டணத்தினை நிர்ணயம் செய்தல் - அதாவது, குறிப்பிட்ட ஓர் அஞ்சல் நிர்வாகம் (நாடு) இன்னோர் அஞ்சல் நிர்வாகத்திற்கு (வேறொரு நாட்டிற்கு) அனுப்பும் அஞ்சற் பொருள்களின் நிறைக்கும், அந்நாட்டில் இருந்து முதல் குறிப்பிட்ட நாட்டுக்கு அனுப்பப்படும் அஞ்சல் பொருள்களின் நிறைக்கும் உள்ள வித்தியாசம் கணகிடப்பட்டு கூடுதலான அஞ்சற் பொருள்களை அனுப்பிய நாடு, மற்றைய நாட்டிற்கு ஒன்றியத்தினால் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கிணங்க நஷ்டஈட்டுத் தொகையினை வழங்கவேண்டும்.

பொதுச்சபை, நிறைவேற்றுச்சபை, அஞ்சற்கல்விக்கான ஆலோசனைச் சபை, சர்வதேச பணியகம் ஆகியன ஒன்றியத்தின் முக்கியபகுதிகள் ஆகும். ஒன்றியத்தின் ஆரம்பத்தில் இருந்து மத்திய அலுவலகம் "சர்வதேச பணியகம்" என்ற பெயரில் பேர்ன் நகரில் இயங்கிவருகின்றது. சர்வதேச அஞ்சல் ஒன்றிய சர்வதேச அஞ்சல் சேவை தொடர்பான ஒருங்கிணைப்பு, வெளியீடுகள், பிரசுரம் என்பன இதன முக்கிய பணிகளாகும்.

ஒன்றியமானது ஐ.நா.சபையுடன் 1947 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க 01.07.1948 தொடக்கம் ஐநாவின் விசேட அந்தஸ்துடன் கூடிய உறுப்பினர் வரிசையில் உள்ளது. இருபத்திரெண்டு நாடுகளின் உறுப்புரிமையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியமானது இன்று 189 நாடுகளின் உறுப்புரிமையைக் கொண்டுள்ளது. இலங்கை குடியேற்ற ஆட்சிமுறையின கீழ் 01.04.1877 இலும் பின்னர் 13.07.49 இல் சுதந்திர நாடாகவும் ஒன்றியத்தில் இணைந்துள்ளது.

**அம்பலவாணர் துரைசிங்கம்.**
*அஞ்சல் அதிபர், வல்வெட்டித்துறை*

இலங்கையில் புராதன காலத்தில் அரசர்களிடையே தூதுவர் மூலம் செய்திப்பரிமாற்றங்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டபோதும் போர்த்துக்கேயர் ஆட்சியிலும் (1517-1640) ஒல்லாந்தர் ஆட்சியிலும் (1640-1794). ஆங்கிலேயர் ஆட்சியின் போதும், 1815 வரைஅஞ்சல் சேவை நடைபெற்றதற்கான பதிவுக் குறிப்புகள் கிடைக்கக் கூடியதாக இல்லை. 1815 இல் முதன் முதலாக ஆறு அஞ்சல் அலுவலகங்கள் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்பபாணம் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. 1872.08.22 இல் முதன் முதலில் அஞ்சல் அட்டை அறிமுகமானது. 1893.02.01 இல் முதலாவது அஞ்சல் முத்திரை இலங்கை நாணயத்தில் வெளியிடப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில அஞ்சல் முத்திரையினை உலகிற்கு அறிமுகம் செய்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சேர் ஹோலண்ட் ஹில் அவர்களை நினைவு கூர்வது சாலப் பொருத்தமானதாகும். இவர் 1795 இல் இங்கிலாந்தில் பிறந்தார். 1833 வரை ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரது அயராமுயற்சியினால் உலகின் முதலாவது அஞ்சல் முத்திரை 06.05.1840இல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. "பென்னிபிளாக்" என அழைக்கப்பட்ட இம்முத்திரை விக்டோரியா மகாராணியின் உருவப்படத்தினையும் 'POSTAGE' 'ONE PENNY' என்ற பதங்களையும் மட்டுமே கொண்டிருந்தது. அது உலகின் முதல் முத்திரை என்ற காரணத்தினால் வெளியிடும் நாட்டின் பெயர் குறிப்பிடப்படவில்லை. அஞ்சல் முத்திரையினை அறிமுகம் செய்தமைக்காக இவருக்கு 1860 இல் சேர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் இன்றும் இவரது பெயர் உலகம் பூராகவும் நினைவு கூரப்படுகின்றது.


சேர் ஹோலண்ட் ஹில்

★

# ஐ.தே.மு.அரசு....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாட்டின் வர்த்தக சமூகத்துக்கு ஸ்ரீ.ல.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டு கைக்கின்ற பாகற்காய் போன்றதாகும். அவர்களது வர்த்தக நிறுவனங்களூடாக பரந்த வகையில் நாடு தழுவிய ரீதியில் ஜே.வி.பியினர் சார்பான தொழிற்சங்கங்கள் ஒழுங்கு செய்யும் தொடர்வேலை நிறுத்தங்கள் காரணமாக ஜே.வி.பி. மீது இவ்வர்த்தக சமூகத்தினர் கடும் காட்டம் கொண்டுள்ளனர். முன்னொரு காலகட்டத்தில் தமது கூட்டங்களில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளுமாறு ஜே.வி.பி. தலைவர்களை அழைக்கும் அளவுக்கு இவ்வியாபார சமூகத்தினர் ஜே.வி.பியினரின் அரசியல் நடவடிக்கைகளால் கவரப்பட்டிருந்தனர். ஆனால், தமக்கு ஆதரவான தொழிற்சங்கங்களூடாக வர்த்தக நிறுவனங்கள் மத்தியில் வேலை நிறுத்தங்களை ஒழுங்கமைத்து, நாட்டின் வர்த்தகத்துறைக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் அரசியல் அணுகுமுறையை ஜே.வி.பி. கைக்கொள்வதை வர்த்தக சமூகம் அறிந்துகொண்டதன் பின்னர் ஜே.வி.பியினர் இருக்கும் திசையைப் பார்ப்பதையே வர்த்தக சமூகம் வெறுக்கிறது. இன்று ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான இக்கூட்டு ஒப்பந்தம் உருவாகிவிட்டால் தாம் சிறைப்படுத்தப்பட்டவர்கள் போலாகிவிடக்கூடுமென வர்த்தக சமூகம் அஞ்சுகிறது.

இதனால், வர்த்தக சமூகம் இவ்விரு கட்சிகளுக்குமிடையேயான கூட்டு உடன்பாட்டை வெறுக்கின்றது. இவ்வர்த்தக சமூகத்தின் நிதி உதவியின்றி சந்திரிகாவால் தேர்தல் செலவுகளை மேற்கொள்ளமுடியாது. இன்று ஸ்ரீ.ல.சு.கட்சி ஐந்து நட்சத்திர அந்தஸ்துள்ள ஹோட்டல்களில் வர்த்தக சமூகத்தினருக்கு விருந்தளித்துக் கௌரவிப்பதற்குக் காரணம் கட்சியை நடத்திச்செல்ல நிதி சேகரிக்கும் நோக்கத்திலேயே ஆகும். 1994 ஆம் ஆண்டில் தென்மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றதும் சந்திரிகா முதலில் செய்த விடயம் வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்து நன்றி செலுத்தியமையேயாகும். கூட்டுமுன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட சோஷலிச பொருளாதாரக் கொள்கை காரணமாக சிறிமாவோ பண்டார நாயக்காவின் தலைமைத்துவம் குறித்து நம்பிக்கையீனம் கொண்டிருந்த வர்த்தக சமூகம் சந்திரிகா மீது கடும் நம்பிக்கை வைத்திருந்தது. அவ்விதம் வர்த்தக சமூகம் அதரவளிக்காது போயிருந்தால் 1994 பொதுத் தேர்தலின் செலவுக்கு ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு நிதிவளம் கிடைத்திருக்கமாட்டாது.

இதுவே யதார்த்தம், இந்த யதார்த்தத்தினின்றும் எவராலும் விலகிச்செல்ல இயலாது. ஆளும் அரசு விலக்கப்பட்டால் அல்லது புதியதொரு அரசு உருவாக்கப்பட்டால் அல்லது இவை எதுவுமின்றி, புதிதாகப் பொதுத் தேர்தலொன்று இடம்பெற்றால், யாவரும் இந்த யதார்த்தத்தை எதிர்கொண்டேயாக வேண்டும். இந்த யதார்த்தம் குறித்து நன்றாக விளங்கிக் கொண்டமையினாலேயே சந்திரிகா ஜே.வி.பியுடனான கூட்டுமுயற்சியைக் கைவிடத்தீர்மானித்தார்.

இதுவே உண்மை நிலை. இந்த உண்மையை புரிந்துகொள்ள முடிந்தால் ஐ.தே.கட்சியினர் மகிழ்ச்சியடைய வேண்டியதில்லை. ஏனெனில், ஜே.வி.பியுடன் ஸ்ரீ.ல.சு. கட்சி கூட்டுச் சேர்ந்தால் சந்திரிகாவினால் ஐ.தே. கட்சி அரசுக்கு வெளியிலிருந்து உருவாகும் அச்சுறுத்தல் அதிகமாகும். ஆனால், இவ்விரு கட்சிகளிடையேயும் கூட்டு ஒப்பந்தம் உருவாவது தடைப்பட்டமையால் தனிமையாக வரும் சந்திரிகாவினால் ஐ.தே.கட்சியின் உட்பூசல் அதிகரிக்கும். வெளியிலிருந்து உருவாகும் அச்சுறுத்தல்களைவிட, கட்சிக்குள்ளேயே உருவாகும் அச்சுறுத்தல்கள் குறித்தே ஐ.தே.கட்சி அரசு அச்சமடையவேண்டியது அவசியமாகும்.

இன்றைய நிலையில் அரசு கவிழுமாயின் அதற்குக் காரணமாக அமையப் போவது இந்த உள்வீட்டு அச்சுறுத்தலே ஆகும். *

## கருணையோடு நோக்குவீர்
## அறிவித்தல்

கடந்த 02.10.2003இல் யாழ்.போதனா வைத்தியசாலையில் எனது டயறி, தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, எம்பளோயி காட் ஆகியன தவறிவிட்டன. இவைகளைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். என்றும் இறைவன் திருவருள் கிட்டுவதாக.

**சிவத்திரு.வ.குமாரசாமிஐயா**
*ஜெற்மோட்டோர்ஸ் வீதி,*
*மயிலணி, சுன்னாகம்.* (23418)(27-18-19)


## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, முட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்-குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சி-30455) (25-18-19)


## லங்கா சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரி பவள விழா
## வாழ்த்துச் செய்தி

இலங்கையிலேயே முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் Dr.வஸ்தியாம் பிள்ளை அவர்களால் 1925 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி தொடர்ந்து அதே இடத்தில் இயங்கி வருகின்றது. பலவிதமான எதிர்ப்புகள், பொருளாதார கஷ்டத்தின் மத்தியிலும் இக்கல்லூரி பல சித்த வைத்தியர்களை உருவாக்கி வருகின்றது. நாட்டின் பல பாகங்களிலும் D.A.M. பட்டதாரிகள் தங்கள் தனித்துவ சித்த வைத்தியத்தின் மூலமும் அரச சேவையிலும் கடமையாற்றி வருவதன் மூலமும் தற்பொழுதும் பலவித நோய்களுக்கு சிகிச்சை அளித்து பூரணமாக குணப்படுத்தி வருவதனால் மக்கள் மத்தியில் பெருமதிப்புடன் இருப்பது யாவரும் அறிந்ததே.

இம்மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை பவள விழா கொண்டாடுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இது சிறப்பாக இயங்க தரமான பல சித்த வைத்தியர்களை உருவாக்க இறைவன் அருள்புரிய வேண்டும் என எமது சங்கம் சார்பாக மனமார வேண்டுகின்றோம்.

மேற்படி பவளவிழாவிற்கு D.A.M. பட்டதாரிகள் ஏனைய பல வைத்தியர்கள், முக்கிய பிரமுகர்கள், நலன் விரும்பிகள், பொது மக்கள் பலரும் கலந்து சிறப்பிக்கும்படி எமது சங்கம் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

Dr.S.J.சிங்கஅரியரத்தினம்
செயலாளர்.

Dr. செ.பரமசிவம்பிள்ளை
தலைவர்.

அகில இலங்கை ஏ.எம்.பட்டதாரிகள் வைத்திய சங்கம்,
யாழ்ப்பாணம். (23432) (25-18-19)

## கடனுதவி

தெல்லிப்பழை,ஒக்.9

யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள பால் பொருள் உற்பத்தி நிலையத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பால் பதனிடுதல் தொழிலுக்காக 67 ஆயிரத்து 500 ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பால் உற்பத்தி நிலையத்தில் யோகற், ஐஸ்கிறீம், தயிர் போன்ற பாற்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. தற்போது பாலைப் பதனிட்டு பால்மா உற்பத்தி செய்வதற்கான முயற்சிக்காகவே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

(ம-150)


தற்போது மானிப்பாயிலும்

WESTERN UNION MONEY TRANSFER

நீங்கள் பணப்பரிமாற்றம் செய்ய வேண்டுமா?
உடனே விஜயம் செய்யுங்கள்

**தினேஸ் வெதுப்பகம்**

180, யாழ்.சாலை, மானிப்பாய்.

◆ உலகளாவிய ரீதியில் துரித பணப்பரிமாற்றல் வசதிகளை மேற்கொள்வதற்கு யாழ் மக்களுக்கு சிறந்த வழிகளை அறிமுகப்படுத்துகின்றோம்.

◆ உலகின் எந்த நாட்டிலிருந்தும் அனுப்பப்படும் பணத்தை [illegible] விரைவாக எமக்கூடாக நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

தினேஸ்

☎ 222 2570, 222 3297 [illegible] (27-18-19)

தினேஸ்


உ

சித்தன்கேணி

ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்

## "தனுவோடைப்பதி சிவகீதங்கள்"
## ஒலிப்பேழை வெளியீடு

(கேதார கௌரி விரதப்பாடல்கள்)

**காலம்:** இன்று (09.10.2003) வியாழன் பி.ப. 2 மணி
**இடம்:** தேவஸ்தான மண்டபம்
**தலைமை:** சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்

**இசையமைத்துப் பாடியவர்:** "இசைக்கலா வித்தகர்"
சிவஸ்ரீ சோம.உமாரமணக்குருக்கள்

**ஆசிகள்:** சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வரவை நாடும்:
பிரம்மஸ்ரீ ஞான.சபாரத்தினசர்மா
குடும்பத்தினர்.

(25-18-19)

விளம்பர அனுசரணை:
இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
யாழ்ப்பாணம். (23421)

பாக்கியரத்தினம் ஹாட்வெயர்ஸ் ஸ்ரோஸ்
சங்கானை
தாரன் ரேடேர்ஸ் – யாழ்ப்பாணம்.

## எமது நன்றிகள்
## இருதய சத்திர சிகிச்சை

**செல்வி தாமினி தவமோகன்**
**(மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)**

எனது மகள் கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைக்குப் பின்னர் பூரண குணமடைந்துள்ளார்.

இவருக்கு உதவிய மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்தினருக்கும். மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை, கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன், திரு. இராசவல்வன் இராசசிங்கன், திருமதி R.சுந்தரராஜ் மற்றும் உதவி செய்து ஒத்துழைத்த அன்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*இவர்களுக்கு கடவுளின் ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.*

திரு.திருமதி தவமோகன் தம்பதியினர்.
*மானிப்பாய் மேற்கு.* (23434) (25-18-19)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு

அன்னை மடியில்
10
-
06
-
1954



மண்ணின் மடியில்
21
-
09
-
2002

**அமரர் கனகரத்தினம் ஜெகதீஸ்வரன்**
திதி: 09.10.2003

*ஆயிரம் உறவுகள் இருந்தென்ன*
*ஆறுதல் சொல்ல அண்ணா இல்லையே!*

தகவல்:
*கண்ணன்,*
மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (23398) (26-18-19)

சகோதரர்:
**விக்கினேஸ்வரன்** (கண்ணன்)
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27
-
05
-
1934



மறைவு
31
-
10
-
2001

**திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி**
திதி: பூரணை 09-10-2003

அம்மா! நீ மறைந்து இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால்
நீ இல்லாத வேதனை மட்டும் ஓயவில்லை! பெற்ற அன்னை இன்றி
உன்பிள்ளைகள் வாழ்ந்திடும் வேதனை வாழ்க்கை எங்கே
உனக்குத் தெரியப் போகின்றது அம்மா?
உன் மரணம் எங்களை வாட்டி வதைக்கிறது!
தரணிதனில் தாயில்லாக்குறை நிறைவாகுமா அம்மா?
இப்போ "அம்மா அம்மா" எனக் கூப்பிட்ட குரலுக்கு
பதிலின்றிக் கொட்டும் மழையெனக் கண்ணீர் சொரிகின்றோம் அம்மா!

*உங்களை என்றும் நினைந்து நாங்கள் பிள்ளையாரையும்*
*காளியம்மாளையும் வணங்கி பிரிவுத் துயரில் வாழ்கின்றோம்.*


இ.மனோகரன்,
*50, நாவலடி லேன்,*
*யாழ்ப்பாணம்.* (23385) (26-18-19)

அன்புடன்
பிள்ளைகள்,
உறவினர்கள்.

# 'விஸ்டாவிஷன்' நிறுவனத்தில் 'டிஜிட்டல்' புகைப்பட சேவை

உயர் தொழில்நுட்பத்திலான 'டிஜிட்டல்' புகைப்படச்சேவை அண்மையில் யாழ். பலாலி வீதியிலுள்ள 'விஸ்டாவிஷன்' நிறுவனத்தில் ஆரம்பமாகியது.

'(F)புரண்டையர் டிஜிட்டல்' இயந்திரத்தின் மூலம் மிகத் துல்லியமான புகைப்படங்களை பெற்றுக்கொள்ளலாமென இச்சேவையை மங்கள விளக்




கேற்றி ஆரம்பித்து வைத்த 'ஹேஸீஸ்' நிறுவனத்தின் முகாமையாளர் செல்வரட்னம் நிமால தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 'விஸ்டாவிஷன்' நிறுவனத்தினர் தமது வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதில் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளார்கள். இங்கு எமது டிஜிட்டல் இயந்திரம் பொருத்தப்பட்டதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இதன்மூலம் யாழ்.மக்கள் பெரும் பயனைப் பெற முடியும் எனவும் கூறினார்.

இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கும் 41 டிஜிட்டல் இயந்திரங்களில் 33 இயந்திரங்கள் எமது நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 'பியூஜி புரண்டையர் டிஜிட்டல்' இயந்திரங்களாகும். 'டிஜிட்டல்' புகைப்படத் துறையில் எமது வெற்றிக்குக் காரணம் வாடிக்கையாளர்கள் 'ஹேஸீஸ்' நிறுவனத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையாகும். நாம் வழங்கும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் வெற்றிக்குக் காரணமாகும் என்று செல்வரத்தினம் நிமால் தெரிவித்தார்.

இந்த டிஜிட்டல் இயந்திரம் நவீன உலகிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். இந்த இயந்திரத்தின் மூலம் பழைய படங்களைப் புதிப்பிக்கவும், வெளிச்சம் கூடிய அல்லது குறைந்த இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை சரிசெய்து கொள்வதோடு, நெக்கடிவ் இல்லாமல் ஒரு படத்திலிருந்து மேலும் பிரதிகளை எடுக்கக்கூடியதாகவும் உள்ளது.

அத்துடன், நாள்காட்டிகள், அல்பங்கள் போன்றவற்றை அச்சிட்டுத் தயாரிக்கவும் இவ்வியந்திரம் உதவுகிறது.



வர்த்தக வங்கியின் சுன்னாகம் கிளையின் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வர்த்தக வங்கியின் ஆளுநர் எம்.ஜே.சி அமரசூரிய உரையாற்றுவதையும், அருகில் (இடமிருந்து வலமாக) வர்த்தக வங்கியின் உதவித் தலைவர் ஜே.எஸ்.பேதர், சுன்னாகம் வர்த்தக வங்கி முகாமையாளர் ஏ.ஆர்.குலேந்திரன், முகாமைத்துவப் பணிப்பாளர் அமீாத குணரத்ன, பிராந்திய முகாமையாளர் றொசான் பெரேரா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*

# மாணவருக்கு தலைமைத்துவப் பயிற்சி நடத்திய மக்கள் வங்கிக்கு பாராட்டு

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள். அவர்களுக்குரிய தலைமைத்துவ பயிற்சியை மக்கள் வங்கி மேற்கொள்வது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மாணவர்களைச் சிறந்த ஆளுமையையும் தலைமைத்துவமும் கொண்ட எதிர்காலச் சந்ததியாக உருவாக்க வேண்டும்.

யுத்தத்தின் பிடிக்குள் அகப்பட்டு பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்த எமது மாணவச் செல்வங்களின் மத்தியில் நல்ல எண்ணங்களையும், நற்பண்புகளையும் புகட்ட வேண்டும்.

இன்று எமது பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிலும், வேறு இடங்களிலும் பல விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனைத் தடுப்பதற்கு எமது மாணவர்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் ஓர் ஆரோக்கியமுள்ள நல்ல சமுதாயத்தை எம்மால் உருவாக்க முடியும்.

தற்போதுள்ள சமாதான சூழ்நிலையில் பல்வேறு நிறுவனங்கள் மாணவர்களின் ஆளுமை விருத்தியை ஏற்படுத்த பல்வேறுபட்ட செயற்றிட்டங்களையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்தி வருகின்றன.

இந்த வகையில் மக்கள் வங்கி நடத்தும் இந்தப் பட்டறையின் மூலம் மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தப்படும்.


அதன் மூலம் நற்பண்புகளையும், விழுமியங்களையும் வளர்க்கக் கூடியதாக இருக்கும். அது மட்டுமல்லாது நல்லதொரு மாணவ சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

எமது சமூகம், எமது பிரதேசம் என்பவற்றை நேரிய வழியில் வழிநடத்த வேண்டியது மாணவர் கடமையாகும். அந்த வகையில்தான் இத்தகைய பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்வில் மக்கள் வங்கிப் பிரதிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராசா மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

(ஓ-5)

# தொழில் வளம்



# வறிய, நடுத்தர மக்களுக்கு உதவும் 'ரண்சஹன' அடகு சேவைத்திட்டம்

'ரண்சஹன' அடகு சேவைத் திட்டத்தின் கீழ் கடன்பெற்றவர்கள் குறிப்பாக நடுத்தர வருமானம் உள்ளவர்கள் பயனடையும் வகையில் தேசிய




சேமிப்பு வங்கி புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி இத்திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்கள் தமது தொகையை ஒரே முறையில் அல்லாமல், படிப்படியாக திருப்பிச் செலுத்த வழி ஏற்பட்டுள்ளது.

"ரண்சஹன" அடகுச் சேவைக் கடன் திட்டத்தில் படிப்படியாக கடனை அடைக்க வழிசெய்வதன் மூலம் நடுத்தர மக்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியில் அடகுக் கடன்களை பொது மக்கள் பெற்றுக்கொள்வதற்காக 'ரண்சஹன' திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவசரப் பணத் தேவைகளால் திண்டாடும் மக்களுக்கு இத்திட்டம் வரப்பிரசாதமாக விளங்குகிறது.

இத்திட்டத்தின் அடிப்படையில் மக்கள் தாம் அடகுவைக்கும் நகையின் முழுப்பெறுமதியில் 75சதவீதத் தொகையைக் கடனாகப் பெறமுடியும். இதற்கு மிகக்குறைந்த வீதமே வட்டியாக அறவிடப்படுகிறது.

இவ்வாறு பெற்ற அடகுக் கடனை வாடிக்கையாளர்கள் படிப்படியாகச் செலுத்த இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. இதில் படிப்படியாக கடனை மீளச்செலுத்தும்போது வட்டி செலுத்தப்பட வேண்டிய தொகையும் குறைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வறிய, நடுத்தர மக்கள் தமது உடனடிப் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிவதுடன், படிப்படியாக கடன சுமையிலிருந்து மீண்டு கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.

இத்திட்டம் தற்போது யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கிளைகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-150)

# இலங்கை வங்கி அதிகாரிகளுக்கு கடன் திட்டம் பற்றிய கருத்தரங்கு

தெல்லிப்பழை,ஒக்.9

தனது கிளைகளினூடாக நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களை சிறந்த முறையில் செயற்படுத்த வழிசெய்யும் வகையில வங்கி அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டமொன்றை விரைவில் இலங்கை வங்கி நடத்த உள்ளது.

குடாநாட்டு மக்களுக்கு வீடமைப்புக்கடன், வியாபாரக்கடன், சிறு சுய தொழிற்கடன், விவசாயக்கடன் போன்றவற்றை பெருமளவில் வழங்கவும் அவற்றை பன்முகப்படுத்தி செயற்படுத்தவும் இலங்கை வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு உதவியாக தனது அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் பயிற்சிச் செயற்றிட்ட கருத்தரங்குகள் இலங்கை வங்கியின் வடமாகாண வங்கி பிராந்திய அலுவலகத்தில் எதிர்வரும் 11ஆம் 12ஆம் திகதிகளில் நடத்தப்பட உள்ளன.

இக்கருத்தரங்கை நடத்துவதற்கு இலங்கை வங்கியின் அகில இலங்கை கடன் திட்டங்களுக்கான உதவிப் பொதுமுகாமையாளர் தலைமையிலான குழுவொன்று யாழ்.வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கியின் கிளைகளில் பணியாற்றும் அதிகாரிகள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஓ-150)

# லண்டன் சமய அமைப்பின் இலவசக் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.9

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தில் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் முற்றிலும் இலவசமான கணனிப் பயிற்சி நிலையமொன்று இன்று நிறுவப்படவுள்ளது.

பிரிட்டனின் லண்டன் நகரில் உள்ள ஸ்ரீகனக துர்க்கை அம்மன் நம்பிக்கை நிதியம் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பிரதேசங்களில் வசதி குறைந்த மாணவர்களும் கணனிக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கென, மாணவர்களிடமிருந்து எந்த வகையிலும் நிதி அறவிடப்படாத வகையில் 'லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச கணனிப் பயிற்சி நிலையம்' என்ற பெயரில் கணனிப் பயிற்சி மையமொன்றை ஆரம்பிக்கிறது. இதற்கான ஒழுங்குகளையும் தொடர்ந்து நிலையத்தை நிர்வகிப்பதற்கான பொறுப்பையும் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் கல்வி கற்க விரும்பும் வசதி குறைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் மாணவர்கள் இலவசமாக கற்பதற்கு உரித்துடையவர்கள் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் எனவும் -

விண்ணப்பப் படிவங்களையும், ஏனைய விவரங்களையும் 64, கில்னர் லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் - பயிற்சி நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.




சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அண்மையில் மக்கள் வங்கி நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மங்கள விளக்கினை ஏற்றுவதையும்,

நிகழ்வின்போது மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதயர், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible]ஸ்வரன், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் ஆ[illegible]ருப்பதையும் படங்களில் காணலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1 லீற்றர் பால் கறக்கக் கூடிய சனைல் ஆடு மறிக்குட்டியுடன், ஜேர்மன் சப்பேட் டோமன் குறஸ் நாய்க் குட்டியும் (45 நாள் நிரம்பியது, பூச்சி நீக்கப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 57, கே.கே. எஸ். றோட், (கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத் தடிக்கும் இடையில்) (23442)

## வீடு விற்பனைக்கு

மத்திய கிழக்கு வீதி, றெக்கிளமேசன் குருநகரில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல. 29, மத்திய கிழக்கு வீதி, றெக்கிளமேசன், குருநகர், யாழ்ப்பாணம். (23445)

நுக்கா வீதி, யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையில் 3¼ பரப்பு கிணறு, குளியல் அறை, வான் பயிர், பயன்தருமரங்கள் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- பதேவகுமார், மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.(23254)

## தொலைபேசி விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு தொடர்பு:- கி.வைகுந்தராசன் "செல்வரகம்" மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (23446)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன்சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வரை), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23275)

## தேவை

போட்டோஸ்ரற் பிரதி செய்வதில் அனுபவமுள்ளவர்கள் (பெண்கள் மட்டும்) தேவை. 11 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் வரவும்.

*(மாநகர சபை எல்லைக்குள் உள்ளவர்கள்)*

**சன்லைற் றைக்கிளீனேர்ஸ்**

பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

(23453) (24-16-19)

## யாழ்-கொழும்பு போக்குவரத்து சேவை

தினசரி யாழ்-கொழும்பு பயணிகள் வான் சேவையும் (பயணிகள் கட்டணம் 900/=) லொறியில் பொருட்கள் அனுப்பும் சேவைகளை நேரயாகவும் தொலைபேசி மூலமும் ஒழுங்குபடுத்தலாம்

றெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்

| | |
|---|---|
| கொடிகாமம் வீதி, நெல்லியடி<br>021-226-3500<br>0777-271478 | கொட்டாஞ்சேனை<br>கொழும்பு - 13<br>01-2478444<br>01-2478443 |

## லைசன்ஸ் இன்றி 80 ஆயிரம் சாரதிகள்

சாரதி அனுமதிப்பத்திம் பெறாத சாரதிகளால் நாடு முழுவதிலும் சுமார் 80 ஆயிரம் ஓட்டோக்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகத் தெரியவருகின்றது.

தற்போது நாட்டில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் பதிவுசெய்யப்பட்ட ஓட்டோக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் -

சாரதி அனுமதிப்பத்திரங்களைச் சோதனையிடும் நடைமுறையை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப் பொலீஸார் ஆரம்பித்திருப்பதை அடுத்து முன்னைவிட அண்மைய நாள்களில் ஓட்டோ சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளதாகவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## அனுமதியின்றி சாராயம் விற்ற இருவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஒக்.9

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த இருவருக்கு தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் ஜெயந்திரன் என்பவர் 3 டிராம் சாராயம் வைத்திருந்தமைக்காகவும் இந்த இடத்தைச் சேர்ந்த தங்கராசா ஜெனிஸ்குமார் என்பவர் 4 டிராம் சாராயம் வைத்திருந்தமைக்காகவும் சாவகச்சேரி நீதிவான் அவர்களுக்குத் தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

(ஒ-117)

---

**இசை உலகமேதை மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களின் மறைவுக்கு எமது**

# கண்ணீர் அஞ்சலி



ஈழத்திரு நாட்டின் மகாவித்துவான்

**பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்**

அவர்கள் இசை உலகில் நன்கு பிரகாசித்தவர். அவர்களுடைய மறைவு ஈடுஇணை செய்யமுடியாதது.

இயல், இசை, நாடகம் என்பவற்றில் தமக்கென ஒரு முத்திரை பதித்தவர். கீர்த்தனைகள் பாடுவதிலும், இயற்றுவதிலும் தன்னிகரற்றவர். இன்று அன்னாரின் கீர்த்தனைப் பாடல்கள் உலக நாடுகள் அனைத்திலும் ஒலி நாடாக்களாக வெளிவந்துள்ளன.

முத்தமிழ் வித்தகரான ஐயா அவர்களின் மறைவினால் இசைத்தாய் கண்ணீர் வடிக்கிறாள். ஐயா அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் குருபக்தி நிறைந்த மாணவர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆத்மா சாந்திபெற துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை,*
*ஸ்ரீலங்கா.*

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி.

(சி-30603) (25-24-16-19)

---

# கண்ணீர்க் காணிக்கை



இசைப்புயல் ஓய்ந்தது!
இணுவில்பதி பெருமகன் மகாவித்துவான்

**பிரம்மஸ்ரீ என்.வீரமணி ஐயர் M.A.(U.P.)**

அவர்களது திடீர் மறைவு மிகவும் வேதனைக்குரியது. அன்னாரின் இழப்பு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். இசை நாதம் ஓய்ந்துவிட்டது.

அவரை இழந்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீரைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடைய பரராஜசேகர விநாயகரின் திருவடிகளை இறைஞ்சுகிறோம்.

**திரு.வி.கே.கானமூர்த்தி, திரு.வி.கே.பஞ்சமூர்த்தி**
*(நாதஸ்வர வித்துவான்கள்).*

*கோண்டாவில்.* (23449) (24-16-19)

---

# துயர் பகிர்கின்றோம்

எமது செயலக கலாசார பேரவையின் போஷகரும்,
எமது பிரதேசத்தின் புகழ்பூத்த கலைப் பேரறிஞருமான

*கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்*

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக கலாசார பேரவை,**
**வலி.தெற்கு, உடுவில்.**

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(23451) (24-16-19)

---

# லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

## பவள விழா அழைப்பு

| | |
|---|---|
| **10-10-2003** | வெள்ளிக்கிழமை<br>கண்காட்சி |
| **11-10-2003** | சனிக்கிழமை<br>மாணவர் ஆக்க நிகழ்வுகள் |
| **12-10-2003** | ஞாயிற்றுக்கிழமை<br>பட்டமளிப்பு விழா<br>நூல்வெளியீடு |

மூத்த மருத்துவர்கள் கௌரவிப்பு

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பவளவிழாக் குழு
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(23450) (24-16-19)

---

# முக்கிய அறிவித்தல்

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவது யாதெனில் 1996ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி (01.01.1996) லண்டனைச் சேர்ந்த வழக்கறிஞர் திருமதி பீ.சுரேஷ் அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்டு யாழ்ப்பாணம் மிருசுவில் மே/பா A.குமாரசாமி, "செல்வபவனம்" என்னும் இல்லத்தைச் சேர்ந்த திரு. அருணாசலம் இரங்கநாதன் அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ பத்திரம் இன்றிலிருந்து இத்தால் ரத்துச் செய்யப்படுகிறது. இதன் பிரகாரம் எனக்கும் மேற்படி அருணாசலம் இரங்கநாதன் என்பவருக்கும் இடையில் இனிமேல் மேற்கொள்ளப்படும் எந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளி அல்ல என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

வரைவு:
பொன் பூலோகசிங்கம்
*இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணி*
*கொக்குவில் மேற்கு ...*
*இலங்கை.*

திருமதி சிவபாதம் ஞானேஸ்வரி
**30, Albert Road,**
**New Midden Surrey,**
**KT 3 6BS,**
**United Kingdom.**

---

# கவிமாமணிக்கு கண்ணீர் அஞ்சலி



அமரர்
மஹாவித்துவான்
**என்.வீரமணிஐயர்**

*முடிசார்ந்த மன்னரும் என்றோ ஒருநாள்*
*பிடிசாம்பராவர் என்றீர்களே! இன்று இறைவன்*
*அடிசார்ந்த அன்புத் தெய்வமே! நீர் மறைந்த*
*இடிபோன்ற செய்தி எமை வாட்டுகின்றதே!*

ஆத்மா சாந்திபெற
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரை
இறைஞ்சுகின்றோம்.

அதிபரும், ஊழியர்களும்
**அண்ணா தொழிலகம்.**

*துரை வீதி,*
*இணுவில்.* (சி-30604) (24-16-19)

---

ஸாஹித்ய ஸாகரம் மஹா வித்வான்

**அமரர் ந.வீரமணிஐயர்** அவர்களுக்கு
**சர்வதேச இந்துமத குருபீடத்தின்**

# கண்ணீர் அஞ்சலி



*புகழ் பூத்த மாபெரும் கலைஞர்*
*முத்தமிழ் வித்தகர்*
*ஸாஹித்ய ஸாகரம்*
*மஹா வித்வான் முத்தமிழ்*

**வீரமணி ஐயா**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் மறைவு இசைத்தமிழ் உலகிற்கே பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் உறவினர்கள், கலைப்பிரியர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து மஹாவித்வானின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**
**(தலைவர் - இலங்கை பிராம்மண சமாஜம்)**

## சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
46, 7 ஆவது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.
T.P: 2393436,0722 - 422239, 0777 - 174714

(C30607)(27-26-16-19)

---

# JAFFNA Y.M.C.A

அங்கத்தவருக்கான உள்ளரங்க
**விளையாட்டுப் போட்டிகள்**

- ✳ Badminton
- ✳ Carrom
- ✳ Chess
- ✳ Table Tennis

விண்ணப்பப்படிவங்களை
அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி: 25.10.2003

(சி-30608) (24-12-18)

---

# ஆங்கில ஆசிரியர்கள் தேவை

வடமராட்சியிலும், யாழ். நகரிலும் சிறார்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க ஆங்கில ஆசிரியர்கள் தேவை.

✳ **ஆங்கிலத்தில் கனடிய மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும் தேவை.**

✳ **பாலர் பாடசாலை ஆசிரியர்கள்**

ஆங்கிலத்தில் பாலர் பாடசாலையை நடத்தக்கூடிய பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தேவை. அனுபவம் இல்லாவிட்டாலும் ஆங்கிலத்தில் கற்பிக்கும் திறனுடைய பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

**British Business School**
**140, Temple Rd.,**
**Jaffna.**

(23452) (24-16-19)

---

# மரண அறிவித்தல்

## சோதிடர் செல்லமுத்து துரைராசா

வட்டுக்கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சாரோ லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிடர் செல்லமுத்து துரைராசா அவர்கள் 05.10.2003 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் புஸ்பவதியின் அன்புக் கணவரும் செல்லமுத்து - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கந்தஞானி, தங்கத்துரை, செல்வமலர், சிவமலர் ஆகியோரின் அருமைத் தந்தையும் பகீரதி, ராகினி, யோகரத்தினம், நாகராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் கணேஷ், கார்த்திகா, சிந்துஜா, யாழினி, தானியா, துவாரகா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

North Case,
Surrey Crematorium.
Lower Morden Lan,
Marden, Surrey, லண்டன்.

*வட்டுக்கிழக்கு.*
*சித்தன்கேணி.*
(23448)(26-24-16-19)

தகவல்:
மு.சி.இரத்தினசிங்கம்
*(மைத்துனர் - பாப்பா).*

# 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்
09-05-1932



விண்ணுலகில்
23-08-2003

அமரர்

## மார்க்கண்டு இரத்தினசிங்கம்

(மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை)

வீறுடன் தன் கடமை நீங்கி
இளைப்பாறிய உத்தமரே!
பேறுடன், மக்கள் நலம் விரும்பி
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை தனில்
ஊருடன் சேவை புரிய எண்ணி
பாங்காய் ஏழாண்டுகள் சேவை செய்து
யாருடன் சென்றீர்? எமக்கில்லை நின்சேவை
தாங்கள் அற்றுத்தவிக்கிறோம் தலைவனே!
பணிப்பாளர்களும் பணியாளர்களும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சச்சிதானந்தம்,
சச்சியா இரும்பகம்,
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை.
(சி-30611) (24-12-18)

# DEPARTMENT OF HEALTH SERVICES
# TEACHING HOSPITAL, JAFFNA
# ROOF WORK OLD H.OO.QUARTERS

1. Chairman, Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for Roof work old H.OO. Quarters will be closed at 10.00 a.m. on 21/X/03
   Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna upto 14/X/ 03 on payment of a non-refundable fee of Rs: 250/=
2. Tenders will be opened immediately after the closing at the Office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.
3. Tender Forms will be issued only to Contractors having valid registration in Grade M7 and above in the field of Building Construction under the Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors' Association of Sri Lanka (NCCASL).
4. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box kept at the address appearing below, to receive before the closing time.
5. Tender Documents may be inspected free of charge at the Resident Engineer's Office, CECB, Teaching Hospital, Jaffna.
6. For further details please contact A.O.G.H. Jaffna.

**Dr. S. Sathurmugam**
Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital, Jaffna. (C/30608) (24-12-18)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவராசா சிவக்கொழுந்து

கவுந்தி, கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா சிவக்கொழுந்து அவர்கள் 05.10.2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் சிவராசாவின் அன்பு மனைவியும் சிவராணி (டென்மார்க்), சிவசங்கர் (டென்மார்க்), சிவதா, சிவாகர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவீந்திரராஜா, பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான கதிரவேல், நல்லதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆனந்தராசா (டென்மார்க்), அருந்தவம் (சீலைன்ஸ், கொம்பிளைக்ஸ் உரிமையாளர், உடுப்பிட்டி), சிவநந்தினி (டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும் சொர்ஜா, அன்ஜா, தனுஷன், கிருசிகா, விதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கவுந்தி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.
(சி-30610)(26-12-18)

தகவல்:
சிவராசா (கணவர்),
அருந்தவம் (மருமகன்),
(சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ்):
T.P. No. 0602 212881

## 'டிப்பர் பம்ப்' திருட்டு!

தென்மராட்சி,ஒக்.9

வளவுக்குள் விடப்பட்ட டிராக்டர் பெட்டியை உயர்த்தப் பயன்படும் டிப்பர் பம்ப் திருடர்களின் கைவரிசைக்கு இலக்கான சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மதிலால் ஏறி உட்புகுந்த திருடர்கள் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பம்பை அதன் இணைப்புகளுடன் டிராக்டரிலிருந்து கழற்றிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-10-117)

# கனரக சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்க அத்தாட்சிப் பத்திரம் தேவை

யாழ்ப்பாணம்,ஒக்.9

கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்கள் பெற விண்ணப்பிப்பவர்கள் வாகனங்கள் ஓட்ட தகுதியுடைய அத்தாட்சிப் பத்திரங்களைக் கொண்டுவருவதன் மூலமே விண்ணப்பப்படிவங்களைப் பெறமுடியும்.

இவ்வாறு யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றின் கனரக வாகனம் ஓட்டுவதற்கான சான்றிதழ் ஒன்றும் மோட்டார் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் மருத்துவச் சான்றிதழும் கொண்வரப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது யாழ்குடாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பயிற்சிக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கனரக வாகனங்களுக்கு மருத்துவச் சான்றிதழ் வழங்குவதற்கு வைத்தியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-ரி)

# ஆசியாவில் அதிகரித்து....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. இத்தகையோரின் பேச்சுத் திறன், சொற்களை வகைப்படுத்தல் மற்றும் ஒளிக் கதிர்ப்பாய்ச்சல் மூலமான சமிக்ஞை வெளிப்பாடுகள், சிறந்த முறையில் அமைந்துள்ளன. ஆனால், உச்சரிப்பிற்கு ஆதாரமாகவுள்ள 3 முக்கிய பிரிவுகள் மற்றும் மூளையின ஞாபகச்சக்தியை நீடிப்பதற்கான பிரிவுகள் என்பன, பேச்சு வெளிப்பாட்டிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக அமைந்துள்ளன. இக்காரணத்தினால், அநேகமான பிள்ளைகள் சொற்களைப் புரிந்துகொள்வதை விடவும், அவற்றை நினைவில் நிறுத்திக் கொளவதற்கு கூடிய வரையில் முயல்வதோடு, நேரத்தையும் விரயமாக்குகின்றனர். இந்நிலை பிள்ளைகள் மத்தியில் காணப்படும் வேறுபட்ட வாசிப்புப் பலவீனப் பாதிப்பாகும்.

ஒரு போதும் கேள்விப்பட்டிராத சொற்கள் சிலவற்றை பயன்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பங்களை நினைவு கூருங்கள். இதன் போது தெளிவான தீர்மானமொன்றைப் பெறுவது உங்களுக்கு இலகுவானதாக அமையும். உதாரணமாக, ஒன்பது வயதுடைய ஒரு பிள்ளையிடம் ஒரு சொல்லுக்கான எழுத்துக்களை மனனம் செய்யுமாறு கூறி ஐந்து நிமிடங்கள் கழிந்த பின்னர், அது சம்பந்தமாக வினவும் போது, அப்பிள்ளைக்கு அச்சொல்லோ, எழுத்துக்களோ சரியான முறையில் ஞாபகம் வராவிடில் அது, வாசிப்புப் குறைபாட்டிற்கான அறிகுறியாகும். இந்நிலையைப் பெற்றோர் கவனத்தில் கொள்ளவேண்டும். அத்தகைய நிலையில் தமது பிள்ளையை அந்நிலையிலிருந்து மீட்பதற்கு அவர்கள் செய்ய வேண்டியது என்ன?

உங்களது குழந்தை கல்வியை மேற்கொள்வதற்கு முன்னர், வாசிப்புப் பலவீனக் குறைபாட்டிற்கு உட்பட்டுள்ளதா என்பதை அறிவது எவ்வாறு? வழக்கமாகக் கையாளும் சில சொற்களை உச்சரிப்பதில் கஷ்டம் ஏற்பட்டால் அது இக்குறைபாட்டிற்கான நிச்சயமான அறிகுறியாகும். அதேபோன்று உங்களது குழந்தை வாசிப்பதை விடவும் நினைவில் வைத்துக்கொள்ளும் கால அளவை அதாவது, ஞாபகசக்தியையிட்டு விழிப்பாக இருக்க வேண்டும். பாலர் வகுப்புகளில் பயிற்சி முறைகளைக் கையாண்டு கற்பிக்கும் ஆசிரியர்கள், வாசிப்பதில் மாத்திரம் சிறந்த பலாபலன்களைப் பெற முடியாது என்றே கருதப்படுகிறது.

இதேபோன்று முதல் வரும் சில ஆண்டுகளில் பல்வேறு உபமுறைகளைக் கைக்கொண்டும் குழந்தையைக் கற்பதற்கு ஊக்குவிப்பதன் மூலம் இக்குறைபாட்டை நீக்கலாம். இதைக் கொண்டு வளர்ந்தோருக்கான இக்குறைபாட்டிற்குத் தகுந்த மருந்துகள் இல்லையென்று கருதக்கூடாது.

### மூளையின் மர்மங்கள்

இது சம்பந்தமாக மூளையின் மர்மங்களைக் கண்டறியும் ஆய்வுகளின முடிவுகள், வாசிப்புப் பலவீனத்தால் பாதிக்கப்பட்ட வளர்ந்தோருக்கு அவசியப்படும் போது, அவர்களது மூளையின் இடப்பாகத்திலிருந்து தேவையான சக்தியைப்பெறமுடியுமென்று நிரூபித்துள்ளன. நீங்கள் 18 வயதில் கற்றலை முடித்துக்கொள்ளும் ஒரு மாணவராயின், மொழி நிபுணத்துவம சம்பந்தமாக நிச்சயமற்ற நிலை கொண்டுள்ளவராயின் அதை நிவர்த்தி செய்து கொள்வதற்கு நவீன தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் மூலம் வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. நவீன கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் நூல்களில் உள்ளவற்றைப் பதிவுசெய்து அவற்றைச் செவிமடுப்பதன் மூலம் இக்குறைபாட்டை நிவர்த்தி எழுதுவதற்கான திறமையைப் பெறமுடியும்.

அதுமாத்திரமின்றி இப்பாதிப்பிற்குட்பட்டவர்கள் சாதாரணமானவர்களை விடவும் வாசிப்பதற்கு அதிகமான நேரத்தை செலவிட வேண்டிபேற்படலாமென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இக்குறைபாடுடைய 7ஆம் ஆண்டு மாணவர் ஒருவரின் வாசிப்புத்திறன், முதலாம் ஆண்டு மாணவரொருவரின வாசிப்புத்திறனுக்குச் சமமானதாக அமைந்திருக்கும். அதேவேளை, மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளைக் கைக்கொண்டதன் மூலம் அக்குறைபாட்டை நீக்கமுடிந்துள்ளது. உங்களது குழந்தை வாசிப்புக் குறைபாட்டைக் கொண்டிருக்குமாயின் முதலில் அதன செயற்பாடுகள் சம்பந்தமாக விழிப்புடனிருங்கள். அல்லாவிடில், குழந்தை பற்றிய, ஆசிரியரின் அறிவுரைகளுக்கு அமைய, தகுந்த மருத்துவரை நாடுவதன் மூலம் சிறந்த பிரதிபலனைப் பெறமுடியுமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 515 |
|---|---|
| திகதி | 07.10.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4245322-4261189

வெற்றி இலக்கங்கள் 04 15 26 48

லக்கினம்
சிங்கம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 2,558,050/-
வெல்லப்படவில்லை.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 3,345,700/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 352,592 | 10 | 3,525,920 |
| 2 இலக்கங்கள் | 32,382 | 20 | 647,640 |
| 1 இல + லக்கினம் | 32,028 | 30 | 960,840 |
| 2 இல + லக்கினம் | 2,972 | 100 | 297,200 |
| 3 இலக்கங்கள் | 883 | 500 | 441,500 |
| 3 இல + லக்கினம் | 73 | 5,000 | 365,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,558,050 | - |
| மொத்தம் | 420,934 | - | 6,638,100 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 6,638,100/-

தொடர் இல. 5240273க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 10ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

4256414-6-06
4248677-4-53
4250425-8-11
4252028-0-84
4253728-2-82

PHOENIX O&M

# மூன்றாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி

பாகிஸ்தான் அணியுடனான மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி டக்வோர்த் - லூயிஸ் முறையில் 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் பைஸலாபாத் நகரில் இப்போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 267 ஓட்டங்களைப் பெற்றது. யாஸிர் ஹமீட் 105 பந்து வீச்சுக்களில் 72 ஓட்டங்களைப் பெற்றார். அப்துல் ரஸாக் 38 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹேர்சல் கிப்ஸ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், கிரேம் ஸ்மித்தும் ஜக்கலிஸும் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களைப் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணி 45 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 221 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அப்போது தென்னாபிரிக்க அணி, பாகிஸ்தானின் ஓட்ட எண்ணிக்கையை கடப்பதற்கு 23 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது.

ஆட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படாததால் டக்வோர்த் - லூயிஸ் முறையில் வெற்றி தோல்வி தீர்மானிப்பதென முடிவு செய்யப்பட்டது.

45 ஓவர்களில் 208 ஓட்டங்களைப் பெற்றால் தென்னாபிரிக்காவுக்கு வெற்றி என டக்வோர்த் - லூயிஸ் கணிப்பு தெரிவித்தது. ஆனால், தென்னாபிரிக்கா 221 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

எனவே அவ்வணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றதென அறிவிக்கப்பட்டது.

மாற்றம் செய்யப்பட்ட டக்வோர்த் - லூயிஸ் கணிப்பு முறை இத்தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நேற்று முதல் தடவையாக புதிய முறையிலான கணிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஜக்கலிஸ் தெரிவானார். 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் பாகிஸ்தான் அணி 2-1 விகிதத்தில் முன்னணியில் உள்ளது.

# நிதி துஷ்பிரயோகம் குறித்து ஸ்ரீலங்கா கிரிக்கெட் விசாரணை!

1999ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக, ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் (முன்னாள் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை) நிதியை இச்சபையின் அங்கத்தவர் அல்லாத ஒருவர் பயன்படுத்தியமை தொடர்பாக விசாரணை நடத்தப்படவுள்ளது.

-இவ்வாறு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

"இது தொடர்பாக ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் கணக்காய்வாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

"ஏற்கனவே இவ்விவகாரம் தொடர்பாக கணக்குப் பரிசோதனையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

"இந்நிலையில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் திலங்க சுமதிபாலவினால் அவசரமாகக் கூட்டப்பட்ட நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில், இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது."

- இவ்வாறு 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்' விடுத்துள்ள ஊடக அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் போது இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக திலங்க சுமதிபாலவே பதவி வகித்தார்.

அப்போது நிறைவேற்றுக்குழு அங்கத்தவர்களாக இருந்த சிலர் தற்போதைய 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்' நிறைவேற்றுக்குழுவிலும் அங்கத்தவர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காந்தியின் நினைவுகளை அவமதித்தார்! ஸ்ரீபன் பிளெமிங் மீது குற்றச்சாட்டு!!

மதுபான விளம்பரமொன்றுக்கு போஸ்கொடுத்ததன் மூலம் மகாத்மா காந்தியின் நினைவுகளை அவமதித்து விட்டார் என நியூஸிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து கிரிக்கெட் அணி தற்போது குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத் நகரில் முதலாவது டெஸ்ட்போட்டியில் பங்குபற்றுகிறது. இப்போட்டிக்கு முன்னர் மதுபான விளம்பரமொன்றுக்காக புகைப்படத்திற்கு நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் 'போஸ்' கொடுத்தார்.

இதன் மூலம் மகாத்மா காந்தியின் நினைவுகளை பிளெமிங் புண்படுத்திவிட்டார் என குஜராத் மாநில அரசியல்வாதிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இந்திய தேசப்பிதாவான மகாத்மா காந்தியின் சொந்த மாநிலம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

எதிக்கட்சியான காங்கிரஸை சேர்ந்த பேச்சாளர் ஒருவர் கூறுகையில்,

இது மதுவிலக்கு அமுலிலுள்ள மாநிலம், தேசப்பிதாவான மகாத்மா காந்தி பிறந்த இடம் இது. இவ்வாறன விளம்பரங்களில் இங்கு பிளெமிங் ஈடுபட்டிருக்கக்கூடாது என்றார்.

# வலைப்பந்தாட்ட அணி இன்று கொழும்புக்கு புறப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.9

இம்மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் தேசிய மைதான விளையாட்டு விழாவில் கலந்துகொள்ளவிருக்கும் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணி வீராங்கனைகள் இன்று கொழும்புக்கு புறப்படவிருக்கின்றனர்.

இந்த அணியில் இடம்பெறும் வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

நொறின் நீரஜா றிச்சேட், பிரபா பரமேஸ்வரன், அஜந்தா சிவலிங்கம், சுகுணா சூடாமணி, மதிவதனா சுந்தரலிங்கம், ஜெஸ்ராஸ்டின் றெமின்ரா ஜோன் பீற்றர், நிஷாந்தி பாலகிருஷ்ணன், வாசுகி திருநாவுக்கரசு, சுகிதா தில்லைநாதன், எஸ்.கார்த்திகா,

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுநர் திருமதி ஏ.எவ்ஜே.ரூபசிங்கம் தலைமையில் இந்த அணியினர் இன்று கொழும்புக்கு புறப்படுகின்றனர். (ம-4)

## உதைபந்தாட்டங்கள்

தீவக கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருவாறு:-

### 14 வயதுப்பிரிவு

காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

புங்குடுதீவு மகா வித்தியாலயம் எதிர் காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம் எதிர் காரைநகர் யாழ்ரன் கல்லூரி.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி எதிர் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம்.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் எதிர் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். (ஓ-5-86)

## தொண்டுபடும் செயல்முறைப்போட்டி ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.9

சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே இன்றும் நாளையும் நடைபெறவிருந்த தொண்டுபடும் செயல்முறைப் போட்டிகள் மற்றும் மனனம், பா ஓதல் போட்டிகள் என்பன எதிர்வரும் 12ஆம் திகதி, 13ஆம் திகதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தொண்டுபடும் செயல் முறைப்போட்டிகள் எதிர்வரும் 12ஆம் திகதி யாழ் விக்டோரியாக் கல்லூரியிலும் மனனம், பா ஓதல் ஆகிய போட்டிகள் முறையே வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் எதிர்வரும் 13ஆம் திகதியும் நடைபெறும் என்று சங்கானைக்கோட்ட கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா அறிவித்துள்ளார். (ம-4)

## ஆஸி. ஸிம்பாப்வே டெஸ்ட் தொடர் ஆரம்பம்

ஆஸ்திரேலிய, ஸிம்பாவ்வே அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இவ்விரு அணிகளும் மோதவுள்ளன. முதலாவது போட்டி இன்று பேர்த் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஆஸ்திரேலிய - ஸிம்பாவ்வே அணிகள் டெஸ்ட் போட்டியொன்றில் மோதவுள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிஜ்ஸ்டர்ஸ் தொடர்ந்து முதலிடம்

மகளிர் டென்னிஸ் தரவரிசையில் பெல்ஜிய வீராங்கனை கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் தொடர்ந்தும் முதலிடம் வகிக்கிறார். புதிய தரப்படுத்தலின்படி அவர் 6,579 புள்ளிகளைப் பெற்றுள்ளார் எனினும், ஜேர்மனியில் இவ்வாரம் ஆரம்பமாகவுள்ள சுற்றுப் போட்டியிலிருந்து அவர் விலகியுள்ளார்.

இதனால், தரப்படுத்தலில் அவர் முதல் இடத்தை சக நாட்டவரான ஜஸ்ரின் ஹெனினிடம் இழந்துவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹெனின் தற்போது 6,291 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளார். அமெரிக்காவின் சேரீனா வில்லியம்ஸ் மூன்றாமிடத்தில் உள்ளார்.

# விளையாட்டு



தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு அமைச்சின் இளைஞர் விவகாரப் பிரிவும் இணைந்து அண்மையில் இளைஞர், யுவதிகளுக்கான விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்றை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தின.

இப்பயிற்சி முகாமின் ஆரம்ப வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை உரையாற்றுவதையும் அருகில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி றோகான் ராஜசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

பயிற்சி முகாமில் இளைஞர், யுவதிகள் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# குத்துச்சண்டை வீரர் முஹமது அலி குறித்து 29 கிலோ 'அதிபாரநூல்' இன்று வெளியீடு

பிரபல குத்துச்சண்டை வீரர் முஹமது அலிபற்றிய புத்தகத்தை ஜேர்மனியை சேர்ந்த புத்தக வெளியீட்டாளர் தச்சென் (வயது42) தயாரித்துள்ளார். 830 பக்கங்களைக்கொண்ட இந்தப் புத்தகத்தின் எடை 29 கிலோகிராம் ஆகும்.

'கிரேஸஸ் ஒவ் ஓல் டைம்ஸ்' என்ற தலைப்பில் இந்தப் புத்தகம் அச்சிடப்பட்டுள்ளது. புத்தகத்தில் 61வயதான முஹமது அலியின் வாழ்க்கை வரலாறும் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

முஹமது அலியின் மனைவி மற்றும் நண்பர்களைச் சந்தித்து தச்சென், முஹமது அலியின் அரிய படங்களைப் பெற்றுள்ளார். இந்தப் படங்களில் முகமது அலியின் கையெழுத்தும் உள்ளன.

அவர் வரைந்த ஓவியங்களும் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் முதல் பதிப்பாக 10,000 புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தின் விற்பனை இன்று (வியாழக்கிழமை) பிராங்போட்டில் நடைபெறுகிறது. முகமது அலி கலந்துகொண்டு முதல் பிரதியை வெளியிடுகிறார்.

முதல் 1000 புத்தகங்கள் தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா விலையில் விற்கப்படுகின்றன. மீதமுள்ள 9,000 புத்தகங்கள் தலா 3 லட்ச ரூபா விலையில் விற்கப்படுகின்றது.

தொடர்ந்து 4வருடங்களாக இந்தப் புத்தகத்தைத் தயாரிக்கும் பணியில் தச்சென் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# செய்திக் கொத்து

## இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்களால் முதியோர் தினத்தையொட்டி இரத்ததானம் செய்யப்பட்டது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி நவமலர் கனகரட்ணம் தலைமையில், இணுவில் மத்திய மருந்தகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (ஓ-10-139)

## முதியோர் கௌரவிப்பு

தென்மராட்சி,ஒக்.9

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி சாவகச்சேரி லிகோலியார் தேவாலய வின்சன்டிபோல் சபையினர் தேவாலய பங்கைச் சேர்ந்த முதியோர்களைக் கௌரவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை தேவாலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 21 முதியோர்கள் பரிசில்களும் மதிய உணவும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(ஓ-10-117)

## மின்சார விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டதையடுத்து இதுவரை மின்சாரம் வழங்கப்படாதிருந்த சிலபகுதிகளுக்கும் மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது.

கச்சாய் வீதி, நுணாவில் மற்றும் சங்கத்தானை போன்ற இடங்களுக்கே மின்சாரம் வழங்கபட்டு வருகிறது. (ஓ-10-117)

## கிராம அலுவலர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

யாழ். பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நாவாந்துறை தெற்கு (J80) கிராம அலுவலர் பிரிவிற்கு புதிய கிராம அலுவலராக க.கணேசவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலரான எச்.ஆனந்தராஜா வேறு பிரிவிற்கு இடமாற்றப்பட்டதை அடுத்தே இவர் இப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-10-12)

## நீர் என்று எண்ணி மண்ணெண்ணெய் குடித்த சிறுவன்

தென்மராட்சி,ஒக்.9

போத்தலில் இருந்த மண்ணெண்ணெயை தண்ணீர் என்று எண்ணிக் குடித்த சிறுவன் உடல் நலம் பாதிப்படைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வீரகுமார் டிதர்ஷன் (வயது 4) என்ற சிறுவனே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஓ-10)

## அதிபர்கள் மாற்றம்

தென்மராட்சி,ஒக்.9

வரணி மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய ந.நவரத்தினராசா உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபராகவும், உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியம் வரணி மகாவித்தியாலய அதிபராகவும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஓ-10-117)

## மணல் விநியோக அறிவித்தல்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் உற்சவத்தை ஒட்டி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மணல் விநியோகம் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது.

இன்று 09ஆம் திகதி வியாழக்கிழமை மணல் விநியோகத்துக்கான திகதியைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களுக்குட்பட்டவர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை மணல்பெற சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதுவரை மணல் பெறுவதற்கான அனுமதிப் பத்திரத்தை பிரதேச செயலரிடம் பெற்றுக்கொண்ட தனியார்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மணல் விநியோகத்துக்கான திகதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

*உபய கதிர்காமம்,*
*புலோலி.* (சி-30616) (31-13-14)

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு,
புனரமைப்பு நிறுவனம்.

## கண்ணீர் மழை

கலாரத்னா, கலாபூஷணம், முத்தமிழ்க் கலாநிதி,
முத்தமிழ்ச் சுரபி, மஹாவித்துவான்
**யாழ்ப்பாணம், பிரம்மஸ்ரீ ம.த.ந. வீரமணி ஐயர் (M.A.)**
(அகில இலங்கை சமாதான நீதிவான், முன்னாள் விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய், பலாலி)(அதிதி விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அவர்கள் இயற்கை எய்திய செய்தியைக் கேட்டுக் கண்ணீர் மழை கொட்டுகிறோம். அன்னார் யாழ். கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதருக்கு திருவூஞ்சல், பக்திப்பாடல்கள் ஆக்கித்தந்து ஸ்ரீ வல்லிபுரநாதரின் கருணையைப் பெற்றமையை நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அன்னாரின் குடும்பம் ஆறுதல் அடையவும் ஸ்ரீ வல்லிபுர நாதரைப் பிரார்த்திக்கின்றோம்.

*மு.கந்தையா*
*தலைவர்,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*
(23456)(13-14-17-31)

ஸ்ரீ வல்லிபுர நாத
தேவஸ்தான சபையினர்
சைவப்புலவர் ம-சிவலிங்கம்(J.P)
செயலாளர்.

## பிரிவின் துயருடன்...



ஈழத்துக் கலை வரலாற்றுக்கு
ஒரு கலங்கரை விளக்காய்
சுடர்விட்ட
"மஹாவித்துவான்"
**பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்**


அவர்களின் மறைவால் கலங்கி நிற்கின்றோம்.
அவருக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கும்
அதேவேளை அவரின் பிரிவால் துயருறும்
குடும்ப உறவுகளின் துயரத்தில் நாமும்
பங்கேற்று எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C-30613)(13-14-17-31)

இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக் கலாமன்றம்.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்
27
-
11
-
1968



வீர மரணம்
09
-
10
-
1988

### லெப்டினன்ட் சிவா
### ( கு.சிவஸ்ரீதரன்)

(முன்னாள் பொறுப்பாளர், கைதடி பிரதேசம்)
எம்மினத்தின் தேச விடுதலைக்காய்
தன்னுயிரை ஆகுதியாக்கிய
எங்கள் சிவா! உங்களைப் பிரிந்து
15 ஆண்டுகள் சென்றதையா!
இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எமைவிட்டகலாது!

*தபாலக வீதி,*
*சாவகச்சேரி.* (23458)(13-14-31)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### காசிநாதர் கனகரத்தினம்

**(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**

புத்தூர், சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் கனகரத்தினம அவர்கள் நேற்று (08.10.2003) புதன்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர் - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் செல்லம்மாவின் (அத்தை) அன்புக் கணவனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் கனகசிங்கம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரவீந்திரன் (ஆஸ்திரேலியா), வசந்தி (ஆசிரியை, கொழும்பு), சுமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வானதி (ஆஸ்திரேலியா), மோகனதாஸ் (கொழும்பு), திருஞானசம்பந்தமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, கம்சிகா, ஐஸ்வயா, சுலோசன், அனுசன், கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (23467) (31-13-14)

*பெரிய மதவடி,*
*சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.*

தகவல்:
திருமதி
க.செல்லம்மா(மனைவி).

## உதைபந்தாட்டம்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 18 வயதுப்பிரிவினர் களுக்கிடையிலான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★முத்துத் தம்பி மகாவித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.

★யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி எதிர்- உரும்பிராய் இந்துக்கல்லூரி.

★அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் கனகரட்ணம் மகா வித்தியாலயம்.

★யாழ் இந்துக்கல்லூரி எதிர் யாழ் மத்திய கல்லூரி.

★ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோ.க. பாடசாலை

இதேவேளை, 16 வயதுப்பிரிவினருக்கான கால் இறுதியாட்டங்களும் இன்று நடைபெறவுள்ளன. (ஒ-5-86)

## கிரிக்கெட்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் அமரர் ஆறுமுகம் ஞாபகார்த்தமாக நடத்தும் 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பற்றீசியன் வி.க. அணி, கே.சீ.சீ.சி. வி.க. ஏ,பி அணிகள், மானிப்பாய பரிஷ் வி.க. 'ஏ','பி' அணிகள் சென்றலைற்ஸ் சொக்ஸ் அணி, ஜொனியன்ஸ் வி.க. அணி, ஜொலிஸ்ரார் வி.க அணி மற்றும் யங்ஸ்ரார் வி.க. என்பன பங்குபற்றவுள்ளன. (ஒ-5)

## கோப்பாய் பகுதிக்கு நிதி ஒதுக்கீடு

கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பல்வேறு உதவித்திட்டங்களை முன்னெடுப்பதற்கு பன்முக வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 21 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் சனசமூக நிலையங்கள் திருத்தம், பாடசாலைகளுக்கு தளபாட விநியோகம், முன்பள்ளிக்கட்டடங்கள் திருத்தம், பாதைகள் மதகுகள் திருத்தம் உட்பட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் கே.வெங்கடாச்சலம் தெரிவித்தார். (ஒ-72)

## இடமாற்றம்

கோப்பாய் பிரதேச செயலகத்தில பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிவந்த த. நடராசா இம்மாதம் தொடக்கம் யாழ். செயலகத்தில் பிரதம எழுதுவினைஞராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு யாழ். செயலகத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய க. வேலுப்பிள்ளை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-180)

## கலைமகள் விழா

தென்மராட்சி,ஒக்.9

ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் கலைமகள் விழா அண்மையில் நா.முருகையா தலைமையில் நடைபெற்றது.

பாலசுப்பிரமணியம் கணேஸ் தலைமையில் கூட்டுப்பிரார்த்தனையும், சி.கமலாமணியின் கலைமகள் பற்றிய சொற்பொழிவும், சு.சாந்தாவின் நவராத்திரி பற்றிய கவிதையும் இடம்பெற்றன. (ஒ-117)

## வீதி நிலைமை மோசம்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கரையோர வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளதாக அப்பகுதி வாகனச் சொந்தக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பதினைந்து வருடங்களாக திருத்தப்படாத நிலையில் உள்ள இந்த வீதி வெற்றிலைக்கேணியில் படையினர் முகாமிட்டிருந்த வேளையில் கனரக வாகனப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தியதால் சேதமடைந்ததாகவும் தெரிவித்தனர். (ஒ-10-117)

## யு.என்.எச்.சி.ஆர். உதவி

மன்னார், வங்காலைப்பாடு கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தீ விபத்தில் தமது வீடுகளை முற்றாக இழந்த 32 குடும்பங்களுக்கும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் உணவு அல்லாத அத்தியாவசியப் பொருள்களை வழங்கியுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகள் மற்றும் பொது அமைப்புக்கள் என்பனவும் அவசர மனிதாபிமான உதவிகளை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கியுள்ளன. (ஒ-10)

## 12 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
10
05
1947



உதிர்வு
30
09
2003

### திருமதி பராசத்தியம்மா (திரவியம்)
### பஞ்சலிங்க குருக்கள்

**அன்பின் திருவுருவே! அமைதியின் அருள்வடிவே!**
**என்பெலாம் உருகுதே! என்செய்வோம் உனைக்காண**
**மின்னல் போல் வாழ்ந்து விரைந்து மறைந்தாயே**
**உன்னால் நாமுயர்ந்தோம்!**
**உன் நினைவே துணையானோம்!**

அமரரின் ஆத்மசாந்தி நிகழ்வு நாளை (10-10-2003) வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பிள்ளையார் கோவிலடி,*
*கெருடாவில் தெற்கு,*
*தொண்டமனாறு.* (23463)(13-14-31)

க.பஞ்சலிங்க குருக்கள்
வெள்ளை ஐயா (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் பொன்னுத்துரை

**(சிறைச்சாலை ஊழியர்)**

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாக வும் கொண்ட பொன்னம்பலம் பொன்னுத்துரை நேற்று (08.10.2003) புதன் கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் குணசீலன் (சிறைச்சாலை ஊழியர்), சத்தியசீலன் (சுவிஸ்), ரஞ்சிதமலர், தவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் பராசக்தி, சுதாயினி (சுவிஸ்), சற்குணராசா, சந்திர காந்தன் ஆகியோரின் மாமனாரும் சரஸ்வதியின் சகோதரனும் தர்சன், சுகன்யா, கஜானன், நிசங்கன், திவ்யா, டினோயா, கவிதாஞ்சி, சுவிஸைச் சேர்ந்த செளமியா, கீர்த்திகா, ஆரூரன், ஆதீசன் ஆகியோரின் பேரனா ரும் கனகரத்தினம், குணரத்தினம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 1.00 மணியளவில் உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.* (23461) (31-13-14)

தகவல்:
குடும்பத்தினர்.

### இளையதம்பி இராசையா (இராசா)

புத்தூர் கிழக்கு, வாதரவத்தையைச் சேர்ந்த இராசா என்று அழைக்கப்படும் இளையதம்பி இராசையா அவர்கள் நேற்று (08.10.2003) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - தெய்வானை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற மாணிக்கத்தினதும் மற்றும் செல்லம்மாவினதும் அன்புக் கணவரும் திருநாவுக்கரசு, இராசேஸ்வரி, பூவைபர்க்கரசி, குலதிலகராசா (பொலீஸ் அதிகாரி, வவுனியா), ஜெகதிலகராசா இலக்குணகரசி, தவதிலகராசா (ஜெர்மனி), தங்கையர்க்கரசி (வவுனியா), சவுந்திரக்கரசி, மாயதவராசா விக்கினேஸ்வரன் (பொலீஸ், நீர்கொழும்பு), இந்திரக்கரசி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் அருளம்மா அழகதுரை, காலஞ்சென்ற மகேந்திரம் சாந்தினி, விஜயகுமாரி, இரவீந்திரன் தாட்சா, சத்தியநாதன் (எழுதுவினைஞர், நகராட்சிமன்றம், வவுனியா), தவராசா, பிரியந்தி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்லத்துரை, இரத்தினம், இராசம்மா, காலஞ்சென்றவர்களான அன்னமுத்து நல்லபிள்ளை, இளையபிள்ளை, பாக்கியம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர் களான தம்பு ஆறுமுகம், தம்பு கந்தசாமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2003) வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் வாதரவத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாதரவத்தை, புத்தூர்.* (23462) (31-13-14)

தகவல்:
திருநாவுக்கரசு.(மகன்)

### திருமதி கந்தையா புவனேஸ்வரி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை புகுந்த இடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா புவனேஸ்வரி அவர்கள் 30-09-2003 லண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கந்தையாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கனகநாயகி, சற்குணநாயகி, Dr. இராஜநாயகம் மற்றும் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், மயில்வாகனம் மற்றும் சரவணமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும் உஷா (சுவிற்சலாந்து), சசிதரன் (லண்டன்), கெங்காதரன் (பூபாலசிங்கம் புத்தகசாலை), உமா (நீர்/ விஜயரத்தினம் இந்து மத்தியகல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நந்தகோபால் (சுவிற்சலாந்து), ஜெயசுதா (லண்டன்), கலைவாணி (யா/ இணுவில் மத்திய கல்லூரி), சிறீகுமார் (மஸ்கன்ஸ் லிமிட்டட், சீதுவ) ஆகியோரின் அன்பு மாமியாரும் திவியன், தினேஸ், கயூரி, டதுசன், இனோஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-10-2003) வியாழக்கிழமை கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்தட்டு மட லேன்,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (23466) (31-13-14)

தகவல்:-
கெங்காதரன்(மகன்)
(பூபாலசிங்கம் புத்தகசாலை),
உமா(மகள்-ஆசிரியை)

# பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு,ஒக்.9

2003-2004 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண் ணப்பிக்கும் காலம் இம்மாதம் 20ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடந்த மாதம் 30 ஆம் திகதியே இறுதித் திகதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த திகதி வரை விண்ணப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு தற்போது சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. தபால் மூலமே விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இதேவேளை, 2002ஆம் ஆண்டு பெறுபேறுகளுக்கமைய பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் அதனை ரத்துச் செய்துவிட்டு, 2003 ஆம் ஆண்டு பெறுபேறுகளுக்கமையப் புதிய பதிவுகளை மேற்கொள்வதற்கும் தற்போது வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பதிவுகளை ரத்துச் செய்யவுள்ளவர்கள் ஏற்கனவே பதிவு செய்த பதிவாளர்களுக்கு ஒக்ரோபர் 20ஆம் திகதிக்கு முன் தபால் மூலம் தமது புதிய பதிவுகளை அறிவிக்க வேண்டும். - இவ்வாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது. (எ-12)

## உவர்மலை நேற்று சுற்றிவளைப்பு

திருகோணமலை,ஒக்.9

திருகோணமலை, உவர்மலைப் பிரதேசம் நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர் உவர்மலைப் பகுதி பூரணமாக சுற்றிவளைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

அதிகாலை மூன்று மணியளவில் பொலீஸார் சகிதம் படையினர் அப்பகுதிகளில் குவிக்கப்பட்டனர். காலை ஐந்து மணிக்கு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாதசாரிகள் சோதனையிடப்பட்டனர். வாகனங்கள் சோதிக்கப்பட்டன. வீடுகள், கடைகள், ஹோட்டல்களும் சோதனையிடப்பட்டன. வீடுகளில் உள்ளோரின் விவரங்கள் கேட்டறியப்பட்டன. இதனால் அப்பிரதேசமெங்கும் பதற்றம் நிலவியது. (எ)

## பொறுப்பாளரின் மோ.சைக்கிள் பறிமுதல்!

விடுதலைப் புலிகளின் யாழ்.-நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரின் மோட்டார் சைக்கிள் பொலீஸாரினால் பறிமுதல்செய்யப்பட்டு பின்னர் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

நேற்று நண்பகல் அந்த மோட்டார் சைக்கிளை அரசியல்துறை அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் செலுத்திவந்த சமயம் பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்தியில் வைத்து அதனை வழி மறித்த பொலீஸார் அதன்சாவியை எடுத்து இராணுவத்தினரிடம் கையளித்தனர் என்று கூறப்படுகிறது.

பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் பற்றித் தலைமைக் காரியாலய பொலீஸ் இன்ஸ்பெக்டருடன் புலிகள் தொடர்புகொண்டதை அடுத்து மோட்டார்சைக்கிள் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. (ஐ-86)

## தலைவர் பிரபாகரனின் பணிப்பின்பேரில்
# திலீபன் மருத்துவமனைக்கு 'அம்புலன்ஸ்' கையளிப்பு!

முல்லைத்தீவு,ஒக்.9

ஒட்டுசுட்டான் மக்களின் மருத்துவ சேவைக்காக தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்பின்பேரில் 'அம்புலன்ஸ்' வண்டி ஒன்று ஒட்டுசுட்டான் தியாகி திலீபன் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11மணியளவில் ஒட்டுசுட்டான் தியாகி திலீபன் மருத்துவ மனை அபிவிருத்திக்குழுவின் தலைவர் பொ.அருமைச்சந்திரன் தலைமையில் அம்புலன்ஸ் கையளிப்பு வைபவம் இடம்பெற்றது.

அம்புலன்ஸ் வண்டியை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் மருத்துவமனை நிர்வாகிகளிடம் கையளித்தார்.

- இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் லோ.சின்னக்கிளி, முல்லை மாவட்ட அரசியல்பொறுப்பாளர் செ.முகுந்தன் உட்பட போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-12)

# வல்லிபுரத்தில் இன்று சமுத்திரத் தீர்த்தம்

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் நேற்று நடைபெற்ற தேர்த் திருவிழாவில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டு வல்லிபுரப்பெருமானை வழிபட்டனர்.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறும். எம்பெருமான் வசந்த மண்டபத்திலிருந்து எழுந்தருளி கற்கோவளந் தீர்த்தக்கரையை அடைந்து அங்கு கடலில் தீர்த்தமாடுவார். (எ-8-173)

## விடுதலைப் போராட்டத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணி ஐயர் என்றால் அபாரமான அவருடைய எல்லாத் திறன்களையும் தெரிந்திருக்கும்.

கர்நாடக சங்கீதத்தையும் பரதத்தையும் கற்றறிந்து, அதில் பரிசோதனைகள் பல செய்து, தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி பலரை வியப்படையச் செய்த சிறந்த ஓர் ஆளுமையாக வீரமணிஐயர் அவர்கள் எம்மோடிருந்தார். இவரை மெச்சிப் புகழாதார் எவருமே இல்லை. இந்தியாவின் புகழ்வாய்ந்த இசை மேதைகள் பலரும் கூட வீரமணிஐயர் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள்; மெச்சி இருக்கிறார்கள். அவர்களால் 'யாழ்ப்பாணம் வீரமணிஐயர்' என்று அன்பாகவும் மதிப்பாகவும் அழைக்கப்பட்டவர்; குறிப்பிடப்பட்டவர்.

தான் பெற்றுக்கொண்ட கலைத்திறனை எல்லாம் தன் சந்ததிக்கு அளித்துப் பெருமைகொண்ட ஒரு பெரும் இசையாளராக, கலையாளராக வீரமணி ஐயர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர். புதிய சாகித்தியங்கள் இயற்றுவதிலும், புதிய முத்திரைகளை உருவாக்குவதிலும் இறுதிவரை தீராத ஆர்வம் கொண்டவர். இந்த ஆர்வம் அவரை எப்போதும் இயங்கச் செய்யும் ஒரு தீவிர செயற்பாட்டுக் காரணமாகவே வைத்திருந்தது.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் வீரமணிஐயர் அவர்களிடம் இசையையும், பரதத்தையும் மிக விஸ்தாரமாகப் பெற்றார்கள். ஒரு பெரும் மாணவ பரம்பரையே ஐயரின் திறனால் பயன்பெற்றது.

வீரமணிஐயர் அவர்கள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும், எமது தலைமையின் மீதும் மிகுந்த மதிப்பையும் பற்றையும் கொண்டிருந்தார். அதற்கு ஒரு சான்றாக அவர் 'தமிழீழன்' என்ற பெயரிலே போராட்டத்துக்கு உத்வேகம் அளிக்கும் பொருட்டு பாடல்களையும், கவிதைகளையும், நாட்டிய நாடகங்களையும் ஆக்கி அளித்தார். எமது புலிகளின் குரல் வானொலியில் பல நிகழ்ச்சிகளைச் செய்தளித்தார். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்துடன் மிக நெருக்கமாக உறவுகொண்டு தன்னுடைய முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார். மிக நெருக்கமாகப் போராளிகளுடன் பழகுவதிலும், அன்பாக உறவாடுவதிலும், அவர்களுடைய பணிகளில் இணைந்திருப்பதிலும் பெருமையோடு தன்னை ஈடுபடுத்தியிருந்தார். இதனால் போராளிகளிடமும், எமது அமைப்பிடமும் மதிப்புப் பெற்றவராக இருந்தார்.

இத்தகைய சிறப்புக்கும், பெருமைக்கும், மதிப்பிற்குமுரிய இசை மேதையை, கலை வல்லுநரை இன்று தமிழுலகம் இழந்து நிற்கின்றது. இசைமாமணியின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு தமிழீழ கலைஞர்களோடு எமது அமைப்பின் சார்பாக எம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விடுதலைக் கனவோடும், கலைத்தாகத்தோடும் இறுதிவரை உழைத்த 'இயல் இசை வாரிதிக்கு' எமது அஞ்சலி உரித்தாகட்டும். (ஐ)

## இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த யோகேஸ்வரன் அஜந்தீப் (வயது-21) என்ற இளைஞரின் மரணம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சுதாகர், கண்ணன் (வயது-30), வி.விந்தன் (வயது-24) ஆகிய மூவரையும் யாழ். பொலீஸார் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இம்மூவரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். மூவரது வாக்குமூலங்களும் நேற்று பதிவுசெய்யப்பட்டன. (ஐ-8)

## புல்டோசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றப்பட்டு வருகின்றன.

அங்குள்ள மல்வைப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்படாத இடத்தில் மக்கள் எவ்வித நடமாட்டத்தையும் மேற்கொள்ளக்கூடாது என மனித நேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் அறிவித்திருந்தனர். எனினும், சிலர் புல்டோசர் மூலம் துப்புரவுப் பணிகளை அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும், இதனால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் சிங்களச் செய்தியாளர்களும் கலந்துகொண்டனர்.

புலனாய்வுச் செய்தியாளர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் எழுப்பிய புரளியே இந்த 13 முகாம்கள். ஆனால், அந்தச் செய்தியாளர்கள் அப்பிரதேசத்துக்குச் சென்றதே இல்லை என்பதுதான் உண்மை.

சமாதானப் பேச்சை சீர்குலைக்கும் சக்திகள், புலனாய்வுச் செய்தியாளர்கள் கிளப்பிவிடும் புரளியைப் பூதாகரமாகப் பிரசாரம் செய்கின்றன.

திருகோணமலைப் பிரதேசத்தை நன்கு அறிந்தவன் நான். குரங்குபாஞ்சான் முகாம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியின் எல்லைக்கு அப்பால் 8 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இந்த முகாமிலிருந்து 14 கிலோமீற்றர் தொலைவில் பொலீஸ் காவலரண் உள்ளது. புலிகளுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் இப்பகுதியில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. பல உயிர்களைப் பலிகொடுத்து புலிகள் இந்தப் பகுதியைக் கைப்பற்றியுள்ளனர். எந்தவொரு செய்தியாளரும் இந்தப் பகுதிக்குச் சென்றதே இல்லை.

ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்தது போன்றுதான் இந்த 13 புலிகளின் முகாம்களின் செய்தியும்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமலைக்கு விஜயம் செய்தபோது நான் அங்கு இருக்கவில்லை. அவர் சிங்கள, முஸ்லிம் மக்களின் அகதி முகாம்களுக்குச் சென்றுள்ளார். ஆனால், தமிழ் மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு அவர் செல்லவில்லை.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துள்ளார். அப்போது, இந்தியா குத்தகைக்கு பெற்ற திருமலை எண்ணெய்க் குதங்களுக்கு புலிகளால் ஆபத்து எனத் தெரிவித்துள்ளார். 1980ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் திருமலை எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது ஐ.தே. கட்சியோ அல்லது ஸ்ரீ.ல.சு. கட்சியோ எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்தியாவின் நலனைக் கருத்திற்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியே எதிர்ப்புத் தெரிவித்தது. ஏனென்றால் இந்தியா மீது நாம் என்றும் அன்பும் நட்பும் கொண்டுள்ளோம். (ஐ)

## மஹாவித்துவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைத் தலைவர் க.தேவராஜா, நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராஜா மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் உரையாற்றினர். இராமநாதன் நுண்கலைப்பீடத்தினர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியியல் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்கள், விரிவுரையாளர்கள், மாணவாகள், இந்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள், இணுவில் பகுதி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டனர்.

வீரமணிஐயர் 1931ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15ஆம் திகதி இணுவிலில் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயருக்கும் - சுந்தராம்பாளுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இணுவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்த இவர், இளமையிலேயே பல்துறை விற்பன்னராக விளங்கினார்.

தனது 22ஆவது வயதில் தமிழ்நாடு கலாஷேத்திர நடனப் பள்ளியில் சேர்ந்தார். அங்கு பரதக்கலையையும் இசைக் கலையையும் பயின்று நாடு திரும்பிய அவர், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சங்கீத ஆசிரியராகவும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நாட்டிய ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

பின்னர் பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் சுமார் 33 வருடங்கள் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இராமநாதன் நுண்கலைப்பீடம் நிறுவப்படுவதற்காக உழைத்தவர்களில் வீரமணி ஐயரும் ஒருவராவார். அங்கு பின்னர் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.

வீரமணிஐயர் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான ஆலயங்கள் மீது திருவூஞ்சல் பதிகம், கீர்த்தனைகள் என்பவற்றைப் பாடியுள்ளார். அத்துடன் இந்தியாவில் உள்ள பிரபல ஆலயங்கள் பற்றியும் பாடல்களைப் பாடியுள்ளார். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் பல எழுச்சிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். வீரமணிஐயர் எழுதிய பாடல்கள் பல இசைத்தட்டுக்களிலும் ஒலிநாடாவிலும் வெளிவந்துள்ளன.

தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியமைக்காக வீரமணி ஐயருக்கு யாழ். பல்கலைக்கழகம் 1999ஆம் ஆண்டு கௌரவ முதுகலைமாணி பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. சுமார் அரை நூற்றாண்டு காலம் இசை மற்றும் நடனக் கலையை போற்றியப் பரப்பி வாழ்ந்த வீரமணி ஐயருக்கு 'கலாரத்னா' கலாபூஷணம், முத்தமிழ்க் கலாநிதி, முத்தமிழ்ச்சுரபி, ஸாகித்ய ஸாகரம், ஆசுகவி, மதுர கவி, அருட்கலை வாரிதி, முத்தமிழ் வாரிதி, ஸாகித்ய சிரோன்மணி, இயலிசை வாரிதி என்பன உட்பட பல கௌரவ பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் மறைவை ஒட்டி பல சமூக நிறுவனங்களும், சமய அமைப்புகளும், பொது அமைப்புகளும் இரங்கல் செய்திகளை வெளியிட்டுள்ளன.(ஐ-49-88)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து நடைபெற்ற இடத்தில் பொதுமக்களும் படையினரும் திரண்டு நின்றபோதும் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை. பொலஸார் விசாரணைகளை நடத்தினர். (ஐ-8)

## குரங்குபாஞ்சான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துவரப்படவில்லை.

- இப்படி அவர் கூறினார்.

குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற சிஹல உறுமய இங்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்டபோது -

பொதுவாகவே தென்னிலங்கை அரசியல் நடவடிக்கைகளில் எமக்கு நம்பிக்கை இல்லை. சிஹல உறுமய இந்தப் பிரதேசத்துக்கு வரும் நோக்கத்தை அறிந்து அந்தக் கட்சியினரை முகாம் பகுதிக்கு அனுமதிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

- என்று திலக் கூறினார். (ஐ-12)


ITN இன் தீபாவளி மலிவு விற்பனை

09.10.2003 தொடக்கம் 24.10.2003 வரை
ITN இன் மாபெரும் மலிவு விற்பனை

★ தமிழ் புதிய, பழைய ஓடியோ CD
★ தமிழ் புதிய, பழைய வீடியோ CD
★ கர்நாடக சங்கீத CD
★ MP3 CD
★ இந்து, கிறிஸ்தவ பக்திப் பாடல்கள்
★ DVD

ACD, VCD, MP3 70 ரூபாவில் இருந்து

அனைத்தும் மாபெரும் மலிவு விலையில்!
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்!!

ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்ரர்
305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.
Note : இவ்விலைக்கழிவு தீபாவளி தினம் வரை மட்டும்.
(23464)(22-13-14)



இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
பாண்டியராஜனின்
கலாட்டா கணபதி
பிளாஷ் CD ஹவுஸ்
இல. 640, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.- 0777- 162349



எமது புதிய வீடியோ CD வெளியீடு
பாண்டியராஜனின்
கலாட்டா கணபதி
விஸ்ணு வீடியோ
கோண்டாவில்.



எமது புதிய வீடியோ CD வெளியீடு
பாண்டியராஜனின்
கலாட்டா கணபதி
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.



புதியதோர் பரிணாமம்! புதியதோர் தொழில்நுட்ப வளர்ச்சி!!
விசிற்றொக் நெற்
Net cafe with Calling Center
யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக செய்மதியூடான வேகம் மிக்க இணைப்புகளின் மூலம் வேகம் மிக்க கணனிகளுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட ரம்மியமான சூழலில் சங்கமித்துள்ளது.
வெளிநாட்டு அழைப்பு ஒரு நிமிடம் 7.50/=
Inter net Browsing 1 Hour 50/=
இரவு 10.00 - காலை 6.00 வரை ஒரு மணித்தியாலத்திற்கு 35/=
VISI TALK. NET
T.P : 2226637 1st Floor, Parameswara Junction, Thirunelvely.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.